# திருமந்திரம் சில முத்துக்கள்

## (பாகம் 2)



சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி
109, CALEDON ROAD, EASTHAM, LONDON, E6 2HD,
UNITED KINGDOM
வீரமாணிக்க தேவன் துறை, மயிலிட்டி,
யாழ்ப்பாணம், இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலய
மூலஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் சில முத்துக்கள்
## (பாகம் 2)

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி
109, CALEDON ROAD, EASTHAM, LONDON, E6 2HD,
UNITED KINGDOM
வீரமாணிக்க தேவன் துறை,
மயிலிட்டி, யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இறைபதம் அடைந்த எனது மைத்துனர்

**திரு. சோமசுந்தரம் நகுலேஸ் (நவம்)**

அவர்கள்



மூதூரில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக் காரியாலய
முகாமையாளராகக் கடமையாற்றியபோது முஸ்லீம் ஊர்காவல் படையால்
06-11-1987 இல் கொலை செய்யப்பட்ட எனது மைத்துனர்
எந்திரவியலாளர்

**திரு சோமசுந்தரம் பரமகுரு (குரு)**

**அவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | திருமந்திரம் சில முத்துக்கள் (பாகம் 2) |
| தொகுப்பாளர் | : | சைவசித்தாந்த ரத்தினம்<br>நாகேந்திரம் கருணாநிதி |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | NAGENTHIRAM-KARUNANITHY<br>109, CALEDON ROAD<br>EASTHAM<br>LONDON, E6 2HD<br>UNITED KINGDOM<br>00 44 208 552 0817, 00 44 7812784048<br>karusakthy@yahoo.co.uk<br>வீரமாணிக்க தேவன் துறை<br>மயிலிட்டி<br>யாழ்ப்பாணம்<br>இலங்கை |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு எண் | : | 05 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2020 |
| பக்க எண்ணிக்கை | : | 150 |
| பயன்படுத்திய தாள் | : | 70gsm |
| நூலின் அளவு | : | A5 |
| எழுத்தின் அளவு | : | 12 புள்ளி |
| அச்சகம் | : | குரு பிறிண்டேர்ஸ்,<br>ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,<br>யாழ்ப்பாணம். 0094 21 222 8266 |
| பாடம் | : | ஆன்மிகம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பவர்க்கு உய்வளிக்கும் திருவருள் தரு நூலாக இலங்கும்

## திருமந்திரம் சில முத்துக்கள் (பாகம் 2)



சைவசித்தாந்தரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி அவர்களின் திரு மந்திரம் குறித்த அக்கறை காரணமாக திரு மந்திரம் சில முத்துக்கள் (பாகம் 2) வெளி வந்தமை கண்டு மகிழ்ச்சி அடைகின் றேன்.

திருமந்திரத்திற்குப் பொருள் எழு துதல் என்பதில் இரண்டு பின்னணிகள் உள. ஒன்று எழுதுபவரின் முயற்சி. அடுத்தது இறை வனின் திருவருள் பொழிவு.

இந்நூலின் ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவசித் தாந்தரத்தினம் பயிற்சியை இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் ஐரோப்பிய சித்தாந்தரத்தினப் பயிற்சி மையத்தில் என்னிடத்தில் பெற்று **2013**,ல் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் **24**வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச் சாரிய சுவாமிகள் ஆதீனத்தின் வரலாற்றில் முதற்தடவையாக இலண்டனுக்கு **2**வது உலகத் திருமுறை மாநாட்டுக்கு எழுந்தருளிய பொழுது அவரின் திருக்கரத்தால் சைவசித்தாந்தரத்தினம் பட்டத் தைப் பெற்றவர்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ் வியலும் கற்கை நெறியினையும் என்னிடத்தில் பூர்த்தி செய்து ஒக்ஸ் வேர்ட் தமிழ்க்கல்வி கலைகளுக்கான மையம் ஒக்ஸ்வேர்ட் பல் கலைக்கழகத்தின் ஹேர்ட்போட் கல்லூரி மண்டபத்தில் தமிழ கத்தின் முதுமுனைவர் பேராசிரியர் மருதநாயகம் அவர்கள் தலை மையில் **2015** இல் நடாத்திய உலகத் தமிழர் தத்துவ மாநாட்டில் திருமந்திரம் பட்டயப்படிப்புச் சான்றிதழையும் இவர் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் இவரின் சைவம் குறித்த தேடல் திருவருளின் ஒரு தூண்டுதலாக அமைந்தது என்பதை நானறிவேன். குணத்திலும் சிவனடியார் ஒருவருக்கு இருக்கவேண்டிய குறிக்கோள், இறை நினைவு, தொண்டு உள்ளம் கொண்டவர் இவர் என்பதாலேயே "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனத் தான் எவ்வாறு திருமந்திரத்தை விளங்கிக் கொண்டாரோ அவ்வாறே வையத் தோருக்கு எடுத்துரைக்கும் பணியினை "திருமந்திரம் சில முத்துக்கள்" என்னும் நூற்தலைப்பு வழியாக முதற்பாகத்தை 2017 இலும் இரண்டாவது பாகத்தை 2019 இலும் நிறைவேற்றியுள்ளார்.

இந்த இரண்டாவது பாகத்தில் 32 உட்தலைப்புக்களில் திரு மந்திரம் உணர்த்தும் உண்மைகளையும், விடுக்கும் அழைப்புக் களையும் உண்மைகளை உணர்ந்து அழைப்புக்களை ஏற்கும் உயிர் உய்யும் தன்மைகளையும், பெறும் பயன்களையும் பாரம்பரிய மர பினைப் பின்பற்றி திருமந்திரங்கள் சிலவற்றுக்குப் பொருள் தந்து விளக்கமளிக்கிறார்.

எளிமையும் இனிமையுமான நடை ஆழமாகப் பார்க்காது இயல் பாகப் பார்ப்பதன் மூலம் பலருக்கும் திருமந்திரங்களின் பொருளில் இலகுவான முறையில் மேலெழுந்தவாரியான விளக்கம் பெற இந்நூல் உதவுகிறது.

புராணங்களை நம்பிக்கை மரபில் உண்மைக் கதைகளாக ஆசிரி யர் ஏற்று அதன் அடிப்படையில் விளக்கம் அளித்தல் என்பது இன் றைய உலகின் அறிவார்ந்த பார்வைக்கு எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதை ஆசிரியர் அடுத்த ஆக்கங்களில் சிந்திப்பது நல்லது.

திருமூலர், திருமந்திரம் குறித்து விரிவு பெற்றுள்ள இன்றைய கருத்துக்களையும் இணைத்து உண்மைகளைச் சிந்திப்பதற்கு வாசிப்பவர்களைப் பழக்குவது அவசியம். ஞான நூலாக இருப்ப வையும் அந்நூல் பிறந்த மொழியின் இலக்கியமாகவும் உள்ளன. எனவே மக்களின் வரலாற்றை மானிடவியலை சமுகவியலை வாழ்வியலின் உண்மைகளை ஞானநூல்கள் வழியாகவும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது பொருள் எழுதுபவர்களின் இனத்துவக் கடமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமனே நம்பிக்கை மரபில் மட்டும் உள்ளதைத் திரும்பவும் திரும்பவும் விளக்குவது என்ற நிலை மாறி உள்ளதுக்குள் மறைந்து கிடக்கும் எம் இனத்தின் தொன்மையைத் தான்மையை வெளிக் கொணர்ந்து எம்மைச் சிதைக்கும் சாதி தீட்டு துடக்கு என்ற முச் சனிகளை எம்மினத்தை விட்டு நீக்குவதற்குத் திருமந்திரமே மிகச் சிறந்த கருவியாக உள்ளது என்பதை ஆசிரியர் எதிர்காலத்தில் கவனத்தில் எடுத்தல் நல்லது.

அதனைச் செய்யும் பொழுதே இந்நூல் சமர்ப்பணம் செய்யப் பட்டுள்ள ஆன்மாவுக்கும் உண்மையான வீரவணக்கத்தைச் செய்யும் நிறைவும் ஏற்படும். ஆசிரியரின் இனப்பற்றும் மொழிப்பற்றும் தாயகப் பற்றும் வாழ்வியல் அனுபவங்களும் அவருடைய எதிர்கால எழுத்துக்களில் உண்மைகளை வெளிக்கொணரும் ஆற்றல்களை வழங்கும் என்பது உறுதி.

பல சிறப்புகள் உள்ள இந்நூலைப் படிப்பவர்களுக்கு அவரவர் உண்மை அறிவுக்கு ஏற்ப திருவருள் அவர்களுக்கான உய்வினை அளிக்கவும், இன்னும் பல நூல்களை ஆசிரியர் படைத்து தமிழுக்கும் தமிழர்க்கும் இறையருள் பெருகச் செய்யவும் அவனரு ளாலே அவன் தாள்பணிந்து, ஆசிரியர்க்கும் அவரின் பணிகளுக்கும் ஆசிகூறுகின்றேன்.

**சு.யோ. பற்றிமாகரன்**
திருமுறைகள் மற்றும்
சைவசித்தாந்த ஆசிரியர்
26.07.2020



பஞ்ச (ஐந்து) ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் – மன்னார்
மேற்கு இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hindu Cultural Centre**

Trustees: Mr T Sanmugarajah FCCA, Dr J Saravanamuthu, Miss A Seevaratnam M Sc, FCCA, MBA, Mr N. Seevaratnam
Temple Ombudsman: Mr V R. Ramanathan, FinstSMM, CertPFS CertCII(MP) (Founder, Saiva Munnetra Sangam (UK))

சிவயோகம்
SIVAYOGAM
(Charity Reg No: 1050098 Since: 1995)
To facilitate here and beyond

Founder & Spritual Leader
*Sakthy Aanmeehach Chudaroli*
Mr Nagendram Seevaratnam ACA, ACMA



# அணிந்துரை

திருமந்திரம் ஒரு வாழ்வியல் இலக்கணம் ஊழ்வினை நீக்கும் ஒழுக்க நெறியின் வழிகாட்டி இதனை எவரும் இலகுவில் விளங்கக் கூடிய எழுத்தாக்கம் இந்த நூல் வான்புகழ் கொண்ட வள்ளுவம் போல் ஏன் திருமந்திரம் இவ்வுலகெங்கும் சென்றடையவில்லை என்ற எண்ணத்தை எல்லோருக்கும் எழுப்புகின்றது இந்த நூலின் சுவைப் பிழிவு.

இலகு தமிழில் திருமந்திரக் கருத்துக்கு சுருக்க விளக்கத்தை அழுத்தமாக வாசகர் மனதில் புதைப்பதில் இந்நூல் ஆசான் சைவசித்தாந்த இரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி வெற்றி கண்டுள்ளார். திருக்கைலாயனின் திரு அருள் பெற்ற நந்தி தேவரின் மாணாக்கரே திருமூலர் என்பதை திருமந்திரம் சில முத்துக்கள் என்னும் இந்த நூல் விளக்கம் மூலம் மெய்ப்பிக்கின்றது. இந்த மெய்ப் பொருளை திறம்படத் தன் எழுத்தில் விளக்கும் இந்நூல் ஆசிரியரும் திரு அருள் பெற்ற ஒருவரே என்பதில் ஐயமில்லை.

திருமந்திரம் சொல்லும் சமூக அறிவு, உடற் கூற்று அறிவு, உடல் நல அறிவு, அரசியல் அறிவு, ஒழுக்கம், ஒருவனே தேவன் என்ற விளக்கம் என்பன தனித்தனி உபதலைப்புகளில் உள்ளடக்கி விரிவது இந்நூலின் சிறப்பு.

ஆற்றல், அமைதி, அடக்கம், எளிமை, அருள் நெறி நாட்டம் என்ற பண்புகள் கொண்ட இந்நூல் ஆசிரியரின் திருத்தொண்டை பாராட்டுவதில் பெருமையடைகின்றோம்.

நாகேந்திரம் சீவரத்தினம்

சிவயோகம்

128 Aurelia Road, Croydon Cro 3BF Tel : 020 8767 9881, E.mail: sivashakthy@sivayogam.co.uk, Web : www.sivayogam.org
Registered Office : 41 St. Georges Ave, Kingsbury, London NW90JT Tel : 020 8767 9881 Fax : 020 8711 5333



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்


தாயன்போடு தன் மடிக்குழந்தையொன்றின்
தன்னிகரில்லாப் படைப்பு கண்டு மகிழ்கிறது

ஐரோப்பியத் தமிழர்களின் வரலாற்றிலும் ஐரோப்பியச் சைவத்தின் வரலாற்றிலும் இறைவனின் கருணையால் சைவமுன்னேற்றச் சங்கத்தில் திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்த இரத்தினப் பட்டத்திற்கான பயிற்சி மையம் 2012 முதல் சைவப்புலவர், இளம் சைவப்புலவர் கற்கை நெறிகளையும், உலகத்தமிழராய்ச்சி மையத்தின் திருமூலர் இருக்கையின் திருமந்திரப் பட்டய கற்றை நெறியையும் தமிழறிஞரும் சைவசித்தாந்த ஆசிரியருமான சூ.யோ. பற்றிமாகரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. இந்தக் கற்கை நெறிகளில் ஆர்வத்துடனும் பத்தியுடனும் கலந்து சித்தாந்த இரத்தினம், திருமந்திரப் பட்டயம் என்பவற்றை இறையருளால் பெற்றவர் யாழ்ப்பாணத்தில் மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இலண்டனில் வாழ்ந்து வருபவருமான சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி அவர்கள். இவர் தான் இறையருளால் அறிந்து கொண்ட திருமந்திரத்தை எளிமையான மொழியில் ஆழமான முறையில் பலரும் விளங்கக் கூடிய முறையில் படைத்தருளிய அருமையான நூல் தான் “திருமந்திரம் சில முத்துக்கள்' (பாகம் 2) என்னும் இந்நூல். தமிழர் மறை எனப் புகழும் அளவுக்கு திருவருள் பொழியும் திருமூலரின் திரு மந்திரத்தை, இன்றைய உலகில் மக்களிடை பரப்பும் பெருநோக்கில் 1ஆம் பதிப்பு கண்ட வெற்றியின் பின்னணியில் இரண்டாம் பதிப்பாக வெளிவரும் இந்நூலுக்கு அணிந்துரை அளிப்பதில் சைவமுன்னேற்றச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் பெருமையடைகிறேன். இந்த இரண்டாவது பாகத்தில் 32 உட் தலைப்புக்களில் திருமந்திரத்தில் நம்மை உய்விக்கக் கூடிய பல மந்திரங்களை இலகுதமிழில் அழகு மொழியில் ஆசிரியர் தனக்கே உரித்தான சரளமான மொழி நடையில் தந்துள்ளதால் படிப்பவர் மனத்தில் ஒருவகைப் பக்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசம் பிறக்கிறது. இதனால் சைவம் புலத்திலும் தாயகத்திலும் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் இந்நூல் சென்றடைகையில் சிறப்புறும் என்பதில் சந்தேகமில்லை. இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் நோக்கமும் சிவஞானத்தை இலண்டனில் மட்டுமல்ல தாயகம் உட்படத் தமிழர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் வளர்த்திடலே ஆகும். அந்த வகையில் சைவசித்தாந்தத்தின் வித்தாக விளங்கு திருமந்திரத்தை, இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தில் பயின்ற இவர் வழியாக, நான் தினமும் உறவாடி மகிழும் சிதம் பரேஸ்வரப் பெருமான், உலகு உய்ய அருளச் செய்து இலண்டன் சைவமுன்னேற்றச் சங்க நோக்குக்கு அணி சேர்த்துள்ளார். நூலை எழுதுவித்த தில்லைக் கூத்தனுக்கும் நூலினை உருவாக்க இரவு பகலாக உழைத்த ஆசிரியர் நாகேந்திரம் கருணாநிதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இவரை முன்மாதிரியாகக் கொண்டு சைவமுன்னேற்றச் சங்கத்தில் சைவசித்தாந்தம் பயின்ற ஒவ்வொருவரும் உங்கள் ஆன்ம அனு பவத்தை ஆண்டவன் துணையுடன் அகிலத்திற்குத் தந்திட முயல வேண்டும் எனப் பணி வன்பாக வேண்டி, சித்தாந்த இரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி அவர்கள் மேலும் மேலும் சிவப்பணியில் சிறந்து நல்ல பல படைப்புக்களை தந்தருள எம்பெருமான் திருவடி வணங்கி ஆசிரியரை இதயத்தன்புடன் வாழ்த்துகிறேன்.



**தர்ம இரவீந்திரமோகன்**

தலைவர்

சைவமுன்னேற்றச் சங்கம் (UK)

18.06.2020

**பஞ்ச (ஐந்து) ஈஸ்வரங்களில் ஒன்றான**
**நகுலேஸ்வரம் – கீரிமலை**
**வடக்கு இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## இறைவணக்கம்



"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே"

"திருமந்திரம்" நூலின் காப்புச் செய்யுளாகிய மேல் உள்ள பாடலின் கருத்து ஐந்து திருக் கரங்கள், பிரணவத்தின் வடிவாக யானை முகம், வெண்ணிலாவின் மூன்றாம் பிறைச்சந்திரன் போன்ற ஒற்றைக்கொம்புடையவன், பரம்பொருளின் திருமகன், அறிவின் உச்சியாக இருப்பவனைச் சிந்தையில் வைத்துத் தியானித்து அவன் திருவடி போற்றி வணங்குகிறேன். (திருமந்திரத்தில் சிவனுக்கு நந்தி என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது )

என்னுள் இருந்து என்னை இயக்கும் பரம்பொருளின் அம்சமான அம்பாளின் பாதங்களைப் பணிந்து இம்முயற்சியை ஆரம்பிக்கின்றேன்.



பஞ்ச (ஐந்து) ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரம் – திருகோணமலை கிழக்கு இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கம்

"குருவே சிவம்எனக் கூறினன் நந்தி
குருவே சிவம்என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே."

*"திருமந்திரம்" பாடல் எண் 1581 இல் சிவப்பரம்பொருள்தான் ஞான குருநாதன் எனக் கூறப்பட்டுள்ளது.*

எனக்குக் குருவாக வந்த மதிப்பிற்குரிய ஆசான் "செந்நெறிச் செம்மல்" திருவாளர் சூ.யோ.பற்றிமாகரன் BA, Special Diploma (Oxford), BSC, PG Diploma, MA (Politics of Democracy), MA (Tamil) அவர் களின் பாதம் பணிந்து,

"திருமந்திரமும் வாழ்வியலும்" பட்டயப் படிப்பை லண்டனில் பயில உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், இப்பயிற் சிக்கு அடிகோலிய தமிழக அரசுக்கும், சைவ சித்தாந்தப் பயிற்சி மையத்தில் இப்பயிற்சிக்கான வகுப்புக்களை நடத்திய சைவமுன் னேற்றச் சங்கத்திற்கும், இந்த நூலில் வரும் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக ஜேர்மனியில் இருந்து வெளிவரும் "வெற்றி மணி" புதினப் பத்திரிகையிலும், "சிவத் தமிழ்" சஞ்சிகையிலும் பதிவேற்றி எனக்கு ஊக்கமளித்து வரும் பத்திரிகை ஆசிரியர் கலாநிதி சிவகு மாரன் அவர்கட்கும், மயிலிட்டி மக்கள் ஒன்றியம் பிரான்ஸ் இணையத் தளத்தில் பதிவேற்றி வரும் திரு அருண்குமார் அவர் கட்கும், லண்டனில் Tamil Bay News இணையத்தளத்திலும், "தமிழ் நேரலை" என்னும் இணையத்தளப் பத்திரிகையிலும் எனது ஆக்கங் களைப் பதிவேற்றிவரும் திரு சுதன் அவர்களுக்கும், இந்த நூலுக்கு அணிந்துரைகளை வழங்கிய சிவயோகம் அறக்கட்டளை, சைவமுன் னேற்றச் சங்க நிர்வாகிகளுக்கும், இந்த நூலைப் பதிப்பித்த அச்சகத் தாருக்கும், மற்றும் இப்புத்தகம் உருவாகுவதற்கு உதவிய அனைவ ருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடங்குமுன்

" நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே."

*"திருமந்திரம்" நூலின் 85 ஆவதாக உள்ள மேல் உள்ள பாடலின் கருத்து நான் பெற்றதான இறை அருள்-கருணையால் உணர்ந்தறிந்த, பேரின்ப ஞானப் பேற்றை, இவ்வுலக மக்களெல்லாம் பெற்றுய்ய வேண்டும் என்பதாகும்.*

**"தொல்காப்பியம்" 3 ஆம் பாகம் பொருளதிகாரம் 4 ஆம் பகுதி "கற்பியல்" 51 ஆவது பாடல்**

" காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம் புரி மக்களொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

*நாம் கற்ற நல்ல விடையங்களை மற்றவர்களுக்கும் பயிற்றுவிக்க வேண்டும் எனக் கூறுகிறது. இதற்கமய இறைவன் அருளால் கிடைத்த சிறு அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கின்றேன்.*

**நாகேந்திரம் கருணாநிதி**



**பஞ்ச (ஐந்து) ஈஸ்வரங்களில் ஒன்றான
முன்னேஸ்வரம் – சிலாபம்
மேற்கு இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| *1. சிவன் விருப்பத்தால் உருவான திருமந்திரம்* | *01* |
| *2. சமூக அறிவியல்* | *05* |
| *3. உடற் கூற்று அறிவியல்* | *08* |
| *4. உடல் நல அறிவியல்* | *12* |
| *5. கரு உருவாதல்* | *15* |
| *6. அரசியல்* | *18* |
| *7. ஆவணப்படுத்துதல்* | *21* |
| *8. பஞ்சமா பாதகங்கள்* | *24* |
| *9. அந்தணர் ஒழுக்கம்* | *27* |
| *10. நிலையற்ற வாழ்க்கை* | *30* |
| *11. இறைவன் ஒருவனே* | *33* |
| *12. சிவலிங்கம்* | *36* |
| *13. திருவைந்தெழுத்து* | *40* |
| *14. நடராஜ தத்துவம்* | *43* |
| *15. திருக் கூத்து (திரு நடனம்)* | *47* |
| *16. சக்தியின் பெருமை* | *52* |
| *17. அட்ட வீரட்டம்* | *56* |
| *18. அடி முடி தேடல்* | *60* |
| *19. வேதங்கள்* | *63* |
| *20. ஆகமங்கள்* | *70* |
| *21. மூவகை ஆன்மாக்கள்* | *76* |
| *22. புராணங்கள்* | *79* |
| *23. பெரிய புராணம்* | *82* |
| *24. திருக்குறள்* | *89* |
| *25. சைவ சித்தாந்தம்* | *93* |
| *26. அட்டமா சித்திகள்* | *97* |
| *27. பரிபாசை* | *110* |
| *28. குரு* | *117* |
| *29. சீடர்* | *121* |
| *30. பிரத்தியாகாரம்* | *125* |
| *31. தாரணை* | *129* |
| *32. தியானம்* | *133* |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் விருப்பத்தால் உருவான திருமந்திரம்

சைவ சமயத்தை உள்ளடக்கிய இந்து சமயத்தின் கோட்பாடு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வகையான வழி பாட்டு முறை, கோயில் அமைப்பு உட்பட சகல விடையங்களையும் உள்ளடக்கியது ஆகமங்கள் ஆகும். ஆகமங்கள், வேதங்கள் குரு சீஷ்ய பரம்பரையாக வாய் மொழியாகவே அறியப்பட்டு வந்தன. பிற்காலத்தில் இவை சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன. முதன்முதலில் தமிழில் பாடப்பெற்ற நவ ஆகமங்களின் சாரம் திரு மூலநாயனாரால் பாடப்பெற்ற திருமந்திரம் ஆகும். திருமந்திரத் திற்கு தமிழ் வேதம் என்ற பெயரும் உண்டு.

திருக்கயிலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல்பூண்ட திருநந்திதேவரது திருவருள்பெற்ற மாணவர் சுந்தரநாதன் (சுந்தரர்) என்னும் அட்டமாசித்திகளும் பெற்ற தவயோகிதான் பூவுலகிற்கு வந்து திருமந்திரத்தைப் பாடிய திருமூலநாயனார். இதற்கு ஆதாரம்

1. சேக்கிழார் பெருமானால் பாடப்பட்ட திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) என்னும் நூலில் வரும் "கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார் காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்" என்னும் வரிகள்,
2. திருத்தொண்டர் புராணத்தில் திருமூல நாயனாரின் வரலாற் றைக் கூறும் பின்வரும் பாடல் (எண் 23)

"தண்ணிலவார் சடையார் தாம்
தந்த ஆகமப் பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர்
வாக்கினால் தமிழ் வகுப்பக்
கண்ணிய அத்திரு அருளால்
அவ்வுடலைக் கரப்பிக்க
எண் நிறைந்த உணர்வு உடையார்
ஈசர் அருள் என உணர்ந்தார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. *நம்பியாண்டார் நம்பிகளால் பாடப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதியில் வரும் பின் வரும் பாடல் (எண் 37)*

"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டு என் உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூலன் ஆகின்ற அங்கணனே"

4. *திருமந்திரம் முந்நூறு என்னும் நூலில் சிறப்பாயிரத்தில் "மந்திரம் கொண்டு...... எனத் தொடங்கும் பாடலில் "சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்" என்ற வரிகள்.*

5. *திருமூலநாயனாரால் பாடப்பட்ட திருமந்திரத்தில் கீழ் வரும் பாடலில் (எண் 81) தமிழ் வேதம் செய்வதற்காகவே, தான் இறைவனால் பிறப்பிக்கப்பட்டேன் எனக் கூறியுள்ளார்.*

"பின்னை நின்றுஎன்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே."

*முற்பிறப்பில் முறையாகத் தவம் செய்யாதவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து பிறவி என்னும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் நான் இறைவனை நன்றாகத் தமிழ் வேதம் செய்வதற்காக இறைவனால் பிறப்பிக்கப்பட்டுள்ளேன்.*

6. *திருமந்திரத்தைத் தமிழ் ஆகமம் எனக்கூறும் திருமந்தரப் பாடல் எண் 74*

"செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பிலி எழுகோடி யுகம் இருந்தேனே"

*சிவாகமம் (இறைவன் அருளிய மறைநூல்) எனச் சொல்லப்* படும் *இத்தமிழ் மறையை நந்தியெம் பெருமான் திருவடித்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையால் அருளப் பெற்ற நான், இறைவனின் ஆனந்தத் திருநடனத்தை என்னுள்ளே நானே கண்டு, ஓராயிரம் கோடி ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தேன்.

ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்னும் தத்துவத்தைக் கூறும் பாடல் எண் 2104

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே."

மனித குலம் முழுமையும் ஒன்றுதான், இறைவனும் ஒருவன் தான். எப்பொழுதும் நல்லதையே நினையுங்கள், எவருக்கும் நல்லதையே செய்யுங்கள் இப்படி வாழ்பவர்கள் இறவாப் புகழுடன் வாழ்வார்கள். வெட்கப்படாமல் துணிந்து நீங்கள் செல்லத்தக்க வழி வேறு இல்லை. எனவே மனத்துள்ளே சிவனை நினைத்து அவனருளுணர்வோடு பொருந்தி, தடுமாற்றம் இன்றி அவன் திருவடி நினைந்து நற்கதி அடையுங்கள்.

இறைவன் ஒருவனே எனக் கூறும் பாடல் எண் 1.

"ஒன்றவன்தானே இரண்டவன் இன்அருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழ்உம்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந்து எட்டே".

ஒன்றாயிருப்பவன், அவனே சிவனும் சக்தியுமாக இரண்டாகவும் இருக்கின்றான். அவனே பிரமன், திருமால், உருத்திரன் என மூன்றாகவும் உள்ளான். அவன் நான்மறை (நான்கு வேதங்கள்) வடிவானவன். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுக்கும் அவனே தலைவன். சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் என்னும் ஆறு சமயப் பிரிவுகளாக இருப்பவன் அவனே. ஏழ் உலகங்களிலும் இருப்பவனும், அவற்றை இயக்குபவனும் அவனே. இப்படி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் தன்வயமாதல், தூய உடலினன் ஆதல்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை உணர்வடைதல், முற்றும் உணர்தல், பற்றற் றிருத்தல், பேரருள் நோக்கு, முடிவில்லாமை, எல்லையில்லாமை ஆகிய எண்குணத்தவனாக இருக்கின்றான்.

*இறைவன் இல்லாத இடமில்லை எனக் கூறும் பாடல் எண் 93*

"இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆர்அழல் வீச
உருக்கிய உரோமம் ஒளிவிடும் தானே"

*எண்ணிப் பார்த்தால் சிவபெருமான் எண்ண முடியாத பல கோடி மந்திரங்களில் அதன் உட்பொருளாய், அந்த மந்திரங்களோடு பொருந்தி இருப்பான். சூரியனும், சந்திரனும் ஒளி வீசித் திகழுவது போல, ஆன்மாக்கள் உடலில் மூலாதாரத்தில் "ஓம்" எனும் பிரணவ சொரூபமாக உருக்கிய பொன் போல ஒளிக் கதிர் வீசித் திகழ்வான்.*




**பஞ்ச (ஐந்து) ஈஸ்வரங்களில் ஒன்றான தென்னாவரம் தொண்டீஸ்வரம் இலங்கையின் தென் பகுதியில் தேவேந்திரமுனை (இறைவன் இறங்கிய துறை) என்னும் இடத்தில் அமைந் திருந்தது. அவ்விடம் இப்போது (மாத்தறைப் பிரதேசத்தில்) தெவிநுவர என அழைக்கப் படுகின்றது. போர்த்துக்கீசரால் இக்கோயில் அழிக்கப்பட்டுப் பிற்காலத்தில் விஷ்ணு கோயிலாக மாற்றப்பட்டு சிங்கள மொழியில் தெவுந்தர தேவாலே (தெவிநுவர கோயில்) என அழைக்கப்படுகின்றது. (இப்போதைய படம் கிடைக்கவில்லை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரத்தில் உள்ள சமூக அறிவியல்

திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள சமூக அறிவியலைப் பார்ப்போமானால் உலகில் உள்ள மக்கள் அனைவரும் சாதி, சமய வேறுபாடற்ற ஒரு சமுதாயமாக வாழவேண்டும் என்று மனித குலத்திற்கு நல்வழி காட்டிய திருமூலநாயனாரின் உயர்ந்த சிந்தனையான, திருமந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்னும் தத்துவத்தைக் கூறும் பாடல் எண் 2104

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே."

இப்பாடலின் பொருள் "மனித குலம் முழுமையும் ஒன்றுதான், இறைவனும் ஒருவன்தான். எப்பொழுதும் நல்லதையே நினையுங்கள், எவருக்கும் நல்லதையே செய்யுங்கள் இப்படி வாழ்பவர்கள் இறவாப் புகழுடன் வாழ்வார்கள். வெட்கப்படாமல் துணிந்து நீங்கள் செல்லத்தக்க வழி வேறு இல்லை. எனவே மனத்துள்ளே சிவனை நினைத்து அவனருளுணர்வோடு பொருந்தி, தடுமாற்றம் இன்றி அவன் திருவடி நினைந்து நற்கதி அடையுங்கள்." என்பதாகும்.

இக்கருத்திற்கு பொருத்தமாக கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கணித மேதையும், சங்க காலப் புலவருமான கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் 192 ஆம் பாடலில் யாதும் ஊரே யாவரும் கேளிர் ( எல்லா ஊரும் எம் ஊர், எல்லா மக்களும் எம் உறவினர் ) என பாடியுள்ளார்.

மானிடராய்ப் பிறந்த அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய நாம் பெற்ற இன்பம் அனைவரும் பெறவேண்டும் என்பதைக் கூறும் பாடல் 85 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே."

இப்பாடலின் பொருள் "நான் பெற்றதான இறையருள் கருணையால் உணர்ந்தறிந்த, பேரின்ப ஞானப் பேற்றை, இவ்வுலக மக்களெல்லாம் பெற்றுய்ய வேண்டும். வானம் அளந்து நின்ற வேதவிழுப்பொருளைக் கூற நான் பெற்ற ஞானம் ஊனோடு கலந்து உணர்வோடு ஒன்றி உயிர்ப்படையச் செய்யும் வேத மந்திரம் இதுவாகும். இதை உள்ளம் பற்றி நினைந்து நினைந்து துதிக்க இறைவன் திருவருள் தானே தேடி வந்தடையும்." என்பதாகும்.

மனிதர்கள் யாவரும் நடுவு நிலைமை உடைய வாழ்க்கையை வாழவேண்டும் எனக் கூறும் பாடல் எண் 320

"நடுவு நின்றார்க்குஅன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார்நல்ல தேவரும் ஆவார்
நடுவு நின்றார்வழி நானும்நின் றேனே".

இப்பாடலின் பொருள் "நடுவு நிலைமை தவறாது அறவழியில் நிற்பவர்களுக்கே ஞானம் கிட்டுமே அல்லாமல் மற்றவர்க்கு ஞானம் பெற வழியில்லை. நடுவு நிலையில் நின்றவர்களுக்கு நரகத் துன்பமும் இல்லை. நடுநிலையாளர்கள் உயர்ந்த தேவ நிலையும் அடையப் பெறுவர். எனவே நடுநிலையாளர்கள் மேற்கொண்ட வழியையே நானும் கடைப்பிடிக்கின்றேன்" என்பதாகும்.

நடுவுநிலையே நல்ல ஞானநிலை எனக் கூறும் பாடல் எண் 321

"நடுவு நின்றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவு நின்றான்நல்ல நான்மறை ஓதி
நடுவு நின்றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவு நின்றார்நல்ல நம்பனும் ஆமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிய மேகம் போன்ற மேனி அழகுடைய திருமாலும் நடுவு நிலை தவறாது நின்றே தனது காக்கும் தொழிலைச் செய்து வரு கிறான். நான்கு வேதங்களையும் ஓதித் தனது படைப்புத் தொழிலைத் தொடங்குகின்ற பிரமனும் நடுவுநிலை தவறாமலே செயல்படு கின்றான். ஞானிகளும் இந்த நடுவுநிலமை தவறாதவர்களே. நடுவுநிலை தவறாதவர்கள் சிவ சொரூபமாகவே விளங்குவர்.

நடுவுநிலை தவறாதவன் ஞானி எனக் கூறி உலகம் நடுவுநிலை தவறாது ஒழுக வேண்டும் என்பதை கூறும் பாடல் எண் 322

"நடுவு நின்றார்சிலர் ஞானிக ளாவார்
நடுவு நின்றார்சிலர் தேவரு மாவார்
நடுவு நின்றார்சிலர் நம்பனு மாவார்
நடுவு நின்றாரொடு நானும்நின் றேனே"

நடுவுநிலை தவறாதிருப்பவர்கள் சிலர் ஞானிகளாவார். நடுவுநிலையில் நிற்பவர்களில் சிலர் தேவர்களும் ஆவர். நடுவுநிலை பிறழாது நடப்பவர் சிவசொரூபமே ஆவர். எனவே நானும் நடுவுநிலை தவறாதவர்களோடு சேர்ந்தவன் ஆனேன்.

ஞானத்தவம் நடுவுநிலமை எனக் கூறும் பாடல் எண் 323

"தோன்றிய எல்லாம் துடைப்பன் அவனன்றி
ஏன்று நின்றார்என்றும் ஈசன் இணையடி
மூன்று நின்றார்முதல் வன்திரு நாமத்தை
நான்று நின்றார்நடு வாகிநின் றாரே"

உலகில் தோன்றியுள்ள எல்லாவற்றையும் அழிக்க வல்லவனும் ஈசனே ஆவான். எனவே இறைவன் திருவடிகளே தமக்குத் துணை என்று ஏற்றுக் கொண்டவர்கள் இறைவன் திருப்பெயரைத் தியானித்து, அவனருளைப் பெற முயன்று நின்றார்கள். தவயோகத்தைப் பற்றியும் நின்றவர்கள் நடுவுநிலை நின்றவர்களே. (சிலர் நடுவுநிலை என்பதற்கு நாசிக்கு மேலே இரு புருவ நடுவில்- சுழுமுனையில் நிற்றல் எனவும் பொருள் கூறுவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரத்தில் உள்ள உடற் கூற்று அறிவியல்

திருமூலர் திருமந்திரத்தில் உடலின் முக்கியத்துவத்தை மிகத் தெளிவாகக் கூறிய பாடல் எண் 724

" உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே".

என்னும் பாடல் மூலம் உடலானது நன்றாக இருந்தால்த்தான் வாழ்வில் இன்பம் நிலவும். உடல் நலம் பாதிக்கப்பட்டால் நோய் உண்டாகி இறை சிந்தனையில் ஈடுபட முடியாமல் போவது மட்டுமல்லாமல் மரணத்தையும் ஏற்படுத்தும் எனக் கூறியுள்ளார். அத்துடன் உடம்பு அழிந்தால் உயிரும் உடலைவிட்டு நீங்கி விடும். எனவே உடம்பை அழியாது காக்கும் வழியை நான் அறிந்து கொண்டேன் எனக் கூறிய பாடல் எண் 725

" உடம்பினை முன்னம் இழுக்குஎன்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே."

என்னும் பாடல் மூலம் உடம்பை வெறும் பாவச்சுமை என முன்பு நினைத்திருந்தேன். பின்புதான் உடம்பிற்குள்ளே பரம் பொருள் கோயில்கொண்டிருப்பதை அறிந்தேன். இதனால் உடம்பைப் பேணிப் பாதுகாத்து வருகிறேன் எனக் கூறியுள்ளார்.

திருமூலர் எண் சாண் உடம்பு உருவாகுவதைக் கூறும் பாடல் எண் 464

" சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பாடலில் கரு உருவாகும்போது பெண் பதின்இரண்டு விரற்கட்டை மூச்சை உள்ளெடுத்து நாலு விரற்கட்டை மூச்சை வெளிவிடும்போது தங்கும் எட்டு விரற்கட்டை மூச்சால் எண்சாண் உடம்பு உருவாகிறது எனக்கூறியுள்ளார். இதை ஐந்துபூதங்களைக் குறித்த "ல" கரம் (நிலம்), "வ" கரம் (நீர்), "ர" கரம் (நெருப்பு), "ய" கரம் (காற்று,உயிர்), "அ" கரம் (ஆகாயம்) ஆகிய ஐந்தும் ஓம் என்னும் பிரணவத்தின் "அ" கர, "உ" கர, "ம" கரம் என்னும் மூன்றுமாக எட்டு எனவும் பொருள் படும்.

திருமூலர் உடம்பு ஐம்பூதங்களான

1. நிலம் - தோல், எலும்பு, நரம்பு, தசை, மயிர்
2. நீர் - பித்தம், இரத்தம், விந்து, கசிவு அல்லது கழிவு, வியர்வை
3. நெருப்பு - பசி, தாகம், தூக்கம், சோம்பல், பயம்
4. காற்று - ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், தத்தல்
5. ஆகாயம் - குரோதம், உலோபம், மோகம், மதம், பொறாமை

ஆகியவற்றால் ஆனது என்பதைக் கூறும் பாடல் எண் 2126

" ஆரே அறிவார் அடியின் பெருமையை
யாரே அறிவார் அங்கவர் நின்றது
யாரே அறிவார் அறுபத்துஎட்டு யாக்கையை
யாரே அறிவார் அடிக்காவல் ஆனதே".

என்னும் பாடலில் கூறியதுடன் முப்பதிஎட்டு புறக்கருவிகளுடன் சேர்த்து உடல் அறுபத்திஎட்டு கூறுகள் எனக் கூறியுள்ளார்.

திருமூலர் உடலில் உள்ள உயிர் காந்த சக்கியாகிய, உடலின் உட்பகுதியிலுள்ள இரசாயனங்களை உற்பத்தி செய்து இரத்தத்தின் வழியாக உடல் முழுக்கப் பரவச் செய்யும் நாளமில்லாச் சுரப்பிகளான ஆறு ஆதார நிலைகளை அதாவது சக்கரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இவற்றை தாமரை மலர்கள் எனவும் கூறுவர்) விரிவாகப் பாடல் எண் 1704

" நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலம்கண்டு ஆங்கே முடிந்து முதல் இரண்டும்
காலம் கண்டான்அடி காணலும் ஆமே".

என்னும் பாடல் மூலம் குண்டலினி சக்தியை மூலாதாரத் திலிருந்து எழுப்பி

1. முதலாவது சக்கரம்- மூலாதாரம்-பாலுணர்வுச் சுரப்பி (Sexual Gland)
2. இரண்டாவது சக்கரம் - சுவாதிட்டானம் - அட்ரினல் சுரப்பி (Adrenal Gland)
3. மூன்றாவது சக்கரம் - மணிபூரகம் - கணையம் (Pancreas)
4. நாலாவது சக்கரம் - அனாகதம் - தைமஸ் (Thymus)
5. ஐந்தாவது சக்கரம் - விசுத்தி - தைராயிட் சுரப்பி (Thyroid Gland)
6. ஆறாவது சக்கரம் - ஆக்கினை - பியூட்டரி சுரப்பி (Pituitary Gland)

ஆகிய ஆதாரநிலைகளில் ஒன்றச் செய்து இறுதியில் ஏழாவது சக்கரமான துரியத்தை - பீனியல் சுரப்பி (Pineal Gland) (சகஸ்ரதளம்) அடையச்செய்வதன் மூலம் இறைவனைக் காணலாம் எனக் கூறியுள்ளார்.

திருமூலர் உடம்பில் உள்ள பத்து வாயுக்களான (பிராண சக்தி அல்லது உயிர்ச் சக்தி), 1.பிராணன் (24% உடலின் முழுப்பாகமும் சரியாக இயங்கச் செய்வது), 2.அபானன் (12% கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல்), 3.உதானன் (6% சிறு நரம்புகளை இயக்குதல்), 4.வியானன் (9% உடலினை இயக்குவது), 5.சமானன் (9% தேவையான சக்தியைத் தேவையான உறுப்புக்களுக்குப் பங்கிடுதல்), 6. தேவதத்தன் (8% கண்ணிமைகளை இமைக்கச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செய்வது), 7. தனஞ்சயன் (8% உயிர் போனபின் உடலை வீங்கி வெடிக்கச் செய்வது), 8.கூர்மன் (8% தொடுஉணர்வைக் கொடுப்பது), 9.விகுண்டன் (8% மல சலத்தைக் கட்டுப்படுத்துவது), 10.சாத்தீகன் (8% சுக, துக்கங்களை அளவிடுவது).* பற்றிக் கூறிய பாடல் எண் 457

"போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடானெனிற் பன்றியு மாமே".

*அருவமாயுள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, வாசம், மனம், புத்தி, அகங்காரம், ஆகிய எட்டும், உள்ளே வருகின்ற பத்து வாயுக்களுடன் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், துன்பம், அகங்காரம், ஆகிய எட்டுடன் சேர்த்துப் பதினெட்டும் சேர்ந்த உடம்பில் ஒன்பது வாயில்களான இரண்டு கண்கள், இரண்டு நாசித்து வாரங்கள், வாய், இரண்டு காது, சல வாயில், மல வாசல் என்பனவற்றுடன் குண்டலினியும் (மூலாதாரம்), பதின்ரெண்டு விரற்கட்டை மூச்சுக்காற்றும் இறைவனால் சரியாகக் கையாளப் படாவிட்டால் பிறப்பு வீணே எனக் கூறியுள்ளார்.*



**ஐம்பூத ஸ்தலங்களில் ஒன்றான ஏகாம்பரநாதர் ஆலயம் (நிலம்)**
**காஞ்சிபுரம் தமிழ் நாடு மாநிலம் – தென் இந்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரத்தில் உள்ள உடல் நல அறிவியல்

உடலில் உள்ள வாயுக்கள், அவற்றின் செயற்பாடுகள் என்பதனை திருமூலர் திருமந்திரத்தில் கூறிய பாடல்களில் ஒன்று பாடல் எண் 653

" ஒத்தஇவ் ஒன்பது வாயுவும் ஒத்தன
ஒத்தஇவ் ஒன்பதின் மிக்க தனஞ்சயன்
ஒத்தஇவ் ஒன்பதில் ஒக்க இருந்திட
ஒத்தஉடலும் உயிரும் இருந்ததே"

உயிருடலில் உள்ள வாயுக்கள் ஒன்பது. அவை இருக்கும் இடங்களாவன இடப்பக்க நாசி நரம்பு (இடகலை), வலப்பக்க நாசி நரம்பு (பிங்கலை), நடு நரம்பு (சுழு முனை), உள் நாக்கு நரம்பு (புருடன்), வலக்கண் நரம்பு (காந்தாரி), இடக்கண் நரம்பு (அத்தி), வலக்காது நரம்பு (அலம்புடை), இடக்காது நரம்பு (சங்கினி), எருவாய் நரம்பு (குரு) ஆகிய இந்த வாயுக்கள் கூடவோ, குறையவோ செய்யாமல் ஒத்து இயங்குவன ஆகும். இவற்றுடன் கூட சிறந்ததான வாயு தனஞ்சயனும் ஒன்பது வாயுக்களுடனும் சேர்ந்து ஒன்பது நாடிகளில் சீராக இருந்து இயங்குமானால் உடம்பு உயிரோடு ஒத்து நீண்ட காலம் நிலைத்திருக்கும்.

இவ்வாயுக்கள் இயங்கும் தன்மையைக் கூறும் பாடல் எண் 790

" வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடம்
தெள்ளிய தேய்பிறை தான்வலம் ஆமே"

பிராணன் வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில் (இடகலை) இடப்பக்கமாகவும், சனி, ஞாயிறு, செவ்வாய் கிழமைகளில் (பிங்கலை) வலப்பக்கமாகவும், வியாழக்கிழமை வளர்பிறையில் இடப்பக்கமாகவும், தேய்பிறையில் வலப்பக்கமாகவும் இயங்குவதே முறையான சுவாசமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனஞ்சயன் உடலைவிட்டு வெளியேறினால் உயிர் பிரிந்து விடும் எனக்கூறும் பாடல் எண் 654*

" இருக்கும் தனஞ்சயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற்று இருபத்து நான்காய்
இருக்கும் உடலில் இருந்தில ஆகில்
இருக்கும் உடல் அது வீங்கி வெடித்ததே"

*தனஞ்சயன் (முன் 653 ஆம் பாடலில் கூறிய) எனும் காற்று இருநூற்றி இருபத்தி நான்கு உலகங்களிலும் வாழும் உயிர்களின் உடல்களிலும் இருக்கும். இக்காற்று இருக்கும் வரைதான் இவ்வுடல் (உயிர்) இருக்கும். இத்தனஞ்சயன் உடலில் பொருந்தி இருக்க வில்லை என்றால் உயிரிருக்கும். இந்த உடல் உயிரற்ற பிணமாகும்.*

*தனஞ்சயன் மற்ற ஒன்பது வாயுக்களுடன் ஒத்துப் போகா விட்டால் உடலில் பல நோய்கள் உண்டாகும் எனக் கூறும் பாடல் எண் 655*

" வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனும்முடம் அதுஆம்
வீங்கு வியாதிகள் கண்ணின் மருவியே"

*தனஞ்சயன் மற்ற ஒன்பது வாயுக்களுடன் ஒத்துப் போகாமல் மாறுபட்டு இயங்குமானால் வேனல் கட்டி, சொறி சிரங்கு, தொழு நோயாகிய குட்டம், உடல் வீக்கம், இரத்த சோகை, பல வகையான கால் வீக்கம், வாதக்கால், கூன் முதுகு, கை கால் குறைந்து முடமாதல் எனப் பலவான நோய்களும், கண் நோய்களும் கலந்து உடலை வருத்தும்.*

*கூர்மம் என்னும் வாயு கண் நரம்பில் பொருந்தாவிடின் கண்ணில் நோய் உண்டாகி கண் பார்வை போகும் எனக் கூறும் பாடல் எண் 656*

" கண்ணில் வியாதி உரோகம் தனஞ்சயன்
கண்ணில் இவ்வாணிகள் காசம் அவனல்லன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் கூர்மன் கலந்திலன் ஆதலால்
கண்ணில் சோதி கலந்ததும் இல்லையே"

கண்ணில் தனஞ்சயன் மாறினால் நோய்கள் பல உண்டாகும். ஆனால் கண்ணில் பூ விழுதல், காசம் (வெள்ளெழுத்து, திரை படருதல், அல்லது புரை விழுதல்) போன்ற நோய்கள் தனஞ்சயன் வாயு திரிவதால் வருவதல்ல. கண் நரம்பில் கூர்மன் வாயு பொருந்தாவிடில், கண்ணில் நோய் உண்டாகும். கண் பார்வை போகும்.

நாடி துடிக்கும் அசைவு கண்களிலும், இருதயத்திலும் உள்ளது எனக் கூறும் பாடல் 657

" நாடியின் ஓசை நயனம் இருதயம்
தூடி அளவும் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
ஓவற நின்றங்கு உணர்ந்து இருந்தாரே"

நாடி துடிக்கும் அசைவு கண்களிலும், இருதயத்திலும் உள்ளது. சிறு உடுக்கையின் ஒலிபோல அசைவுண்டாக்கும் சோதிச் சுடரை தேவர்கள் தலைவனான உருத்திரன், திருமால், பிரமன் ஆகியோர் இடைவிடாது அந்த ஒலியில் பொருந்தி அதன் தன்மை அறிந்திருந்தார்கள். உடம்பில் ஒன்பது வாசல் இருப்பது போல ஒன்பது நாடிகளும், ஒன்பது வாயுக்களும் ஓடுகின்றன எனக்கூறும் பாடல் எண் 658

" ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி உடையதோர் இடம்
ஒன்பது நாடி ஒடுங்கவல் லார்கட்கு
ஒன்பது வாசல் உலைநல மாமே"

சுழுமுனையில் ஒன்பது நாடிகளிலும் ஒன்பது வாயுக்கள் ஓடுகின்றன. இவற்றை அடக்கி ஒடுக்கும் தவயோகப் பயிற்சி உடையவர்களுக்கு ஒன்பது வாசல் உள்ள உடல் நன்மையைத் தருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம் கூறும் கரு உருவாதல்

விஞ்ஞானம் இப்போது கண்டுபிடிக்கும் பல விடையங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முனிவர்களும், யோகிகளும், நாயன்மார்களும், அருளாளர்களும் தங்கள் பாடல்கள் மூலம் எமக்குக் கூறியுள்ளார்கள். கரு உருவாதல் பற்றி, ஒவ்வொரு மாதமும் அதன் வளரச்சி பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் 4 ஆவது பதிகம் போற்றித் திருஅகவலில் 13 ஆவது வரியில்

"மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்..."

எனத் தொடங்கி 27 வரி வரை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

திருமூலநாயனாரும் திருமந்திரத்தில் பல பாடல்கள் மூலம் கரு உருவாதல் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். இறைவன் அருளால் தான் கரு உருவாகுவதாகக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 451

"ஆக்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்சு
ஆக்குகின் றான்அவன் ஆதிஎம் ஆருயிர்
ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை உள்ளிருந்(து)
ஆக்குகின் றான்அவன் ஆவ(து) அறிந்தே"

அனைத்தையும் உருவாக்குகிறான் ஆதியாகிய பரம்பொருள். முன்பு உடலை விட்டு நீங்கிய பொறி ஐந்து, புலன் ஐந்து, பெரும் பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆன்மா என இருபத்து ஐந்து தத்துவங்களையும் தாயாரின் கருப்பைக்குள் இருக்கும் உயிரோடு பொருந்தச் செய்து உதவுகின்றான். அந்த உயிர்களுக்குத் தேவையானதை உணர்ந்து ஆக்குகின்றான். அவை தோன்ற அருள் செய்கின்றான்.

இறை அருள்தான் கருவில் உள்ள உயிரைப் பத்து மாதம் காத்துப் பின் வெளிவர உதவுவதாகக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 452



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்
செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்
பொறைநின்ற இன்னுயிர் போந்துறை நாடப்
பறிகின்ற பத்தெனும் பாரம்செய் தானே"

தவயோகத்தால் உணர்ந்தறியக் கூடிய, நெருப்பும் நீரும் கலந்த உயர்ந்த மூலாதாரத்தில் இறைவன் திருவடிகளை நெஞ்சிலும், நினைவிலும் பதிந்திருக்கச் செய்து, கருவில் உள்ள இன்னுயிரைப் பொறுமையுடன் காத்துப் பின் பத்து மாதங்கள் கழிந்து அது வெளிப்பட வைத்துள்ளது பரமன் திருவருளாகும்.

உயிர் இவ்வுலகில் வாழவேண்டிய காலம், வாழ்க்கை முறை என்பனவற்றை இறைவன் கரு உருவாகும்போதே தீர்மானிப்பதாகக் கூறும் திருமந்திரப் பாடல் **453**

"இன்புறு காலத்து இருவர்முன்(பு) ஊறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத்(து) அமைத்தொழிந் தானே"

இன்பம் அடைய விரும்பிக் கணவன் மனைவியாகிய இருவரும் பிறவிதோறும் தொடரும், துன்பம் தரும் வினையாகிய பாசத்தில் சிக்கிட, வினைக்கிடமான உடம்பில், உயிர்த்த உயிர் இந்த உலகில் வாழவேண்டிய கால அளவையும், ஏற்க வேண்டிய வாழ்க்கை முறையையும், இறைவன் அன்புடைய அவ்விருவரும் இன்புறக் கூடிய காலத்திலேயே அமைய அருள் செய்து விட்டான்.

குறித்த காலத்தில் கருவுக்கு மூச்சுக் காற்று வரும் எனக்கூறும் பாடல் **456**

" பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவும்
கூவி அவிழுங் குறிக்கொண்ட போதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவின் வாசனையுடன் சேர்ந்த காற்றும் உலகெங்கும் பரவி நிலைத்திருப்பதைப் போல, கருவில் இருக்கும் சிறிய உயிருக்கு உதவும் மெல்லிய மூச்சுக் காற்றும் குறித்த காலத்தில் மெல்லிய ஒலியோடு உள் புகும்.

பிறக்கப்போகும் குழந்தையின் அம்சம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 458

"ஏற எதிர்க்கில் இறையவன் தானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் தானாகும்
நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே"

ஆண், பெண் கூடுதலின் போது, சுக்கிலம், சுரோணிதம் கலக்கும் போது, சுக்கிலம் எதிர்த்துச் செல்லுமானால், பிறக்கின்ற குழந்தை பரமேசுவரன் அம்சமாகும். மாறாக சுரோணிதம் எதிர்த்து வரின் பிறக்கும் குழந்தை திருமாலைப் போலிருக்கும். சுக்கிலம் சுரோணிதம் இரண்டும் சமமாகப் பொருந்தி நின்றால் பிறக்கும் குழந்தை பிரமனைப் போலிருக்கும். இந்த மூவரது தன்மையும் பொருந்திய குழந்தை பேரரசனாகச் திகழ்வான்.

பிறக்கும் குழந்தை தாய், தந்தையின் சாயலில் இருக்கும் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 459

"ஏய்அம் அலந்த இருவர்தம் சாயத்துப்
பாயும்கருவும் உருவாம் எனப்பல
காயம் கலந்தது காணப் பதிந்தபின்
மாயம் கலந்த மனோலயம் ஆனதே"

பல பிறப்புக்கள் எடுத்து, வருந்தி அலைந்து, தாய் தந்தையாகிய இருவருடைய சாயலில் பாய்ந்த கரு குழந்தை உருப்பெறும். இப்படி உருவான உயிர் பல உடலில் பொருந்திப் பல பிறவி எடுத்த பின்பு, மன மயக்கு அடைந்து மனம் ஒத்து இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம் கூறும் அரசியல்

முற்காலத்தில் மன்னர் ஆட்சி நடைபெற்றபோது அரசன் எப்படி அரசாட்சி செய்யவேண்டும் என்பதைத் திருக்குறள், பெரியபுராணம் உட்பட பல நீதி நூல்கள், சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. அவை இக்காலத்தில் நாட்டை ஆளும் அரசியல் வாதிகளுக்கும் பொருத்தமானதாகும். மன்னனின் கடமை பற்றிக் கூறும் திருமந்திர பாடல் எண் 243

" ஆவையும் பாவையும் மற்று அறவோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே"

நாடாளும் மன்னன் நாட்டில் உள்ள பசுக்களையும், பெண்களையும், அறநெறி உணர்ந்த சான்றோர்களையும், தேவர்களும் வணங்கித் தொழத்தக்க (போற்றும்) தவவேடம் பூண்ட ஞானிகளையும் காக்கக் கடமைப் பட்டவன். இவர்களைக் காக்காது அரசன் கைவிட்டு விடுவானானால், மறுபிறப்பிலும் மீண்டெழ முடியாத நரகத்தை அடைவான்.

இதே கருத்தைக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 238

" கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனின் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்என்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே"

கல்வி அறிவில்லாத அரசன், உயிர்களைக் கவரும் எமன் இருவரும் ஒன்றே. இருவருக்கிடையே வேறுபாடில்லை என்பது மட்டுமல்ல, முட்டாள் அரசனைவிட எமன் நல்லவன். அறிவில்லாத அரசன் அறநெறியைக் கடைப்பிடிக்க மாட்டான். நியாயம், அநியாயம் உணர மாட்டான். தனக்குப் பிடிக்காதவர்களைக் "கொல்" என்று கட்டளை இட்டாலும் இடுவான். ஆனால் எமன் அப்படியல்ல. நல்லவர்களுக்குத் துன்பம் தரமாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அறநெறி காத்தல் அரசர்க்கழகு எனக்கூறும் திருமந்திரம் பாடல் எண் 239*

" நாள்தொறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தொறும் நாடி அவன்நெறி நாடானேல்
நாள்தொறும் நாடு கெடும்மூடம் நண்ணுமால்
நாள்தொறும் செல்வம் நரபதி குன்றுமே"

*அன்றாடம் அரசன் அவனுடைய நாட்டில் அற ஒழுக்கம் கெடாதிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படி அவன் அன்றாடம் அவனுடைய நாட்டில் நீதி முறை சரியாக உள்ளதா என்பதை ஆராய்ந்தறியத் தவறுவானேயானால், அவனுடைய நாடு ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாகக் கெட்டழியும். அறியாமை எங்கும் மிகும். செல்வமும் செல்வாக்கும் நாளும் குறைய, அரசனும் அழிவான்.*

*"அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 245*

" வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழியா நிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாம்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே"

*நாடாளும் மன்னன் தன்நாட்டை நன்றாக ஆட்சி செய்து காத்து வருவானானால், அவன் நாட்டில் இருக்கின்ற மக்களும் அவ்வழியிலே நல்லவர்களாக இருப்பார்கள். அப்படியில்லாமல் (நாடு பிடிக்கும் ஆசையால் போர் வெறி கொண்டு) இவனுடைய நாட்டை இன்னொருவர் வென்று கொள்ள, மற்றவர் நாட்டை இவன் போரிட்டு வெல்வது என்று, மாறிமாறிப் பாய்ந்து போரிட்டு மடிவது, புலிக் குணம் கொண்டவனாக வேந்தன் இருக்கின்றான் என்பதற்கு அடையாளம்.*

*தண்டனை கொடுப்பது அரசனின் கடமை எனக்கூறும் திருமந்திரப் பாடல் எண் 247*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமும்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே"

அவரவர் சமயத் தகுதிகளுக்கும், கோட்பாடு குறிக்கோள் களுக்கும் ஏற்ப, அவற்றை மேற்கொண்டு அதன்படி நடக்காதவர் களைச் சிவப்பரம்பொருள் எத்தகைய தண்டனைகள் வேண்டு மானாலும் தந்து, அவர்களை அதன் பயனான துன்பத்தை அடையச் செய்வான். இது அடுத்து வரும் பிறவியில் நடக்கப் போவது. எனவே இந்தப் பிறவியில் சமய நெறிப்படி நின்றொழுகா நீங்கள் உடல் வருந்தச் செய்யும் தண்டனையைத் தருவது அரசனுடைய கடமை ஆகும்.

மக்களைத் திருத்துதல் மன்னன் கடமை எனக்கூறும் திருமந்திரப் பாடல் எண் *1657*

"இன்பமும் துன்பமும் நாட்டார் இடத்துள்ள
நன்செயல் புன்செயலால் அந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாள்தோறும் நாட்டினில்
மன்பதை செப்பம்செயின் வையம் வாழுமே"

ஒரு நாட்டின் இன்பமும் துன்பமும் அந்த நாட்டில் வாழும் மக்கள் மேற்கொண்டொழுகும் நல்லறச் செயல்கள், தீயகுணச் செயல்கள், இவற்றைப் பொறுத்தே அமையும் என்று பெரியோர்கள் கூறுவர். எனவே நாடாளும் மன்னன் இவற்றை நன்றாக அன்றாடம் ஆராய்ந்து பார்த்து நாட்டு மக்களை நல்வழிச் செலுத்தி, தீயவழி போகாது அவர்களைத் திருத்திச் சரி செய்வானானால், அது உல கிற்குச் செய்யும் உபகாரமாகும். - உலகம் வாழ உதவும் வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம் கூறும் ஆவணப்படுத்துதல்

இற்றைக்கு 1600 வருடங்களுக்கு முன்பே (கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டு) திருமூலர் திருமந்திரத்தில் தனது செயல்பாட்டை தானே ஆவணப்படுத்தியுள்ளதன் மூலம் ஆவணப்படுத்துதலின் முக்கியத்துவத்தை எமக்குக் கூறியுள்ளார். எமது மூதாதையர் தாங்கள் வாழ்ந்த காலத்தில் நடந்தவற்றை ஆவணப்படுத்தத் தவறியதாலும், சைவசமய, சாஸ்திர, வானியல், மருத்துவம், இன்னும் பல விடையங்கள் பற்றி முனிவர்கள், சித்தர்கள், நாயன்மார்கள், புலவர்கள் உட்பட பல அறிஞர்களால் எழுதிவைக்கப்பட்ட ஏடுகளையும், அரசர்களால் ஆவணப்படுத்தப்பட்ட செப்பேடுகள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றை பின்பு வந்தோர் பாதுகாக்கத் தவறியதாலும், அன்னியர்களின் படை எடுப்புகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும், தென்கிழக்கு ஆசியாவில் பெரிய நூலகமான கிட்டத் தட்ட 97,000 அரிய நூல்களையும், பழமையான ஓலைச்சுவடிகளையும் கொண்ட யாழ் நூலகம் இலங்கை அரசால் 01-06-1981 இல் முற்றாக எரிக்கப்பட்டதாலும், தமிழ்ச் சமுதாயம் குறிப்பாக சைவசமயத்தவர் பெரும் இழப்பிற்கு ஆளாகியுள்ளோம். இதன் விளைவு வரலாறுகள் திரிபு படுத்தப்பட்டும், யாரோ செய்ததை வேறு ஒருவர் செய்ததாகக் கூறுவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. இதனால் எது சரி எது தவறு என அறிய முடியாத நிலையும் இன்றைய சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ளது. பல ஆராய்ச்சியாளர்கள் வருடக்கணக்காக சரியான தகவல்களை அறிவ தற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சிலர் தங்கள் அனு மானங்களை கூறியுள்ளது சரியானதுதானா என்னும் கேள்வி இருக்கத்தான் செய்கின்றது.

திருமந்திரத்தை திருமூலராகிய தான்தான் அருளியதாக அவர் பதிவு செய்த திருமந்திரப் பாடல் எண் 3046



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மூலன்உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன்உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன்உரை செய்த முப்பது உபதேசம்
மூலன்உரை செய்த மூன்றும் ஒன்றாமே"

*திருமூலர் அருளிய மூவாயிரம் பாடல்களும், திருமூலரே சொல்லிய முந்நூறு மந்திரங்களும், திருமூலர் வழங்கிய முப்பது உபதேச மொழிகளும் திருமூலர் தமிழுக்குத் தந்த ஒத்த கருத்துடைய, ஒரே பொருளுடைய தமிழ் மறை எனப் போற்றத்தக்க பெருமை உடையவையாகும்.*

*திருமூலர் தான் உலகிற்கு வந்த நோக்கத்தைக் கூறிய பாடல் எண்* ***92***

" நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளால் நான் இருந்தேனே"

*என் தலைவன் நந்தி. அவன் அருளாலே நான் சாத்தனூர் மாட்டிடையன் மூலன் உடலில் புகுந்தேன். பின் நந்தி அருள் துணை யாலேயே சிவாகம மந்திரம் செப்பலானேன். நந்தி எம் பெருமான் அருள் வழி காட்டுதலின்படியே நான் மெய்ஞ்ஞான சித்தி பெற்றேன். இப்படியாக நான் பெற்றது உற்றது எல்லாமும் நந்தி அருளாலேயே அல்லாமல், இதில் என் செயல் ஒன்றுமில்லை. (திருமூலர் திருமந்திரத்தில் சிவபெருமானை நந்தி என்றே குறிப்பிடுகின்றார்)*

*திருமூலர் திருக்கயிலாய பரம்பரையில் வந்தவர் எனக்கூறிய பாடல் எண்* ***91***

" விளக்கிப் பரமாகும் மெஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன் சொற்போந்து
வளப்பின் கயிலை வழியில் வந்தேனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகம வேதப் பொருளை விளக்கி அருளியவன் பராபரன். மெஞ்ஞானச்சோதி வடிவானவன். அளவிடமுடியாத பெருமை உடையவன். அவனே இன்ப வடிவான நந்தியெம் பெருமான். மனித மனங்களை நடுங்கச் செய்யும் ஆணவ மலங்களைப் போக்கி அருள ஆனந்த நடமிடுபவன். இவன் அருளானையை ஏற்று, வளமிக்க திருக்கயிலாய மலைஞானகுரு, நந்தி பரம்மரையில் வந்தவன் நான்.

திருமூலர் தனது குரு பரம்பரை பற்றிக் கூறும் பாடல் எண் 67

" நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே"

நந்தி எம்பெருமான் திருவருள் கருணையால், மறைப் பொருள் கேட்டுணர்ந்த மாமுனிகள் எட்டுப் பேர்களாவார். அவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சன்றகுமாரர் என்ற நால்வர். சிவயோக மாமுனிவர், பதஞ்சலி (தில்லைத் தாண்டவம் கண்டு மகிழ்ந்த பாம்புக் காலுடைய தவயோகி), வியாக்கிரபாதர் (புலிக் காலுடைய முனிவர்), என்னையும் சேர்த்துக் குருமார் எட்டுப் பேர்.

திருமூலர் தனது சீடர்கள் யார், யார் என கூறிய பாடல் எண் 102

" கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலம்கொள் பரமானந்தர் போக தேவர்
நிலம்திகழ் மூலர் நிராமயத் தோரே"

திருவருளும் குருவருளும் கலந்த மெய்த் தவயோகிகள் காலாங்கர், அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகநாதர், திருமூலர் என்னும் எழுவராவர். இவர்கள் அனைவரும் இறவா உடல் பெற்ற தவஞானிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம் கூறும் பஞ்சமா பாதகங்கள்

மானிடப் பிறவி எடுத்த ஆன்மாக்களால் (மனிதர்களால்) செய்யக் கூடாத உயிர்க் கொலை, பெண் இச்சை (காமம்), கள் உண்ணுதல், திருட்டு, பொய் பேசுதல் ஆகிய ஐந்து செயல்களை அறநூல்களும், சமயநூல்களும் பஞ்சமா பாதகங்கள் எனக் கூறுகின்றன. திருவள்ளுவர் திருக்குறளில் 10 குறள்கள் அடங்கிய அதிகாரங்கள் 33 - கொல்லாமை, 92 - வரைவின் மகளிர், 93 - கள்ளுண்ணாமை, 29 - கள்ளாமை பற்றி மிகத் தெளிவாக, குறிப்பாக இவற்றால் வரும் தீமைகள் பற்றிக் கூறியுள்ளார்.

திருமூலநாயனாரும் திருமந்திரத்தில் பஞ்சமா பாதகங்கள் செய்யாது இருத்தல் பரமானந்தம் எனக் கூறிய பாடல் எண் 200

"கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்துஇன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவைஞானா னந்தத்து இருத்தலே"

உயிர்க்கொலை, திருட்டு, பெண் இச்சை, பொய் பேசுதல், கள் உண்ணுதல் ஆகிய ஐந்தும் மிகப் பெரும் தீச் செயல்களாகும். இந்தத் தீச்செயல்களை விட்டொழித்துத், தலைவனாம் சிவபெருமான் திருவடித் துணை நாடி இன்புற்று இருப்பவர்களுக்கு வேறு வகைத் துன்பங்கள் இல்லை. சித்த சமாதியில் இவர்கள் ஞானானந்தம் அடைந்திருப்பர்.

கொல்லாமை பற்றி திருமந்திரம் பாடல் எண் 197

"பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே"

பற்றிக் கொள்ள வேண்டிய உயர்ந்த ஞானத் தலைவனான சிவபெருமானுடைய பூசைக்கு உகந்த பல மலர்களில் உயர்ந்த மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இன்னொரு உயிரைக் கொல்லாமையாகிய சிறந்த மலர் மாலையே ஆகும். ஒன்றிய மன உறுதியே பூசைக்கேற்ற தீப ஒளியாகும். உணர்ந்தறிந்து இறைவனை வைத்து வழிபடும் உயிர் விழங்கும் இடம் தலை உச்சியாகும்.*

*வதைப்பவர் வதைபடுவர் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் **198***

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றால் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே"

*கொல், வெட்டு, குத்து என்று வெறி கொண்டு திரியும் விலங்கைப் போன்ற கொடியவர்களை வலிமை பொருந்தியவனான எமனின் தூதர்கள் வலிமையான கயிறு (பாசக் கயிறு) கொண்டு கட்டிக் கொண்டு போய் "செல்!", "நில்!" என்று அதட்டி மிரட்டிப் பற்றி எரியும் நரகத் தீயில் "கிடப்பாயாக" என்று அதனுள் தள்ளி வதைப்பார்கள்.*

*காமம் (பிறன்மனை நயவாமை) பற்றி திருமந்திரம் பாடல் எண் **201***

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்திற்கு இடர்உற்ற வாரே"

*அன்புடைய மனைவி வீட்டில் இருக்க மற்றொருவருக்கு உரிமையான பிறன் மனைவியை விரும்பும் இளைஞர் செயல் வீட்டில் காய்த்துத் தொங்கும் பலாப்பழத்தைத் தின்ன முடியாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு அவதிப்படுவது போலாகும்.*

*மாதர் ஆசை மரணத்தின் அழைப்பு எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் **208***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோழை ஒழுக்கம் குளம்மூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூ ழை நுழைந்தவர் போகின்ற வாறே"

*பெண்களோடு கூடிப் பெறுவதே இன்பம் என்று ஓயாது உயிர்ச் சக்தியை வீணாக்கி வாழ்பவர் இதைத் தடுத்து நிறுத்தி அடக்காது விட்டு விட்டால் விரைவில் பாவப் புதைகுழியில் விழுந்தவர் போல் அழிவர்.*

*காமமும் கள்ளும் கயவர்க்கானது எனக்கூறும் திருமந்திரம் பாடல் **326***

"காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்
மாமல மும்சம யத்தில் மயல்உறும்
போமதி யாகும் புனிதன் இணைஅடி
ஓமயஆனந்தத் தேறல் உணர்வுண்டே"

*பெண் இச்சையும், கள் உண்ணுவதும் கீழ் மக்களாகிய தீயவர்களுக்கே ஏற்றதாகும். தான் என்ற முனைப்பாகிய ஆணவமும் சமயத்தில் மயக்கும், புத்தி கெட்டுப் போகும். எனவே பரம் பொரு ளின் தூய திருவடிகளாகிய "ஓம்" என்னும் பிரணவப் பொருளான ஆனந்தத் தேனமுதை உண்டு களித்து உணர்வு பெறுவீராக.*

*கள்ளுண்ணாமை பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் **324***

"கழுநீர்ப் பசுப்பெறின் கயந்தொறும் தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயம் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்
செழுநீர்ச் சிவன்தன் சிவானந்தத் தேறலே"

*பசுகூடக் கழுநீர் (அரிசி கழுவிய நீர்) கிடைக்கும்வரை குளங் களைத் தேடி அலையாது தாகம் பொறுத்துக் கொண்டு காத்திருக் கிறது. பாவி மனிதன் கள் உண்டு கெடுகிறானே, மிருகத்தை விடக் கேவலமாக! என்னே அறியாமை!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் கூறும் அந்தணர் ஒழுக்கம்

சைவசமய மரபில் ஆலயங்களுக்குள்ளும், வெளியிலும் இறை பணியாற்றும், இறைவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து நாம் போற்றும் அந்தணர்களின் கடமைகள், செயற்பாடுகள், ஒழுக்க நெறிகள் பற்றித் திருமூலநாயனார் திருமந்திரத்தில் கூறியுள்ளதைப் பார்ப்போமானால்.

*அந்தணர் ஆற்றும் ஆறு தொழில்கள் பற்றிக் கூறும் பாடல் எண் 224*

" அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பி முப்போதும் நியமஞ்செய்
தம்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே"

வேதம் ஓதுதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், தானம் தருவது, பெறுவது ஆகிய ஆறு பணிகளைச் செய்யும் கடமையுடைய, வேள்வித் தீ வழர்த்து மூன்று வேளையும் நித்திய கடமைகளைச் செய்யும், தங்களுக்குரிய தவ ஒழுக்கம் தவறாது கடைப்பிடித்து, சந்தியா காலங்களில் வேத மந்திரங்கள் ஓதிச் செய்யவேண்டிய நற்கருமங்களை வரையறை செய்பவர்களே மேலான குணநலன்களைக் கொண்ட அந்தணர் ஆவார்.

*அந்தணர் செயற்பாடு பற்றிக் கூறும் பாடல் எண் 227*

" பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யால்உரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை இருந்து
சொருபமது ஆனோர் துகள்இல்பார்ப் பாரே"

பேரின்பப் பேறு அடைவதற்கு உரிய சிறந்த வழியான பிரணவ மந்திரத்தை மனத்தில் எண்ணித் துதித்து, ஆச்சாரியனாகிய ஞான குருவின் வழிகாட்டுதலின்படி, அவர் உபதேசித்த மந்திரத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி, உயர்ந்த தவமார்க்கமாகிய தியானத்தில் இருந்து, சிவவடிவமாகவே விளங்கப்பெறுபவர்கள் குறையற்ற பார்ப்பனர் ஆவார்கள்.

ஆசையை விட்டவர்களே அந்தணர் எனக் கூறும் பாடல் எண் 229

" வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் கேட்டும்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தம் ஆவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தம் கேட்டவர் வேட்கைவிட் டாரே"

வேதாந்த ஞானம் என்றால் என்ன என்பதை அறிய விரும்பிய வேதியர்கள், வேதாந்த ஞானத்தைக் கேட்டறிந்த பின்னரும், தங்கள் ஆசைகளை, பற்றை விடவில்லை. வேதத்தின் முடிவான வேதாந்தம் என்பது, ஆசைகள் அறுந்த இடம். பற்றுக்கள் விட்ட இடம். எனவே உண்மையாகவே வேதாந்த ஞானம் பெற்றவர்கள் என்று சொல்லப் படும் பெருமைக்கு உரியவர்கள், ஆசையைவிட்ட வர்களே.

அந்தணர் எப்படி இருக்கவேண்டும் எனக் கூறும் பாடல் எண் 230

" நூலும் சிகையும் நுவலின் பிரமமோ
நூலது கார்ப்பாசம் நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காண நுவலிலே"

பூநூல் அணிந்திருக்கின்ற, குடுமி வைத்துள்ள ஒருவரைப் பிரமத்தை அறிந்தவர், பிராமணர் என்று சொல்லிவிட முடியுமா? நூல் என்பது பருத்திப் பஞ்சாலான மெல்லிய இழை. நுண்சிகை என்பது தலைமுடி. உண்மையில் நூல் என்பது மறைப் பொருள் உணருதல், நுண்சிகை ஞானமார்க்கம். (முப்புரி நூல் என்பதற்கு இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்றும், நுண்சிகை உச்சித்தலை, புருவநடு என்ற பொருளும் உண்டு) நூலணிந்த மறையவர்கள் இங்கே சொல்லியவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அந்தணர் ஒழுக்கம் பற்றிக் கூறும் பாடல் எண் 231*

" சத்தியம் இன்றித் தனிஞானம் தான்இன்றி
ஒத்த விடையம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை இன்றிஊண்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே"

**உண்மைத் தவ ஒழுக்கம் இல்லாமல், மெஞ்ஞான அறிவும் இல்லாது, உடலோடும், மனத்தோடும் பொருந்தியுள்ள ஐம்புலன்கள் வழிச் செல்லும் ஆசையை விட்டு விலகும் வழியை எண்ணும் நினைப்பும் இல்லாமல், பக்தி இல்லாமல், எல்லாவற்றிற்கும் மேலான ஒன்று பரம்பொருள் என்ற உண்மை அறிவும் இல்லாமல், உண்ணும் உணவில் ஆசை வைத்து அலையும் பைத்தியக்காரர்கள் பிராமணர் ஆகமாட்டார்கள்.**

*யார் அந்தணர் எனக்கூறும் பாடல் எண் 233*

" மறை ஓதுவாரே மறையவர் ஆனால்
மறையோர்தம் வேதாந்தம் வாய்மையில் தூய்மை
குறைஓர்தல் மற்றுள்ள கோலா கலம்என்று
அறிவோர் மறைதெரிந்(து) அந்தணர் ஆமே"

**வேதம் ஓதுபவர்கள் எல்லாம் வேதியர்கள்தாம். ஆனால் வேதம் ஓதும் வேதியர்களின் வேதாந்தம் உண்மையில் உயர்ந்தது எனினும், மற்றுள்ள குறைபாடுடைய பிற நூல்களைக் கற்றல் என்பது, வீண் ஆரவாரம், வெறும் பகட்டு என்பதைக் கற்றுணர்ந்தவர்களே மறையவர். அதாவது வேதியர் ஆவார்.**

**நல்ல அந்தணர் வாழும் ஊர் நன்றாக இருக்கும் எனக்கூறும் பாடல் எண் 234**

" அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் கூறும் நிலையற்ற வாழ்க்கை

*இறந்த உடலுக்கு இதுதான் மரியாதை எனக் கூறும் பாடல் எண் 158.*

" வளத்துஇடை முற்றத்துஓர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடம்உடைந்தால் அவை ஓடென்று வைப்பர்
உடல்உடைந்தால் இறைப் போதும் வையாரே"

இடையின் முன்பாகக் கருப்பையாகிய குளத்திலிருந்து உயிரணுக்களான மண் கொண்டு உயிர்கள் உற்பத்தியாகின்றன. இது உயிர்த் தோற்றம். இன்னொரு பக்கம் குளத்தில் மண் எடுத்துக் குயவன் சட்டி, பானை செய்கிறான். அவன் செய்த மண் குடம் உடைந்து விட்டால் அதை ஓடென்று அதை ஒதுக்கி வைப்பார்கள். ஆனால் உயிர்த் தலைவன் உற்பத்தி செய்த உடல் உயிர் போய்ப் பிணமாகி விட்டால் நொடிப் பொழுது கூட அதை வீட்டில் வைத்திருக்க மாட்டார்கள்.

*அழியும் உடம்பிது அறிக எனக் கூறும் பாடல் எண் 160.*

" அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும்
கொத்தி உலைப்பெய்து கூழ்அட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அரைக்கீரை வித்துண்ணக்
கத்தி எடுத்தவர் காடு புக்காரே"

உடலும் உயிரும் கருப்பையில் உயிர்ப்படைந்து வளர்ந்து உடலெடுத்துப் பிறந்து உயிர் வாழத் தொடங்கியது. காலப் போக்கில் ஒரு நாள் உயிர் உடலை விட்டுப் போய் விட்டது. உடனே அழுது புலம்பி மற்றவர்கள் அந்த உடலைச் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்றார்கள்.

*வீடு பழுதானால் வீழ்ந்து படும் எனக் கூறும் பாடல் எண் 161.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு முகட்டலுக்கு ஒன்றுண்டு
ஓலையான் வேய்ந்தவர் ஊடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே"

உடலுக்கு மேல் உள்ள தலைக்கு முடி இல்லை (வீட்டிற்கு மேல் கூரை). கீழேயும் அடித் தளம் இல்லை. இரண்டு கால்கள் மட்டும் இருக்கின்றன. நடுக்கால் முதுகுத் தண்டின் மேலே சுழு முனை ஒன்று உள்ளது. தலைக் கூரையைத் தசையால் மூடியவர் (ஓலையால் வேய்ந்தவர்) சுழுமுனை நாடி வழியே பிராணனைச் செலுத்தத் தவறினர். இதனால் அழகுறச் செய்யப்பட்ட (வேய்ந்த) வெண்ணிறச் சுக்கிலத்தாலான இந்த உடம்பு அழிகிறது.

மரணம் மனிதனின் துயரம் எனக் கூறும் பாடல் எண் 162.

" கூடம் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலையமும் அற்றது அறுதலும்
பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீயைவைத் தார்களே"

வீடு இருக்கிறது அதிலே கோலங்கள் அழகுகள் இல்லை, ஆட்ட பாட்டம் இல்லை அவ்வாறே உடல் வெறும் கூடாகிக் கீழே கிடக்கிறது. அது முன்பு செய்து கொண்டிருந்த அழகு, அலங் காரங்கள் இப்போது இல்லை. அந்த உடலின் உள்ளே ஓடிக் கொண் டிருந்த பிராண ஓட்டம் (உயிர் கூத்து) ஓய்ந்து விட்டது. ஓய்ந்த தனால் (உயிர் போனதால்) சிலர் ஒப்பாரி வைத்து அழுது, தீயை மூட்டிச் செத்த உடலை எரித்து விட்டார்களே.

பிறப்பும் இறப்பும் பெருந்துயர் அறிக எனக் கூறும் பாடல் எண் **163.**

" முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண்டு ஆண்டினில்
கெட்டது எழுபதில் கேடு அறியீரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமுட்டை முந்நூறு நாட்களில் ஒரு குழந்தையாகப் பிறந்தது. பிறந்த குழந்தை உடல் அமைப்பு எதுவும் நாம் விரும்பியபடி அமைந்ததல்ல. அறிவிலிகளே! இப்படிப் பிறந்த குழந்தை பன்னிரண்டு ஆண்டுகளில் உலக இயல்புகளை உணர ஆரம்பிக்கும். பிறகு எழுபது வயதில் இறந்து படும். இவ்வளவு துன்பம் இப்பிறப்பில். (உடல் அநித்தியம் என்பதை உணரமாட்டீர்களா?.)

பகலும் இரவும் போலப் பிறப்பும் இறப்பும் எனக் கூறும் பாடல் எண் **164.**

" இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சு இருளாவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே"

அகல்விளக்கு இருக்கிறது ஆனால் அதில் சுடர் விட்டுக் கொண்டிருந்த ஒளி கவர்ந்து செல்லப்பட்டுவிட்டது. (உடல் இருக்க உயிர் போய்விட்டது.) உடல் அழியக்கூடியது என்பதை உணராத மூடர்கள் வெறும் பேச்சுப் பேசுவார்கள். பகலும் இரவும் (பிறப்பும் இறப்பும்) மாறி, மாறி வருவதை உணராமல்.

மன்னருக்கும் மரணம் உண்டு எனக் கூறும் பாடல் எண் **166.**

" குடையும் குதிரையும் கொற்றவாளும் கொண்டு
இடையும் அக்காலம் இருந்து நடுவே
புடையு மனிதனார் போகும் அப்போதே
அடையும் இடம்வலம் ஆருயிர் ஆமே"

வெண்கொற்றக் குடையும், விரைந்தோடும் குதிரைப் படையும், அரசற்குரிய வீர வாளும், செங்கோலும் கைக்கொண்டு, செல்லும் காலத்திலும், நடுவிலும் கூடவும் சுற்றிலும் மனிதர் சூழ இருக்கும் காலத்திலும் கூட, உடலில் உள்ள இந்த அரிய உயிர் இடம் வலமாகச் சென்றடங்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் ஒருவனே

சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கையாகிய சகலமும் சிவப்பரம் பொருளாகிய சிவபெருமானே என்னும் தத்துவத்தைச் "சிவஞான சித்தியார்" என்னும் நூலில் "சிவம் சக்தி நாதம்... எனத் தொடங்கும் சுபக்கம் பாடல் எண் 164 இல் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இறைவன் ஒருவனே என்னும் இக்கருத்தைத் திருமூல நாயனார் திருமந்திரத்தில் பின் வரும் இறைவணக்கப் பாடல் எண் 1 இல்

" ஒன்றவன்தானே இரண்டவன் இன்அருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழ்உம்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந்து எட்டே".

ஒன்றாயிருப்பவன் (சிவம்), அவனே சிவனும் சக்தியுமாக இரண்டாகவும் இருக்கின்றான். சக்தியும் சிவமுமென இரண்டாயிருப்பவன் அவனே பிரமன், திருமால், உருத்திரன் என மூன்றாகவும் உள்ளான். அவன் நான்மறை (நான்கு வேதங்கள்) வடிவானவன். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுக்கும் அவனே தலைவன். சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் என்னும் ஆறு சமயப் பிரிவுகளாக இருப்பவன் அவனே. ஏழ் உலகங்களிலும் இருப் பவனும், அவற்றை இயக்குபவனும் அவனே. இப்படி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் தன்வயமாதல், தூய உடலினன் ஆதல், இயற்கை உணர்வடைதல், முற்றும் உணர்தல், பற்றற் றிருத்தல், பேரருள் நோக்கு, முடிவில்லாமை, எல்லையில்லாமை ஆகிய எண்குணத்தவனாக இருக்கின்றான்.

சர்வமும் சதாசிவம் என வலியுறுத்தும் திருமந்திரப் பாடல் எண் 384



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்திஓர் சாத்துமான் ஆமே"

*அறிதற்கு அரியதாகத் தொலைவில் இருக்கிற சிவசோதி, அறிந்துணரக்கூடிய சக்தியாக, இச்சை வசப்பட்டு நாதமாகிய ஒலியைப் பொருந்தி ஒரு விந்து சக்தியாகி படைப்பாகிய சுமையைத் தாங்கும் சதாசிவம், இந்த நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐந்துக்கும் அவை சார்ந்திருக்கின்ற சக்தியாகவும், தான் ஒரு சக்தி உடையவனாகவும் திகழ்கின்றான்.*

*ஒன்றானவன் ஒன்றில் மூன்றானவன் எனக்கூறும் திருமந்திரப் பாடல் எண் 403*

" நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கி அரன்திரு மாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராக இசைந்திருந் தானே"

*எங்கும் நிறைந்திருக்கின்ற சதாசிவத்தோடு ஒன்றிக் கலந்திருக் கின்ற மகேஸ்வரன், காக்கும் தொழிலையும், அழிக்கும் தொழி லையும் செய்கின்ற போது திருமாலாகவும், உருத்திர மூர்த்தியாகவும் இருக்கின்றான். மற்றும் படைப்புத் தொழிலைச் செய்யும் தாமரை மேல் உள்ள பிரமனாகவும் அவனே இருக்கின்றான். இப்படிச் சிவன் ஒன்றானவன், செயலால் ஒன்றி மூன்றானவன்.*

*எகன் அனேகன் சிவனே எனக்கூறும் திருமந்திரப் பாடல் எண் 404*

" ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளந்தான்
ஒருவனு மேஉல கேழும் கடந்தான்
ஒருவனு மேஉட லோடுயிர் தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு உலகங்களையும் படைக்கிறவன் ஒருவனே. படைத்த இந்த ஏழு உலகங்களையும் காப்பாற்றி அருளுபவனும் அவனே. இந்த ஏழு உலகங்களையும் அழிப்பவனும் அவனே. உடலோடு உயிராக இயங்கி வருபவனும் அவனே. அவன் பிரமனாய்ப் படைத்தலையும், திருமாலாய்க் காத்தலையும், உருத்திரமூர்த்தியாய் அழித்தலையும் செய்கின்றான். உலகின் தோற்றம், நிகழ்வு, ஒடுக்கம் என மூன்றிலும் உயிர்ப்புடையவனாக இருப்பவன் சிவபெருமானே.

*திசையும் அவனே தேவனும் அவனே எனக்கூறும் பாடல் எண் 412*

" தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடல்மலை யாதியு மாய்நிற்கும்
தானே உலகில் தலைவனு மாமே"

இச்சிவப் பரம்பொருளே, எல்லாத் திசைகளும் அதனைக் காவல் செய்யும் தேவனுமாய் இருக்கின்றான். இவனே உயிர்களின் உடலாய் உயிராய் உண்மைப் பொருளாய் இருக்கின்றான். கடலும், மலையும் எனக் காணும் பொருள் எல்லாமுமாய் இருந்து, உலகிற்கு ஓர் ஒப்பற்ற தலைவனாகத் திகழ்பவனும் இவனே. சிவனே எல்லாம்.

*படைக்கும் பரம்பொருள் சிவனே எனக்கூறும் திருமந்திரப் பாடல் எண் 417*

" உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் குடமுஞ் சிறுதூதை
மற்றும் அவனே வனையவல் லானே"

உலகத்தைப் படைக்க விரும்பி, அதனைத் தோற்றுவிப்பவன் சிவபெருமானே. உயிர்களுக்குப் பிறவியைக் கொடுத்து உதவுபவனும் அச்சிவபெருமானே. குயவர்கள் சுற்றிச் செய்கின்ற தாழியும் (பேரண்டம்), குடமும் (உலகம்), சிறிய கலயங்களும் (உயிர்கள்) ஆகிய இவற்றை எல்லாம் படைக்கின்றவன் பரம்பொருளாகிய சிவபெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவலிங்கம்

லிங்கம் அடையாளம் எனப் பொருள்படும். லிங்கம் என்பது சித்தரித்தல் எனவும் பொருள்படும், ஐந்தொழிலும் இதில் அடங்கியதால் லிங்கம் எனப்பட்டது எனவும் கூறுவர். எந்த இடத்தில் பிரளயகாலத்தில் பிரபஞ்சம் அனைத்தும் லயம் அடைந்து படைப்புக் காலத்தில் எதிலிருந்து மீண்டும் உற்பத்தி யாகின்றனவோ அதுவே லிங்கம் எனப்படும். இறைவன் (சிவம்) ஆன்மாவின் மேல் உள்ள கருணையினால் ஆன்மாவை ஈடேற்றும் பொருட்டு எடுக்கும் வடிவங்களில் ஒன்று சிவலிங்கமாகும்.

### சேக்கிழார் சுவாமிகள்

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீணாக மணிந்தார்க்கு நிகழ் குறியாம் லிங்கம்" எனக் கூறியுள்ளார்.

சிவலிங்கம் தூலலிங்கம், (கருவறையிலே மூலஸ்தானத்தில் இருப்பது) பத்திரலிங்கம், சூட்சுமலிங்கம் என மூவகைப்படும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. 1.அவ்வியத்தலிங்கம் (நிட்களலிங்கம்) (பரநாதம்) (பரவிந்து), 2.வியத்தாவியத்தலிங்கம் (சிவலிங்கம்) (சதாசிவ வடிவம்) (அருஉருவத்திருமேனி) 3.வியத்தலிங்கம் (25 மகேசுவர வடிவங்கள்) என மூவகைப்படும் எனவும் கூறுவர். சிவலிங்கம் m+c=a, 8+2=10 அ-இறைவன், உ- சக்தி. சிவலிங்கம் சிவபஞ்சாட்சரச் சுடர் அருவஉருவமான நிலையில் யோகத்தின் சின்னமாக இருப்பதாகக் கூறுவர். சிவலிங்கம் மேல்ப்பகுதி ஆகாயம், கீழ்ப்பகுதியான (ஆவுடையார்) பூமி எனவும் கூடக் கொள்ளப்படுகிறது. திருமந்திரம் ஆறு வகை லிங்கம் பற்றிப் பின்வரும் பாடல்கள் மூலம் கூறுகிறது.

*1. அண்டலிங்கம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் 1712*

"இலிங்கம் அதுஆவது யாரும் அறியார்
இலிங்கம் அதுஆவது எண்திசை எல்லாம்
இலிங்கம் அதுஆவது எண்ணெண் கலையும்
இலிங்கம் அதுஆக எடுத்தது உலகே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லிங்கம் குறி அல்லது அடையாளம். உலகத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். இவரின் குறியீடு, அடையாளம் சிவலிங்கம் என்பதை எவரும் உணர்ந்தாரில்லை. திக்கெட்டும் பரவி நிற்பதும், ஆய கலைகள் அறுபத்து நான்கும் சிவலிங்கமே. உலகமுழுதுமே சிவவடிவம். இச்சிவலிங்கமே உலகமாகும் (பிரணவம் என்றும் கூறுவர்).*

*2. பிண்டலிங்கம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் 1726*

"மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே"

*மனிதர்கள் உடம்பு சிவலிங்க வடிவமாகும். மனிதர்கள் உடம்பு கோயிலாகும். மனித உடம்பு சத்தியும் சிவனும் சேர்ந்த சதாசிவம். மனித உடம்பின் ஒவ்வொரு அசைவும் தில்லைச் சிற்றம்பலத் திருநடனமே.*

*3. சதாசிவலிங்கம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 1730*

"கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கை இரண்டெட்டும் பரந்தெழும்
தேடும் முகம்ஐந்து செங்கண்ணின் மூவைந்து
நாடும் சதாசிவ நல்ஒளி முத்தே."

*திருவருளோடு கூடிய பாதங்கள் இரண்டும் பூமியில் பொருந்த, அன்பர்கள் போற்றிப் பாடும் அருள் வழங்கும் திருக்கரங்கள் பத்தும், எட்டுத் திசைகளிலும், விண்ணிலும் மண்ணிலும் விரிந்து பரவி நிற்க, பக்தர்கள், வணங்கித் தொழத் தேடும் திருமுகங்கள் ஐந்தும் அருளொளி வீசும் கண்கள் பதினைந்தும் கொண்டு பக்தி செய்வார் விரும்பித் தேடும் சதாசிவ மூர்த்தி, தேடிப் பணிவார் உள்ளத்துள் முத்தொளியாய் விளங்குவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆத்துமலிங்கம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 1753

""அ"கார முதலாய் அனைத்துமாய் நிற்கும்
"உ"கார முதலாய் உயிர்பெய்து நிற்கும்
"அ"கார "உ"காரம் இரண்டும் அறியில்
"அ"கார "உ"காரம் இலிங்கம் அதாமே."

ஆன்மாவையே லிங்கமாகக் கொள்வது ஆத்மலிங்கமாகும். "அ" கரம் எழுத்தின் முதல், ஒலியின் மூலம். எனவே எல்லாவகையான ஒலிகளோடும் கலந்து இருக்கும். "உ" கரமாகிய சக்தி எல்லா உயிர்ப்பாற்றலுக்கும் காரணமாக இருக்கும். இப்படி உள்ள "அ" கரம் சிவம் என்றும், "உ" கரம் சக்தி என்றும் அறிந்து கொண்டால் "அ" கர, "உ" கரம் லிங்கம் என்பது விளங்கும்.

5. ஞானலிங்கம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 1763

"உருவும் அருவும் உருவோடு அருவும்
மருவு பரசிவன் மன் பல்உயிர்க்கும்
குருவும் எனநிற்கும் கொள்கையன் ஆகும்
தருஎன நல்கும் சதாசிவன்தானே."

கண்ணுக்குப் புலப்படும் உருவத் தோற்றமாகவும், கண்ணுக்குத் தெரியாத அருவமாகவும், உருவமா அருவமா என்று நிச்சயிக்க இயலாதபடி அருஉருவமாகவும், கலந்து விளங்கும் பரம்பொருள் ஆருயிர்கள் அனைத்திற்கும் ஞானகுருவாக, நல்லாசிரியனாக நின்று வழிகாட்டும் இயல்புடையவன் ஆவான். எனவே வேண்டினவர் விரும்பி வேண்டியதை கற்பகத்தரு போல தந்தருள்பவன் சதாசிவப் பரம்பொருளாவான்.


6. சிவலிங்கம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 1773

"குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வாறுஇவை நீண்டு அகன்றானை
வரைத்து வலம் செய்யுமாறு அறியேனே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி எழுப்பும் அலைகள் நிறைந்த, கடல் சூழ்ந்த இந்த உலகமும், இதில் பொருந்தியுள்ள நீரும், விரைந்து பரவும் காற்றும், அக்காற்றில் தோன்றும் நெருப்பும் (நிலம், நீர், காற்று, நெருப்பு) தங்கியிருக்க இடமாக உள்ள ஆகாயமும் ஆகப் பரந்து விரிந்து எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை ஒரு வரையறைக்குள், அடையாளத்துக்குள் வைத்து வழிபடுவது எப்படி என்பதுதான் தெரியவில்லை. உருவத்துள் அடங்கான். இறைவனை உள்ளத்தில் உணர்க என்பது குறிப்பு.



**ஐம்பூத ஸ்தலங்களில் ஒன்றான ஜம்புகேஸ்வரர் ஆலயம் (நீர்)**
**திருவானைக்கா திருச்சி தமிழ் நாடு மாநிலம் – தென் இந்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவைந்தெழுத்து - பஞ்சாச்சர மந்திரம்

இறைவன் தன்னை அடைவதற்கு ஆன்மாவுக்கு அருளிய திருமந்திரமே நமசிவாய என்னும் அருள் மந்திரம். இறைவன் திருவருளைப் பெறும் சிவமகா மந்திரமாகத் திகழும் திருவைந் தெழுத்தில் வரும் "சிவாயநம" சூட்சும பஞ்சாச்சரம். இது இருளை நீக்கி ஞானத்தைக் கொடுக்கும். "நமசிவாய" தூல பஞ்சாச்சரம். இது உலகியல் இன்பத்தைக் கொடுக்கும். திருவைந்தெழுத்தில் வரும் எழுத்துக்களின் உட்பொருள், சி- இறைவன், வா-சக்தி (அருள்), ய- ஆன்மா (உயிர்), ந- திரோதம் (வாழும் விருப்புத் தரும் மறைப்புச் சத்தி), ம -மலம் (மும்மலங்கள்).

மாணிக்கவாசகப்பெருமான் திருவைந்தெழுத்தின் மகிமை யால்த்தான் சிவபுராணத்தை தொடங்கும் போது இறைவனுக்கு முன்பாக திருவைந்தெழுத்தை வைத்து

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க ... எனத் தொடங்கினார்.

திருஞானசம்பந்தப் பெருமான் தான் வேண்டாத திருமண பந்தத்தை ஏனெனக்குத் தந்தீர் எனப் பாடியபின் தான் கேட்பதைத் தரவல்ல நமச்சிவாயப்பதிகத்தை

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" எனத் தொடங்கி "நாதன் நாமம் நமச்சிவாயவே" என முடியும் பாடலில் தொடங்கி "நந்தி நாமம் நமச்சிவாயவே" எனத் தொடங்கும் பாடலில் முடித்துள்ளார்.

அப்பர் பெருமானும் தம்மை கல்லுடன் கட்டிக் கடலில் வீசிய பின்பு இறை அருளால் கரை சேர்ந்த பின் பாடிய நமச்சிவாயத் திருப்பதிகத்தில் "விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்" எனத் தொடங்கி "நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே." எனவும், "இல்லக விளக்கது இருள் கெடுப்பது" எனத் தொடங்கி "நல்லக விளக்கது நமச்சிவாயவே." எனவும் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் தனது நமச்சிவாயப் பதிகத்தில்

"இட்டனும்படி ஏந்துவார் இகழ்ந்து" எனத் தொடங்கி "சொல்லும் நாமம் நமச்சிவாயவே." எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின் அஞ்செழுத்தை
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே"

*எனவும் பாடியுள்ளனர்.*

*திருமந்திரத்தில் தூல பஞ்சாச்சரம் பற்றிய பாடல் எண் 2698*

" ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பது எழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்பது எழுத்தே அஞ்செழுத்து ஆமே"

*ஐம்பது எழுத்துக்களாலேயே ஆனவை அனைத்து வேதங்களும். ஐம்பது எழுத்துக்களே எல்லா ஆகமவிதிகளும். இந்த ஐம்பது எழுத்துக்களும் பொருந்தியுள்ள முறையை உணர்ந்து விட்டால், ஐம்பது எழுத்துக்களும் ஐந்தெழுத்தில் அடங்கும் என்பது தெரியவரும். பண்டைத் தமிழில் ஐம்பது எழுத்துக்கள் இருந்தன என்றும் ஓம் என்னும் பிரணவமும் சேர்ந்து ஐம்பத் தொன்று என்றும் கூறப்படுகின்றது. சிலர் "அ" முதல் "க்ஷ" வரை உள்ள எழுத்துக்கள் ஐம்பது அவை மூலாதாரம் 4, சுவாதிட்டானம் 6, மணிப்பூரகம் 10, அநாகதம் 12, விசுத்தி 16, ஆஞ்ஞை 2 ஆக எழுத்துக்கள் 50 என்றும் பொருள் கொள்வர்.*

*திருமந்திரத்தில் சூக்கும பஞ்சாச்சரம் பற்றிய பாடல் எண் 2709*

" எளிய வாதுசெய்வார் எங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகு மனத்தராயத்
தெளிய ஓதிச் சிவாயநம என்னும்
குளிகை இட்டுப் பொன்ஆக்குவன் கூட்டையே"

*மிக எளியனாக இறைவனை எண்ணி, எள்ளி நகையாடி வீண்வாதம் செய்பவர்கள் வீணர்கள். ஒளி வடிவாக உள்ள அவனைச் சிந்தித்து உள்ளம் உருகித் தியானிப்பவர்கள் முன்னே அவன் பேரொளிப் பிளம்பாகத் தோன்றி அருளுவான். எனவே சிவாயநம*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் செபியுங்கள், செபித்தால் இரசமணியால் இரும்பைப் பொன்னாக்குவது போல அப்பரம்பொருள் உங்கள் ஊனுடலை ஒளிவீசும் பொன்னுடலாக்கி அருளுவான்.

திருமந்திரத்தில் அதிசூக்கும பஞ்சாச்சரம் பற்றிய பாடல் எண் ***2718***

" சிவாயநம எனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெட நிற்க ஆனந்தமாமே"

சிவாயநம என்று சொல்லிச் சிவசிந்தனையில் ஒன்றி, மனம் அடங்கி இருக்கும் பக்குவ நிலை பெற்றுவிட்டால் போதும், துன்பம் இருக்காது. வீணே துயரப்பட வேண்டியிருக்காது. சிவப்பரம் பொருளுக்கே தன்னை ஒப்படைத்துவிட்டு, அடிமை ஆக்கிக் கொண்டு, சிவாய சிவ சிவ என்றே ஓயாது சிந்தை செய்வார்க்கு வாழ்வில் ஆபத்து, துன்பம் இல்லை. அபாயம் கெட அவர்கள் என்றும் மகிழ்ச்சியில் திளைத்திருப்பர்.

திருமந்திரத்தில் சிவாயநம, நமசிவாய பற்றிக் கூறும் பாடல் எண் ***2700***

" அகரஆதி ஈர்எண் கலந்த பரையும்
உகரஆதி தன்சத்தி உள்ஒளி ஈசன்
சிகரஆதி தான் சிவவேதமே கோணம்
நகரஆதி தான் மூலமந்திரம் நண்ணுமே"

தமிழ் உயிர் எழுத்துக்கள், "அ" முதல் பதினாறாகும். "உ" கரம் முதலாக விளங்கும் சக்தியின் உள் ஒளியாக விளங்குபவன் ஈசனே ஆன சிவப்பரம்பொருளேயாகும். "சி" கரத்தை முதலாகக் கொண்டு செபிக்கப்படும் சிவாயநம என்பதே சிவ வேதம் ஆகும். "ந" கரத்தை முதலாகக் கொண்டு ஓதப்படும் நமசிவாய என்பது மூல மந்திரமாகும். இதுவே மூலாதாரம் தொடங்கி உடம்பு முழுதும் பொருந்தி நிற்கும். இந்தச் சிவ வேதமே உயிர்களைத் தீய வழிச்செல்லாது திருத்தி நல்வழிப்படுத்தும் அங்குசம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜ தத்துவம்

இறைவன் "சிவாயநம" என்கின்ற திருவைந்தெழுத்துக்களையே தனது திருமேனியாகக் கொண்டு உயிர்களின் பிறவித்துயர் நீங்குவதற்காக நடனம் புரியும் தோற்றமே நடராஜர் தோற்றமாகும். தூல ஐந்தெழுத்தில் (நமசிவாய) ந - திருவடி, ம - திருவயிறு, சி - திருத்தோள், வ -திருமுகம், ய - திருமுடி. சூக்கும ஐந்தெழுத்தில் (சிவாயநம) சி - உடுக்கை எந்திய திருக்கரம் படைத்தலையும், வா- வீசிய இடது திருக்கரம் அருளலையும், ய - வலது அபய கரம் காத்த லையும், ந-நெருப்பை ஏந்திய இடது திருக்கரம் அழித்தலையும், ம- முயலகனைக் கீழே அழுத்தும் திருவடி மறைத்தலையும், திருவாசி "ஓம்" என்னும் பிரணவத்தையும், அதில் உள்ள ஒளிச்சுடர்கள் "ஓம்" என்ற நாதப்பிரம்மத்தின் விரிவான 51 எழுத்துக்களையும் குறிக்கும்.

இறைவன் ஆன்மாக்களுக்காக ஆடும் நடனம் நான்கு விதம்களாகும்

1. ஊனநடனம் (மோக காமிகளுக்காக நிகழ்த்தப் பெறுவது) இதில் படைத்தல் உடுக்கை ஏந்திய திருக்கரம், காத்தல் அமைந்த திருக்கரம், அழித்தல் அக்கினி ஏந்திய திருக்கரம், மறைத்தல் அழுத்தமாக ஊன்றிய திருவடி, அருளல் தூக்கிய திருவடி ஆகியவற்றால் குறிக்கப்படுகின்றன.

2. ஞானநடனம் (முத்தி காமிகளுக்காக நிகழ்த்தப் பெறுவது) இதில் உடுக்கை ஏந்திய திருக்கரம் மாயாமலத்தை நீக்குவதற்கும், அக்கினி ஏந்திய திருக்கரம் கன்ம மலத்தைச் சுடு வதற்கும், ஊன்றிய திருவடி ஆணவமலத்தை அடக்குவதற்கும், தூக்கிய திருவடி பேரின்பம் அருளுவதற்கும், அமைந்த திருக்கரம் பேரின்பத்தில் ஆன்மாவை அழுத்தம் செய்வதற்கும் பயன்படுகின்றன,

3. ஆனந்தநடனம் (மும்மலம் நீக்கி வீடு பேறு அளிக்கும்) இதில் டமருகம் ஏந்திய திருக்கரம் துடியை அசைத்தல் பக்குவம் எய்திய ஆன்மாவின் உணர்விலிருந்து மாயையை உதறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்குவதையும், ஓம அங்கி எனப்படும் அக்கினியை ஏந்திய திருக்கரம் ஆன்மாவின் தொல் வினைகளாகிய கன்மவினைகள் முளையாதவாறு சுடுவதையும், ஊன்றிய திருவடி ஆணவம் மேலிடாமல் அதன் இரு ஆற்றல்களான ஆவாரக சக்தியையும் (ஆணவம் ஆன்மாவை மறைக்கும் செயலையும்) அதோ நியாமிகா சக்தியையும் (கீழ் வீழ்த்தும் செயலையும்) கெடுத்து ஆணவ ஒடுக்கம் ஏற்படச் செய்வதையும், தூக்கிய திருவடி சகல, கேவல நிலைகளில் சுழன்று வந்த உயிரை அதிலிருந்து விடுவித்து அதில் மீளாதபடி துரிய அருள் நிலைக்கண் தூக்கி நிறுத்தி உய்விப்பதையும், அவ்வெடுத்த திருவடியின் குஞ்சித (வளைந்த) நிலையும் அதற்கொப்ப அப்பாதத்தைக் காட்டும் திருக்கையும், நில் என்னும் பாணியிலும் உடனாக அருகிருக் கிறேன் என்ற பாணியிலும் அமைந்த அபய கரமும், துரியாதீதம் என்னும் ஆனந்த நிலையில் ஆன்மாவை அழுத்தும் குறிப்பாக அமைந்து பெருங்கருணைப் பெருக்கால் அபயகரத்தால் பேரா னந்தக் கடலில் ஆன்மா மூழ்கடிக்கப்படுவதையும் பாவனை செய்கிறது.

4. பெருநடனம் (சீவன் முத்தருக்காக நிகழ்த்தப் பெறுவது) பிறப்பறுப்பதற்காக நிகழ்த்தப்பெறுவது.

திருநடனக் காட்சி பற்றிய சில அருளாளர்களின் கூற்றைப் பார்ப்போமானால்

**சேக்கிழார் பெருமான்**

" கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி ............
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி."

**அப்பர் பெருமான்**

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும் .......
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் ......
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் இடையில்*

..நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே .........

*திருமந்திரத்தில் ஆனந்தநடனம் பற்றிய பாடல் 77*

" மாலாங்கனே இங்கு யான் வந்த காரணம்
நீலாங்க மேனியன் நேரிழையாள் ஒடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே."

***மாலாங்கனே நான் இவ்வுலகிற்கு வந்த காரணம் நீலவண்ண நேரிழையாள் சக்தியுடன் உலகத் தோற்றத்திற்கு மூல காரணமாம் ஆனந்த நடனத்தின் அரும் பொருளாய் வந்த ஞான வேதத்தைச் சொல்வதற்காகத்தான்.***

*திருமந்திரம் பாடல் 2722*

" எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவன்அருள் தன் விளையாட்டதே"

***சிவபெருமானுக்குத் திருமேனி, சிவசக்தி. விண்ணும் மண்ணும் என எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது சிவசக்தி சொரூபமே. எனவே காணும் இடமெல்லாம் சிவசக்தி தோற்றம். எங்கும் சிவசக்தி ஆன தால் எல்லா இடமும் சிதம்பரமே. எங்கும் இறைவன் திருநடனமே. இப்படி எங்கும் சிவசொரூபமாக இருப்பதால் எங்கும் எல்லா வற்றிலும் பொருந்தியிருக்கும் சிவபெருமான்தன் அருள் விளை யாட்டு (திருநடனம்) படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுமே அத்திருக்கூத்து. சிதம்பரம், இறைவன் ஓயாது நடனமாடிக்கொண்டிருக்கும் இடம் இருதயஸ்தானம் என்றும் கூறுவர்.***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருமந்திரம் பாடல் 2723*

" சிற் பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற் பதமாம் அந்தச்சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனை பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே"

ஞானத்திரு உருவாகவும், சோதி ஒளி வடிவாகவும் உள்ள சிவப் பரம்பொருள், அருள் விளையாட்டாக ஐந்தொழிலும் புரிவது போல, உலக இயக்கம் ஒழுங்குற நடைபெற ஐவகைக் கூத்தினையும் நிகழ்த்துகின்றான். அவை சிவானந்தத்தைச் சீவன்களுக்கு அருளும் கூத்து. சொல்லும் பொருளாக உள்ள "ஓம்" எனும் பிரணவ ஒலியில் விளங்கும் அழகியல் கூத்து. பொற்பதியாகிய சித்தாகாசத்தில் விளங்கும் கூத்து. பொன்னம் பலமான தில்லைப் பொன்னம் பலத்தில் ஆடும் அம்பலப் பரவெளிக் கூத்து. ஆருயிர்கள் எல்லாம் கண்டு களித்து இன்புற ஆடும் அற்புதமான ஆனந்த நடனம் என்னும் நடனங்களாகும். இப்படி மன்றிலும், மனதிலும், வெளியிலும், ஒளியிலும், உயிரிலும் கலந்து நடனமிடும் கூத்தன், சிவப்பரம் பொருளின் அளப்பரிய ஆற்றலை அறிந்துணர யாரால் இயலும்?.



**ஐம்பூத ஸ்தலங்களில் ஒன்றானதிருக்காளத்தியப்பர் ஆலயம் (காற்று)**
**திருக்காளஹஸ்தி ஆந்திர மாநிலம் – தென் இந்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக் கூத்து (திரு நடனம்)

சிவன், "சிவாயநம" என்கின்ற திருவைந்தெழுத்துக்களையே தனது திருமேனியாகக் கொண்டு உயிர்களின் பிறவித்துயர் நீங்குவதற்காகவும், உலக இயக்கம் ஒழுங்குற நடைபெறவும் நடராஜர் ரூபத்தில் ஆடும் நடனங்கள் திருக் கூத்து (திரு நடனம்) எனப் போற்றப்படுகின்றன. தென் இந்தியாவில், (தமிழ் நாடு) ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் (பஞ்ச கிருத்தியம்) ஆகியவற்றைக் குறித்து ஆடிய இடங்கள் பஞ்ச சபைகள் (ஐம் பெரும் சபைகள்) எனவும், ஆடிய நடனங்கள் (சிவானந்த நடனம், அழகு நடனம், பிரணவ நடனம், அம்பலக் கூத்து, ஆனந்தக் கூத்து) தாண்டவம் எனவும் அழைக்கப்படுகின்றன. மேலும் திரு அதிகை, திருவிற்குடி, திருக்கோவலூர், திருக்கொறுக்கை, திருக்கடவூர், திருப்பறியலூர், வழுவூர், கண்டியூர் ஆகிய எட்டு வீரட்டத்தலங்களிலும் ஆடியவையுடன் அறுசமயக் கூத்து உட்பட பல நடனங்களை இறைவன் ஆடிக்கொண்டிருக்கின்றான்.

ஆன்மாக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் திருநடனம் நடப்பதாகக் கூறும் திருமூலநாயனார், திருமந்திரத்தில் பாடல் எண் **2724**

> " தான் அந்தம் இல்லாச் சதானந்த சக்திமேல்
> தேன்உந்தும் ஆனந்த மாநடம் கண்டீர்
> ஞானம் கடந்து நடம்செய்யும் நம்பிக்கு அங்கு
> ஆனந்தக் கூத்தாட ஆடரங்கு ஆனதே"

தோற்றமும் முடிவும் இல்லாத சிவப் பரம்பொருள் முடிவில்லாதவன். மெய் பொருளானவன். அவன் ஆனந்த சக்தியை ஆதாரமாகக் கோண்டு ஆடும் திருக்கூத்து, ஆன்மாக்களுக்கு உயிர்ப்பைத் தரும். தேன்போல் உள்ளத்தில் தித்திக்கும். மாபெரும் இத்திருநடனம் காண்பவர்கள் அறியும் அறிவின் எல்லை கடந்து, அண்டப் பெருவெளியே, தான் ஆடும் நடன அரங்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் நாதனுக்கு அன்பர் உள்ளமும் ஆடரங்காகும் என்பதை உணருங்கள்.

1. இறைவன் "ஆனந்த தாண்டவம்" (வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி) ஆடிய சிதம்பரம் திருமூலட்டநாதர் ஆலய நடராஜர் சன்னிதியே பொற்சபை (பொன்னம்பலம், கனக சபை, பொன் மன்றம்) ஆகும். இத்திருநடனத்தை கண்டுகளித் தவர்கள் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர் ஆகியோர்.

இந்த நடனம் பற்றி திருமந்திரம் பாடல் 2722

"எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவன்அருள் தன் விளையாட்டதே"

சிவபெருமானுக்குத் திருமேனி சிவசக்தி. விண்ணும் மண்ணும் என எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது சிவசக்தி சொரூபமே. எனவே காணும் இடமெல்லாம் சிவசக்தி தோற்றம். எங்கும் சிவசக்தி ஆனதால் எல்லா இடமும் சிதம்பரமே. எங்கும் இறைவன் திருநடனமே. இப்படி எங்கும் சிவசொரூபமாக இருப்பதால் எங்கும் எல்லாவற்றிலும் பொருந்தியிருக்கும் சிவபெருமான் தன் அருள் விளையாட்டு (திருநடனம்) படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுமே அத்திருக்கூத்து. சிதம்பரம் இறைவன் ஓயாது நடனமாடிக்கொண்டிருக்கும் இடம் இருதயஸ்தானம் என்றும் கூறுவர்.

மேலும் திருமந்திரம் பாடல் எண் 2743 இல்

" மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொன் கூத்தனை யார் உரைப்பாரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்க மணி ஒளி போல, ஒளி வடிவாக நடமிடும் நாதனை, வளம் மிக்க பேரம்பலமாகத் திகழும் தில்லைப் பொன்னம்பலத்தே திருநடனம் புரிபவனை, விரிசடைகளாட விளங்கும் வேதாந்தக் கூத்தனை, எட்டத்தே உள்ள வெட்ட வெளி ஆகாசத்தில், விரிசடைகளாட ஆனந்த நடனமிடும் அண்ணலை, உயர்ந்த பொன்போல ஒளிநடம் புரிபவனை யார் அறிவார்?. அவன் பெருமையை யார் அளவிட்டுச் சொல்ல இயலும்?.

மேலும் திருமந்திரம் பாடல் **2723**

"சிற் பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற் பதமாம் அந்தச்சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனை பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே"

ஞானத்திரு உருவாகவும், சோதி ஒளி வடிவாகவும் உள்ள சிவப் பரம்பொருள், அருள் விளையாட்டாக ஐந்தொழிலும் புரிவது போல, உலக இயக்கம் ஒழுங்குற நடைபெற ஐவகைக் கூத்தினையும் நிகழ்த்துகின்றான். அவை சிவானந்தத்தைச் சீவன்களுக்கு அருளும் கூத்து. சொல்லும் பொருளாக உள்ள "ஓம்" எனும் பிரணவ ஒலியில் விளங்கும் அழகியல் கூத்து. பொற்பதியாகிய சித்தாகாசத்தில் விளங்கும் கூத்து. பொன்னம்பலமான தில்லைப் பொன்னம் பலத்தில் ஆடும் அம்பலப் பரவெளிக் கூத்து. ஆருயிர்கள் எல்லாம் கண்டு களித்து இன்புற ஆடும் அற்புதமான ஆனந்த நடனம் என்னும் நடனங்களாகும். இப்படி மன்றிலும், மனதிலும், வெளியிலும், ஒளியிலும், உயிரிலும் கலந்து நடனமிடும் கூத்தன், சிவப்பரம் பொருளின் அளப்பரிய ஆற்றலை அறிந்துணர யாரால் இயலும்?.

மேலும் திருமந்திரப் பாடல் எண் **2740** இல்

"அடியார் அரன்அடி ஆனந்தம் கண்டோர்
அடியார் ஆனவர் அத்தர் அருள் உற்றோர்
அடி ஆர்பவரே அடியவர் ஆமால்
அடியார் பொன்னம்பலத்து ஆடல் கண்டாரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் திருவருளால், அவன் திருவடிப்பேறு பெற்றவர்களே, சிவானந்தம் அடைந்தவர்களே, சிவனடியார் ஆவர். சிவனுக்கே அடிமையாகி, சிவனருள் பெற்றவர்களே சிவனடியார் எனப்படும் மெய்யடியார் ஆவர். மேலும் சிவபெருமான் திருவடி இன்பத்தை எண்ணி, அதையே இடையறாது சிந்தித்திருப்பவர்களே சிவனருள் பெற்ற சீலர் ஆவர். இவர்களே இறைவன் பொன்னம் பலத்தில் ஆடும் திருநடனம் கண்டு களிக்கும் பேறு பெற்றவராவார்.

மேலும் திருமந்திரப் பாடல் **2790** இல்

" இருவரும் காண எழில் அம்பலத்தே
உருவோடு அருவோடு ஒரு ரூபாரூபமாய்த்
திருவருட் சத்திக்குள் சித்தா னந்தன்
அருளுருவாக நின்று ஆடல் உற்றானே"

பதஞ்சலி, புலிக்காலுடைய வியாக்கிர பாதர் என்னும் இரு தவமுனிவர்களும் காணத் தில்லைச் சிற்றம்பலத்தே திருநடனம் புரிந்தருளினான் சிவப் பரம்பொருள். உருவமாயும், அருவமாயும் உள்ள இறைவன், திருவருள் சக்தியாகிய உமையின் மனத்துள்ளே மகிழ்ச்சியை விளைக்கின்ற சித்தானந்த சிவமூர்த்தி, அம்பலத்தில் அருவடிவாக நின்று திருநடம் புரிகின்றான்.

2. இறைவன் "திரிபுர தாண்டவம்" (வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி) ஆடிய குற்றாலம் குற்றாலநாதர் ஆலய நடராஜர் சன்னிதியே சித்திர சபை (சித்திர அம்பலம், சித்திர மன்றம்) ஆகும். இத்திருநடனத்தை கண்டுகளித்தவர் பிரம்மதேவன்.

3. இறைவன் "ஊர்த்துவ தாண்டவம்" (வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி) ஆடிய திருவாலங்காட்டில் உள்ள ஆலய நடராஜர் சன்னிதியே இரத்தின சபை (இரத்தின அம்பலம், மணி மன்றம்) ஆகும். இத்திருநடனத்தை கண்டுகளித்தவர் காரைக்கால் அம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இறைவன் "சந்தியா தாண்டவம்" (இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கி) ஆடிய மதுரையில் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய நடராஜர் சன்னிதியே வெள்ளி சபை (வெள்ளியம்பலம், வெள்ளி மன்றம்) ஆகும். இத்திருநடனத்தையும் கண்டு களித்தவர்கள் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர் ஆகியோர்.

5. இறைவன் "திருத்தாண்டவம்" (வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி) ஆடிய திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் சந்தன சபாபதி ஆலய நடராஜர் சன்னிதியே தாமிர சபை (தாமிர அம்பலம், தாமிர மன்றம்) ஆகும்.

திருநடனத்தின் உட்கருத்தை கூறும் திருமந்திரம் பாடல் எண் 2787

"ஆதிநடம் செய்தான் என்பார்கள் ஆதர்கள்
ஆதிநடம் செய்கை யாரும் அறிகிலர்
ஆதிநடம் ஆடல் ஆரும் அறிந்தபின்
ஆதிநடம் ஆடலாம் அருட் சத்தியே"

ஆதியாகிய சிவப்பரம்பொருள் நடனம் ஆடினான் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்பவர்கள் அறிவற்ற மூடர்கள். இறைவன் நடனம் ஆடியதை யாரும் பார்த்ததில்லை. ஆதியாகிய சிவம் எங்கே நடனமாடுகிறான் என்று அறிந்து கொண்டால், இறைவன் அவரவர் உள்ளத்திலேதான் ஆடுகின்றான் என்பதும், அவனுடலில் பாதியான அருட்சக்தியே அதற்குத் துணையாய் இருக்கிறாள் என்பதும் புரிய வரும்.



ஐம்பூத ஸ்தலங்களில் ஒன்றான
அண்ணாமலையார் கோயில் (நெருப்பு)
திருவண்ணாமலை தமிழ் நாடு
மாநிலம் – தென் இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தியின் பெருமை

இறைவன் (சிவம்) ஆன்மாக்களின் மேல் கொண்ட கருணையினால் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு தான் செயல்படுவதற்காகச் சக்தியாகத் திருமேனி கொள்கிறான். இக்கூற்றுக்கு வலுச்சேர்ப்பது போலப் பல புராதன ஆலயங்களில் லிங்க வடிவில் பராசக்தி காணப்படுகிறாள். இருக்கு வேதம் தேவீ சூக்தம் தேவீ, தானே எல்லாமாய் இருந்து உலகைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருள் புரிவதை தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

*திருக்களிற்றுப் படியார் பாடல் எண் 1 இல்*

" அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் – அம்மையப்பர்
எல்லா உலகிற்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர்" *எனக் கூறியுள்ளார்.*

*திருமந்திரம் இக்கருத்தையே "சிவனும் சக்தியும் ஒன்றே" என்று கூறும் இறைவணக்கப் பாடல் எண் 1.*

" ஒன்றவன்தானே இரண்டவன் இன்அருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழ்உம்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந்து எட்டே".

இப்பாடலின் பொருள் "ஒன்றாயிருப்பவன், அவனே சிவனும் சக்தியுமாக இரண்டாகவும் இருக்கின்றான். அவனே பிரமன், திருமால், உருத்திரன் என மூன்றாகவும் உள்ளான். அவன் நான்மறை (நான்கு வேதங்கள்) வடிவானவன். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுக்கும் அவனே தலைவன். சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் என்னும் ஆறு சமயப் பிரிவுகளாக இருப்பவன் அவனே. ஏழ் உலகங்களிலும் இருப்பவனும், அவற்றை இயக்குபவனும் அவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் தன்வயமாதல், தூய உடலினன் ஆதல், இயற்கை உணர்வடைதல், முற்றும் உணர்தல், பற்றற்றிருத்தல், பேரருள் நோக்கு, முடிவில்லாமை, எல்லையில் லாமை ஆகிய எண்குணத்தவனாக இருக்கின்றான்." என்பதாகும்.

ஒரு சக்தி நவசக்தியாக இயங்குகிறாள் எனக் கூறும் பாடல் எண் 1046

" திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே"

சூரியன், சந்திரன், அக்கினி என்று மூன்று கூறாக உள்ள திரிபுரை, அழகானவள், ஆகாயவடிவானவள், உலகத்தை, உயிர் களைப் பரிவுடன் காக்கும் சிவந்த நிறம் கொண்டவள், துர்க்கை, பல நிறமுடையவள், கரிய நிறமுடைய மகேசனுக்குச் சக்தியாக விளங்கும் ஈஸ்வரி, நினைப்பவர் மனத்துள் நின்றருளும் சதாசிவ சக்தியான மனோன்மணி என்று நவசக்தியாக விளங்குகிறாள்.

சக்தியின் அருளால்தான் உலகம் இயங்குகின்றது எனக் கூறும் பாடல் எண் 1053

" அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகு மாறு அறியேனே"

அன்னை சக்தியை அறிந்துணராத தேவர்களும் இல்லை. இந்தச் சக்தி இல்லாமல் செய்யக்கூடிய தவங்களும் இல்லை. இவள் துணையில்லாமல் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் புரியும் ஈசர்களும் அதைச் செய்யும் சக்தி அற்றவராவார்கள். அவள் துணை இல்லாமல் திருவடிப்பேறு பெறும் வழியும் நான் அறியேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரின்ப வாழ்வு தருபவள் எனக் கூறும் பாடல் *1056*

"பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்
தராசத்தி யாய்நின்ற தன்மை யுணரா
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணிய மாகிய போகமே"

அன்னை பராசக்தி எல்லாவிதத்திலும் மிகப் பெரும் ஆற்றலுடைய அருட் சக்தியாகும். உலக உயிர்களைத் தாங்கும் ஆதார சக்தியாக இருப்பவளும் அவளே என்பதை உணர்க. யுகங்கள் தோறும் பரவி நின்று அருள் பாலிக்கும் பராசக்தி அவளே. உயிர்களுக்குப் புண்ணிய பலனைத் தந்தருளும் பேரின்ப வாழ்வும் அவளே.

மூவருக்கும் முதல்வியாயிருப்பவள் பராசக்தி எனக் கூறும் பாடல் எண் *1087*

"காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனும்
காணுந் தலைவிநற் காரணி காணே"

காணப்படுகின்ற தெய்வங்கள் அனேகம். இப்படிப் பலவாகத் தெய்வங்கள் இருப்பது, தங்கம் என்ற ஒரு பொருளில் இருந்து அவரவர் விருப்பத்திற்கேற்ப அணிந்து கொள்ளும் பலவகையான ஆபரணங்களைச் செய்து கொள்வதைப் போன்றதே ஆகும். தெய்வங்கள் பலவாக இருந்தாலும், அவை யாவற்றிலும் பெருமையாகப் பேசப்படும் சிவன், பிரமன், திருமால் ஆகிய மூவருக்கும் கூட, அவர்கள் செயல் விழங்கிக் காணக் காரணமாக இருப்பவள் தேவி பராசக்தியே.


ஆதாரம் பன்னிரண்டும் ஆனவள் பராசக்தி எனக் கூறும் பாடல் எண் *1124*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆதி அனாதி அகாரண காரணி
வேதமது ஆய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற
சோதி தனிச்சுடர் சொரூப மாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண்டு ஆதியே"

அன்னை சக்தி ஆதி முதலானவள். அனாதி காலம் தொட்டு இருப்பவள். முன்னைப் பழைமைக்கும் பழைமையானவள். தனக்கு ஒரு காரணத் தன்மை அற்றவள். என்றாலும் உலக இயக்கம் தொடங்கி ஒடுக்கம் வரை அனைத்துக்கும் காரணமாக இருப்பவள். வேதப் பொருளானவள். வேதம் ஓதுவோர்க்கு சோதிச் சுடராய், சுடரொளிச் சொரூபமாய் இருப்பவள். பரம்பொருளின் உடம்பில் பாதியிடம் கொண்ட பராபரை. அவளே பன்னிரண்டு ஆதாரங்களுக்கும் (ஆதாரம் ஆறு, நிராதாரம் ஆறு) ஆதி சக்தியாவாள்.



**ஐம்பூத ஸ்தலங்களில் ஒன்றான நடராஜர் கோயில் (ஆகாயம்) சிதம்பரம்
இறைவன் ஆனந்த தாண்டவம் ஆடிய பொற்சபையும் இங்குள்ளது.
தமிழ் நாடு மாநிலம் – தென் இந்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்ட வீரட்டம்

அட்ட(அஷ்ட) என்றால் எட்டு. வீரட்டம் என்றால் இறைவன் மறக்கருணையினால் ஆற்றிய அருட் செயல்கள் நடந்த இடங்கள். இவை வீரட்டானம், அட்ட வீரட்டத் தலங்கள் எனக் கூறப்படுகின்றன. அவையாவன 1.அறியாமை அழிந்த இடம் - திருக்கோவலூர்-அந்தகாசுரனை அழித்த இடம், 2.ஆணவம் ஒழிந்த இடம்-திருப்பறியலூர் - தட்சன் தலை எடுத்த இடம், 3.அகந்தை மறைந்த இடம் - திருக்கண்டியூர் -பிரமனின் ஐந்தாவது தலையை எடுத்த இடம், 4.குரோதம் ஒழிந்த இடம் - திருவிற்குடி-சலந்திராசுரனை அழித்த இடம், 5.மும்மலம் ஒழிந்த இடம்-திருவதிகை- முப்புரம் எரித்த இடம், 6.சினம் அழிந்த இடம்-வழுவூர் - கஜமுகாசுரனை அழித்து அவன் தோலை ஆடையாக அணிந்த இடம், 7.எமனை வென்ற இடம்- திருக்கடவூர் - எமனை காலால் உதைத்து மார்க்கண்டேயரைக் காத்த இடம், 8.காமனை அழித்த இடம் - திருக்கொறுக்கை -மன்மதனை எரித்த இடம். திருமந்திரத்தில் அட்ட வீரட்டத்தைப் பார்ப்போமானால்

அறியாமை அழிந்த இடம் அறியாமை அழிய இறை அருள் வேண்டும் எனக்கூறும் பாடல் எண் *339*

"கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலம்கைக் கொண்டுகொன் றானே"

குருடனைப் போன்ற அசுரன் (அந்தகாசுரன்) தான் பெற்ற வரத்தின் வலிமையால், உலகத்து உயிர்களை எல்லாம் துன்புறுத்துகின்றான் என்று தேவர்கள் ஈசனிடம் முறையிட, ஈசனும் தன் மூவிலைச் சூலத்தால் (திரிசூலம்) அசுரனைக் கொன்றான்.

ஆணவம் ஒழிந்த இடம் ஆணவம் அழிய இறை அருள் வேண்டும் எனக்கூறும் பாடல் எண் *340*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தான்அங்கி இட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே"

தட்சாயிணியாகப் பிறந்த பார்வதி தேவிக்குத் தகப்பனான மன்னன் தட்சன் ஒரு யாகம் செய்தான். அதற்கு முதல் பூசை பெற ஈசனை அழைக்காது அவமதித்தான். இது கொலைக் குற்றம் போன்றது. எனவே சிவபெருமான் சினம் கொண்டு யாகம் நடக்கும் இடம் சென்று தட்சனின் தலையை வெட்டி யாகத் தீயில் போட்டார். பின்பு பார்வதி தேவியும், மற்றவர்களும் வேண்ட அங்கிருந்த ஓர் ஆட்டின் தலையை தட்சனின் உடலில் பொருத்தி, இவன் சில காலம் இப்படியே இருக்கட்டும் என்று அருளிச் செய்தான்.

அகந்தை மறைந்த இடம் அகந்தை அழிய இறை அருள் வேண்டும் எனக்கூறும் பாடல் எண் 341

"எங்கும் பரந்தும் இருநிலம் தாங்கியுந்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்(கு) அச்சுதனை உதிரம்கொண் டானே"

எல்லா இடங்களிலும் பரவி, அகன்று, பரந்த இந்தப் பெரிய உலகை தாங்குவதற்கும், எல்லா உலகங்களும், உயிர்களும் ஒடுங்குவதற்கும் இடமாக உள்ள, சிவன் திருவடிகளை நினைத்து வணங்கும் தேவர்கள், கல்விச் செருக்கில் இருக்கும் பிரமனைக் கண்டு சினம் கொண்டனர். எனவே தேவர்கள் சினம் தணியச் சிவன் பிரமனின் ஐந்தாவது தலை அறச் செய்தான். அத்தலையின் குருதியைத் திருமாலை ஏற்கச் செய்தான்.

குரோதம் ஒழிந்த இடம் குரோதம் அழிய இறை அருள் வேண்டும் எனக்கூறும் பாடல் எண் 342



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எங்கும் கலந்தும் என்உள்ளத்து எழுகின்ற
அங்க முதல்வன் அருமறை ஓதிபால்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித்(து) ஆழிசெய் தானே"

எங்கும் நிறைந்து கலந்திருக்கிற சிவபெருமான் என் உள்ளத்துள்ளும் எழுந்தருளியிருக்கின்றான். இப்பெருமான் ஆறு சமயங்களாகிய அங்கங்களுக்கு முதலானவன். அரிய வேதங்களை அருளிய வேத நாயகன். இப்படிப்பட்ட பரம்பொருளுடன் சினம் கொண்டு சலந்திராசுரன் போர் செய்ய வந்தான். சிவபெருமான் தரையில் தன் திருவடி விரலால் சக்கராயுதப் படை தோன்றச் செய்து, அது கொண்டு அவனை அழித்தான்.

மும்மலம் ஒழிந்த இடம் மும்மலங்களும் நீங்க இறை அருள் வேண்டும் எனக் கூறும் பாடல் எண் ***343***

" அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார்அறி வாரே"

கங்கையையும், சிவந்த பொன்போலப் பொலியும் விரி சடையையும் தனதாகக் கொண்ட எல்லாவற்றிற்கும் மூலமாயும், பழைமையாகவும் இருக்கும் சிவபெருமான் முப்புரங்களையும் எரித்தார் என்று சொல்பவர்கள் மூடர்கள். முப்புரம், திரிபுரம் என்று சொல்லப் படுபவை ஆணவம், கன்மம், மாயை என்னும் மன அழுக்குகளையே. இறைவன் இக்கோட்டைகளை அழித்ததை யார் பார்த் தார்கள்?

சினத்தை அழித்த இடம் சினம் அழிய இறை அருள் வேண்டும் எனக்கூறும் பாடல் எண் ***344***

" முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர(ன்) ஆவ(து) அறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந்(து) அன்று கொலையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் ஒலிக்க ஓமத் தீ, வேள்வித் தீ, யாகத் தீ ஆகிய மூன்று தீக்களை வளர்த்து, செய்கின்ற வேள்வியுள் யானை போன்ற காரிருளைக் கிழித்துக் கொண்டு ஒளி உருவாய் வெளிப்படுவான் இறைவன் என்பதை வேள்வியைச் செய்தவர்கள் அறியவில்லை. அவர்கள் அத்தீயில் விழுந்து மடிந்தார்கள்.

எமனை வென்ற இடம் இறை அருளால் எமனையும் வெல்லலாம் எனக் கூறும் பாடல் எண் 345

"மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்தே"

மூலாதாரத்திலிருந்து சுழுமுனை வழியாக மூலக் கனலை மேலேற்றிச் சோதி ஒளியாகத் தெரியும் இறைவனை நோக்க வல்ல வர்கள் இறைவன் அருளைப் பெறுவர். இவர்களை அணு கவரும் காலனைக் காலால் உதைத்து, இறைவன் சாகா நிலை யளிப்பான்.

காமனைக் கொன்ற இடம் இறை நிந்தனையால் நடக்கும் விபரீதம் பற்றிய பாடல் எண் 346

"இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித்து அங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே"

எடுத்த காரியத்தை முடிக்க உறுதி எடுத்துக் கொண்ட மனதை, அக்காரியத்தை அடையும் குறிக்கோளிலேயே பொருந்தி இருக்கச் செய்வது இலிங்க வழியாகும். அதைத் தடுக்க முனைந்த காமன் செயல் இழந்து, உருவும் இழந்தான். காமனை அழித்த சிவன், சக்தியோடு கூடி, அருந்தவயோகம் புரிந்த இடம் திருக்கொறுக்கை ஆகும். (இது காமனைக் கொன்ற இடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடி முடி தேடல்

புராணக் கதைகள் வேதத்தில் கூறப்பட்ட தத்துவங்களை, நீதி முறைகளை விரிவாக மக்கள் புரிந்து கொள்வதற்காக கூறப்பட்ட உண்மைக் கதைகளாகும். அடி முடி தேடல் என்னும் புராணக் கதை மனிதர்களுக்கு நான்தான் பெரியவன் என்னும் அகங்காரம் வரக்கூடாது என்பதை எடுத்துக் கூறுவதாகும். இந்த அகங்காரம் தேவர்களுக்கு அதுவும் படைக்கும் பிரமனுக்கும், காக்கும் திருமாலுக்கும் வந்ததாகவும் அவர்கள் சிந்தனையைச் சிவன் மாற்றி, அவர்கள் தவறை உணர வைத்து, எல்லாம் சிவமயம், எங்கும் சிவமயம் என உணர வைத்ததாகவும் இக்கதை மூலம் வலியுறுத்தப் பட்டுள்ளது. இறைவன் அடியையும் முடியையும் காண முடியாத பிரமனும் திருமாலும் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 375

" நின்றான் நிலமுழு(து) அண்டத்துள் நீளியன்
அன்றே யவன்வடி அஞ்சினர் ஆய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேற்செல
நன்றாம் கழலடி நாடஒண் ணாதே"

பூமிக்கோளம் முதலான அண்டங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள சிவன், தான் அதில் உயர்ந்து விளங்கும் தன்மை உடையவனாக இருக்கின்றான். இப்படி இருக்கின்ற பரம் பொருளை, அன்றே அவன் பேரொளிப் பிழம்பாய் நிற்கின்ற காட்சி கண்டு பயந்து, திருமாலும் நான்முகனுமாகிய இருவர் அவன் அடி முடி தேடிச் சென்றனர். ஆனால் இறைவன் அடியும் முடியும் கீழும் மேலுமாக இவர்கள் தேடிப் போகப் போக வளர்ந்ததே அன்றி இவர் களுக்குத் தென்படவில்லை. அகந்தையால் இவர்கள் அன்பருக்கு அருள் செய்யும் சிவன் திருவடிகளைக் காண இயலாதவர் ஆயினர். இவர்கள் அறியாமையைப் போக்கிய சிவன் என்பதைக் கூறும் பாடல் எண் 372

" பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றாரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமனும், திருமாலும் தங்கள் அறியாமையால் தாங்களே தேவர் தலைவர் என்ற நினைப்பில் கர்வம் கொண்டனர். படைப்புத் தொழில் பிரமனுக்குரியது. காத்தல் திருமாலுக்குரியது. இதை மறந்து அறியாமையால் இருவரும் தாங்களே தனிப் பெருங் கடவுள் என நினைத்துக் கொண்டனர். இவர்கள் அறியாமையைப் போக்க இறைவன் இருவருக்கும் நடுவே சோதி சொரூபமாக விண்ணுக்கும் மண்ணுக்கும் உயர்ந்து நின்றான். பிரமன் அன்னப் பறவையாகி விண்ணில் பறந்து சிவன் திருமுடி உச்சியைக் காண முயன்றான். திருமால் பன்றி உருவெடுத்துப் பாதாளத்துக்கும் கீழே சென்று பரமன் திருவடியைத் தேடினான். இறைவன் அடி முடியை இரு வராலும் காண முடியாமல் தோற்றனர். இருவரும் தங்கள் அகந்தை அழியத் தங்கள் அறியாமையை எண்ணி வருந்திக் கதறினர்.

அண்டம் முழுவதும் ஆளும் பரம்பொருள் எனக் கூறும் பாடல் எண் 374

"ஊனாய் உயிராய் உணர்அங்கி யாய்முன்னம்
சேணாய்வான் ஓங்கித் திருஉரு வாய்அண்டத்
தாணுவும் ஞாயிறும் தண்மதி யுங்கடந்து
ஆள்முழு(து) அண்டமு(ம்) ஆகிநின் றானே"

உடலாக, உயிராக, அது உணரும் உணர்வாக, உள் ஒளிரும் தீச்சுடராய், எட்டாத் தொலைவாய், விண்ணும் மண்ணும் அளக்க நின்ற பேருருவமாய், உலகத்தைத் தாங்கும் ஆதாரமாக, சூரியனாய், சந்திரனாய், இவை எல்லாவற்றையும் கடந்து, இவற்றை ஆளுகின்ற வனாய் பரம்பொருள் அண்டம் முழுவதும் கலந்து நிற்கின்றான்.

உலகெலாம் கலந்த ஒளிச் சோதியன் எனக் கூறும் பாடல் எண் 373

"ஆம் ஏழுலகுற நின்றஎம் அண்ணலும்
தாமே ழுலகில் தழற்பிழம் பாய்நிற்கும்
வானே ழுலகுறு மாமணி கண்டனை
நானே அறிந்தேன் அவன்ஆண்மை யாலே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணும் மண்ணும் மற்றுமுள்ள ஈரேழ் பதின்னான்கு உலகங்களிலும் ஒளிச் சோதி வடிவாக அவற்றின் உள்ளே கலந்து நிற்கின்ற பரம் பொருளாகிய நீலகண்டனை நான் அவனருளால் அறிந்து மகிழ்ந்தேன்.

*உள்ளத்துள் உள்ள உயர் பொருள் சிவம் எனக் கூறும் பாடல் எண் 377*

"தானக் கமலத் திருந்த சதுமுகன்
தானக் கருங்கடல் ஊழித் தலைவனும்
ஊன்அதின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் தன்மைய தாமே"

தாமரைப் பூவை இருப்பிடமாகக் கொண்டிருக்கும் நான்முகனாகிய பிரமனுக்கும் கருநீலக் கடல் மேல் பள்ளி கொண்டிருப்பவனான திருமாலுக்கும் ஊழிக்கால உருத்திரனுக்கும் அவரவர் உடலுக்குள்ளே உள்ள உயிரைப் போல உணர்கின்ற தன்மையானவன் சிவபெருமான். எல்லாவற்றிலும் இரண்டறக் கலந்து நீங்காதிருப்பவன் சிவபெருமான் ஆவான்.

*அகந்தை விட்டு அருள் பெற முயலுக எனக் கூறும் பாடல் எண் 376*

"சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றானும் முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனும்
தாவடி யிட்டுத் தலைப்பெய்து மாறே"

இறைவன் திருவடி பணிந்து வணங்கும் வானுலகத் தேவர்கள் கூட்டமும், மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூண்றடி நிலம் கேட்ட வாமனனாக வந்த திருமாலும், மற்றத் தவமுனிவர்களும், பாட்டு வடிவமாக இருக்கின்ற வேத மந்திரங்களைச் சொல்லிப் படைப்புத் தொழில் பண்ணுகின்ற பிரமனும் வேறெங்கும் தேடி அலைவதால் அவன் திருவருளைப் பெற இயலுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்கள்

சைவசமயத்தின் மூல நூல்களான வேதமும் ஆகமமும் சிவப் பரம்பொருளால் அருளப்பட்டவை. வேதங்கள் உருவாக்கப்பட வில்லை சிவபெருமானின் ஒரு அங்கம் இதனால் இவை ஆனாதியானவை எனக் கூறுவாரும் உள்ளனர். இதில் வேதம் பொது நூல், பதியின் உபதேசம், அற நூல், எனவும், ஆகமம் சிறப்பு நூல் எனவும் அருளாளர்களால் கூறப்பட்டுள்ளது. வேதம் என்பதன் பொருள் அறிவுக்கு ஆதாரம் என்பதாகும். வேதம் மறை, சுருதி, தமிழில் நான்மறை எனவும் அழைக்கப்படுகின்றது. வேதங்கள் சிவபெருமானால் நாத வடிவில் ரிசிகளுக்கு அருளப்பட்டவை, இறைவனால் அருளப்பட்ட வேதங்கள் 1.இருக்கு (ரிக்), 2.யசுர், 3.சாமம் (சாம), 4.அதர்வணம் (அதர்வண) என நான்காகும். இவற்றில் இருக்கு வேதம் ஸ்தோத்திரங்கள் அடங்கிய வழிபாட்டுப் பாடல்களையும், யசுர் வேதம் யாகம் முதலிய வழிபாட்டு முறைகளையும், சாம வேதம் இசைப்பாடல்கள் மூலமும், அதர்வண வேதம் ஆபத்துக்கள், எதிரிகள் தொல்லைகளை நீக்கும் முறைகளையும் கூறுகின்றன. வேதங்கள் 1.கர்ம காண்டம் (சம்ஹிதம் - மந்திரங்கள், பிரமாணம் - சடங்குகள்), 2. ஞான காண்டம் (உபநிடதம் - தத்துவஞானம்) என இரு பெரும் பிரிவுகள் உண்டு. இவற்றுடன் 1.சம்ஹிதை, 2.பிராமணம், 3.ஆரண்யம், 4.உப நிடதங்கள் (108) என்ற நான்கு பிரிவுகளும் உள்ளன. இவற்றைப் பிற்காலத்தில் வேதவியாசர் ஒழுங்குபடுத்தியதாகக் கூறப்படு கின்றது. உப வேதங்கள் 1. ஆயுர் வேதம் - மருத்துவத்துறை சார்ந்த அறிவியல், 2. தனுர் வேதம் - போர் மற்றும் தற்காப்பு அறிவியல், 3. கந்தர்வ வேதம் கலைத்துறை சார்ந்த அறிவியல், 4. ஸ்த பத்ய வேதம் (அர்த்த சாஸ்திரம்) - கட்டட அமைப்பு முறை அறிவியல் என நான் காகும், வேதத்தில் உள்ள அங்கங்கள் 1.சிட்சை, 2.வியாக்கிரணம், 3.சந்தஸ், 4.சோதிடம், 5.நிர்த்தம், 6.கற்பம் என ஆறாகும். இவற்றை விட வேதம் என்ற பெயரால் அழைக்கப் படுபவை 1.உத்திரவேதம் - திருக்குறள், 2. தமிழ் வேதம் - திரு முறைகள் எனவும் கூறப்படு கின்றது. ரிக் வேதம் முதல் தோன்றிய வேதமாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக் வேதத்திற்கு ஐதரேய உபநிடதம் என்னும் ஒரே ஒரு உபநிடதம் மட்டும் உண்டு. வேதங்களில் இயற்கையோடு இயைந்த மூவகை நிலைகளில் தெய்வங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவை விண்ணைச் சார்ந்தவை, இடைவெளியைச் சார்ந்தவை, மண்ணைச் சார்ந்தவை யாகும். 1.நிலம், 2.நீர், 3.நெருப்பு, 4.காற்று, 5.ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்கள் தெய்வங்களாக வழிபடப்படுகின்றன. முக்கியமாகப் பரம்பொருளை ஒளி வடிவில் இருக்கு, சாம வேதங்களில் போற்றப்படுகின்றது. யசுர் வேதத்தில் உருத்திரனுக்கு 100 பெயர்கள் கூறப்பட்டுள்ளன. வேதாந்தம் என்பது நான்கு வேதங்களின் (108 உபநிடதங்கள் உட்பட) முடிந்த முடிவாகும். வேதாந்தத்தைப் பின்பற்றுபவர்கள் வேதாந்திகள். வேதம் குரு சீடர் பரம்பரையாக வாய்மொழியாகச் சமஸ்கிருத மொழியில் கற்பிக்கப்பட்டு வந் துள்ளது. சைவசித்தாந்தம் வேதங்களைப் பொது நூலாகவும் ஆகமத் தைச் சிறப்புநூலாகவும் போற்றுகின்றது. வேதாந்தமும் சித்தாந் தமும் சைவசமயத்தின் இரு கண்களைப் போன்றவை.

திருமந்திரத்தில் வேதங்கள் பற்றி திருமூலர் பாடல் எண் 2397

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன
நாதன்உரை அவைநாடில் இரண்டு அந்தம்
பேதம்அது என்பர் பெரியோர்க்கு அபேதமே"

வேதங்கள், ஆகமங்கள் எல்லாம் இறையருள் கூறும், இறை வனால் அருளிச்செய்யப்பட்ட உண்மைப்பொருளுணர்த்தும் உயர்ந்த நூல்களாகும். ஓதப்படும் வேதம் பொதுவானது என்றும், ஆகமம் சிறப்புடையது என்றும் கூறுவர். சிவனருளிய இரண்டுமே வேறு வேறானவை எனச் சிலர் கூறினாலும், கற்றறிந்த பெரியோர் இரண்டையும் ஒன்றென்பர். வேறுபாடு காணார்.

திருமந்திரத்தில் முதற் தந்திரத்திற்கு முன்பாக பாடல் எண் 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே"

வேதத்தில் கூறப்பட்டுள்ளதை விடச் சிறந்த வாழ்க்கை நெறி வேறில்லை. உயர்ந்த வாழ்க்கை நெறி முறைகள் எல்லாமே வேதத்தில் விளக்கப்பட்டுள்ளன. எனவே எடுத்ததற்கெல்லாம் ஏன், எதற்கென்று தர்க்கம் செய்து, வாதம் புரிவதை விட்டு, கற்றறிந்த பெரியோர்கள், அறிவு நலம் மிக்க வேதத்தைப் படித்துணர்ந்தே வீடு பேற்றைப் பெற்றுள்ளார்கள். அதாவது வீண் வாதம் செய்யாமல் வேத நெறி கூறும் அற வாழ்வு மேற்கொண்டு அதன்படி நடந்தொழுகுங்கள். பேரின்ப வாழ்வு பெறலாம்.

மேலும் திருமந்திரத்தில் முதற் தந்திரத்திற்கு முன்பாக நான்காவதாக **"மறைப் பெருமை"** என்னும் தலைப்பின் கீழ் பாடல் எண் 52

"வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே"

வேதத்தைச் சொன்னவனும், வேதம் ஓதுபவர்கள் வேள்விப் பயன் சிறக்க வேதப் பொருள் விழங்க வைத்தவனும் உண்மைப் பரம் பொருளான சிவபெருமானே ஆவான். ஆகவே வேதங்களைச் சொன்னவன் பிரமன் என்பார்கள். ஆனால் பிரமன் வேதம் உரைத்தவனாக மாட்டான்.

*திருமந்திரப் பாடல் எண் 53*

"இருக்கு உருவாம்எழில் வேதத்தின் உள்ளே
உருக்கு உணர்வாய்உணர் வேதத்துள் ஓங்கி
வெருக்கு உருவாகிய வேதியர் சொல்லும்
கருக்கு உருவாய்நின்ற கண்ணனும் ஆமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத மந்திரப் பொருளாகவும், வேதத்தின் அழகிய உருவ மாகவும், உள்ளம் உருக்கும் உணர்வு தரும் வேதப் பொருளாகவும், சிறப்புக்குரியவரான வேதியர்கள் சொல்லும், உலகத் தோற்றுக்குக் காரணமாகவும் விளங்குபவன் முக்கண் முதல்வனான சிவப்பரம்பொருளேயாகும்.

*திருமந்திரப் பாடல் எண் 55*

" ஆறங்கமாய் வரும் மாமறை ஓதியைக்
கூறங்கம் ஆகக் குணம்பயில்வார் இல்லை
வேறங்கம் ஆக விளைவுசெய்து அப்புறம்
பேறங்கம் ஆகப் பெருக்கு

சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், சௌரம், கௌமாரம் ஆகிய ஆறு சமயத்திற்கு ஒப்பற்ற வேதத்தை ஓதி அருளிய சிவபெருமானை, உமை அம்மைக்குத் தன் உடலின் இடப்பாகத்தை தந்த சிவப்பரம்பொருளின் அருளாற்றலைப் போற்றிப் புகழ்பவர் இல்லை. இப்படிப் புகழாதவர்கள் வேறு சமய சாத்திரங்களைப் பயின்று கடைப்பிடித்து அந்த வேறானவற்றையே பெரிதாகப் போற்றி செய்து வாழ் நாளை வீண் நாளாக்கு கின்றார்களே!

திருமூலரின் இக்கருத்தை அருணகிரிநாதரும் "அறு சமயச் சாத்திரப் பொருளோனே" எனக் கூறியுள்ளார்.

*திருமந்திரம் பாடல் எண் 2404*

" முதலாகும் வேத முழுதாகமம் அப்
பதியான ஈசன் பகர்ந்தது இரண்டு
முதிதான வேத முறைமுறையால் அமர்ந்து
அதிகாதி வேதாந்த சித்தாந்தம் ஆமே"

முதலில் மொழியப்பட்டதான வேதம், முழுமையானதான ஆகமம் ஆகிய இந்த இரண்டும்தான் ஆருயிர்களுக்குத் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனான, இறைவன் ஆன்மாக்கள் நலம் பெற என்று அருளியவையாகும். இந்தப் பழைமையான வேதம் வழி வழியாகப் பயிலப்பட்டு மிக மிக மேலான வேதாந்த சித்தாந்தங்களாக விளங்கி வருகின்றன.

வேதங்கள் சிவப்பரம்பொருளால் எப்படி அருளப்பட்டன என்பதை பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் 16 ஆவது படலம் வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலம் 1187 ஆவது பாடல்

"கீட்டிசை முகத்து ஒன்று அடுத்த நால் ஐந்தில் கிளைத்தது ஆல்
இருக்க அது தென்பால்
ஈட்டிய இரண்டாம் வேத நூறு உருவோடு எழுந்தது வடதிசை முகத்தில்
நீட்டிய சாமம் ஆயிரம் முகத்தான் நிமிர்ந்தது குடதிசை முகத்தில்
நாட்டிய ஒன்பது உருவொடு கிளைத்து நடந்தது நான்கு அதாம்
மறையே"

சிவப்பரம்பொருளின் தற்புருட முகத்தில் இருந்து (கீழ்த்திசை, கிழக்கு நோக்கிய முகம்)) இருக்கு வேதம் இருபத்தொரு சாகைகளோடு தோன்றியது. அகோர முகத்திலிருந்து (தென் திசை) யசுர் வேதம் நூறு சாகைகளுடன் தோன்றியது. வாமதேவ முகத்திலிருந்து (வட திசை) சாம வேதம் ஆயிரம் சாகைகளுடன் தோன்றியது. சத்தியோசாத முகத்திலிருந்து (குட திசை, மேற்குத் திசை) அதர்வண வேதம் ஒன்பது சாகைகளுடன் தோன்றியது.

இரண்டாம் திருமுறையில் திருஞானசம்பந்தப்பெருமான் வேதங்கள் சிவனிடமிருந்து வந்ததைப் பின்வரும் திருக்கேதாரம் 114 பாடல் 2 இல்

"பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேத நான்கும் பதினெட்டோடு ஆறும் விரித்தார்கு இடம்
தாதுவிண்டம் மதுவண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாடம் மடமந்தி கேட்டுகளும் கேதாரமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணோர் பலரும்பாதம் பரவித் தொழ நான்கு வேதங் களையும் ஆறு அங்கங்களையும் பதினெண் புராணங்களையும் விரித்துரைத்த சிவபிரானுக்கு இடம், மலரின் மது உண்ட வண்டுகள் கீதம்பாட மந்திகள் கேட்டு மகிழும் திருக்கேதாரமாகும்.

மூன்றாம் திருமுறையில் திருஞானசம்பந்தப்பெருமான் திருச்சாத்தமங்கை 58, பாடல் எண் 6 இல்

"வேதமாய் வேள்வியாகி விளங் கும்பொருள் வீடதாகிச்
சோதியாய் மங்கைபாகந் நிலை தான்சொல்ல லாவதொன்றே
சாதியான் மிக்கசீராற் றகு வார்தொழுஞ் சாத்தமங்கை
ஆதியாய் நின்றபெம்மா னய வந்தி யமர்ந்தவனே

இறைவன் வேதங்களை அருளி வேதப் பொருளாகவும் விளங்குபவன். எரியோம்பிச் செய்யப்படும் வேத வேள்வியாகவும், ஞானவேள்வியாகவும் திகழ்பவன். ஒண் பொருளாகவும், வீடுபேறாகவும் உள்ளவன். சோதி வடிவானவன். உமாதேவியைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவன். இப்பெருமான் இத்தகையவன் என்பதை வாயினால் சொல்லவும் ஆகுமோ? அத்தகைய சிறப்புடைய பெருமான் தக்கவர்கள் தொழும் திரு சாத்தமங்கை என்னும் இத்திருத்தலத்தில் ஆதிமூர்த்தியாய் திருஅயவந்தி என்னும் கோயிலில் வீற்றிருந்தருளுகின்றான்.

நான்காம் திருமுறையில் திருநாவுக்கரசு நாயனார் பின்வரும் திருவதிகை வீரட்டானம் பாடல் 2 இல்

"பாடினார் மறைக ணான்கும் பாயிருள் புகுந்தென் னுள்ளம்
கூடினார் கூட லால வாயிலார் நல்ல கொன்றை
சூடினார் சூடன் மேவிச் சூழ்சுடர் சுடலை வெண்ணீ
றாடினா ராடன் மேவி யதிகைவீ ரட்ட னாரே"

கூடல் நகர ஆலவாய்க் கோயிலிலுள்ள பெருமான் நான்கு வேதங்களையும் பாடிக்கொண்டு நறிய கொன்றை மாலையை விரும்பிச் சூடி, சுடுகாட்டின் ஒளி வீசும் சாம்பல் பூசி, திரிபுரத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்குந் திருவிளையாடலை விரும்பி அதிகை வீரட்டத்தில் தங்கிய வராய், பரந்த ஆன்மீக இருளிலே நுழைந்து வந்து, அடியேனுடைய உள்ளத்தை அடைந்தார்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை (பௌத்த நூல்) இல் சீத்தலைச் சாத்தனார் ஆறங்கம் பற்றிக் கூறிய பாடல் 27-100

"கற்பம் கை சந்தம் கால் எண் கண்
தெற்றென் நிருத்தம் செவி சிக்கை மூக்கு
உற்ற வியாகரணம் முகம் பெற்றுச்
சார்பின் தோன்றா ஆரண வேதக்கு
ஆதி அந்தம் இல்லை ......."

கற்பமென்னும் அங்கம் கையாகவும், சந்தமென்பது காலாகவும், கணிதமென்பது கண்ணாகவும், நிருத்த மென்னும் அங்கம் காதா கவும், மூக்குசிஷை மூக்காகவும், இவற்றோடு பொருந்தும் சொல் இலக்கணம் என்னும் அங்கம் முகமாகவும் கொண்டு, தோன்றுத லில்லாது தான்தோன்றியாகிய, வேதபுருடனுக்கு தோற்றமும் முடிவும் இல்லை.



இறைவன் திரிபுரதாண்டவம் ஆடிய சித்திர சபை அமைந்துள்ள குற்றாலநாதர் ஆலயம், குற்றாலம் – தமிழ்நாடு – தென் இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆகமங்கள்

சைவன் சைவனாக இருப்பதற்கு வழி காட்டுவது ஆகமம். ஆகமம் என்பதன் பொருள் காமிய ஆகமத்தின் கிரியா பாதப் பர்வபாகத்தில் ஆ-சிவஞானம், க-மோட்சம், ம-மலநாசம் ஆதாவது ஆன்மாக்கள் மோட்ச சாதனத்தால் மலங்களை நாசம் செய்து இன்புற உதவுவது எனக் கூறப்பட்டுள்ளது. சிலர் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளைக் கூறுவது எனவும், சிலர் மலத்தை நீக்கி ஞானத்தைக் கொடுப்பது எனவும், கூறுகின்றனர். வேதமும் ஆக மமும் இறைவனால் அருளப்பட்டது. சைவசித்தாந்தம் வேதத்தைப் பொது நூலாகவும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகவும் போற்றுகின்றது. சைவர்கள் ஆகமத்தை முப்பொருள் உணர்த்தும் நூல் எனக் கூறுகின்றனர். ஆகமங்கள் இறைவனின் ஈசான முகத்திலிருந்து தோன்றியது. ஆகமம் இறைவனால் முதலில் அம்பிகைக்கும், பின்பு சிறீகண்ட பரமேஸ்வரருக்கும், பின்பு நந்தி தேவருக்கும், பின்பு பக்தகோடிகளுக்கும் காலத்திற்குக் காலம் உபதேசிக்கப்பட்டது. ஆகமம் தந்திரம், மகாதந்திரம், சங்கிதை, சிவஞானம் என்னும் பொயர்களாலும் ஆழைக்கப்படுகின்றது. சைவ ஆகமங்கள் 28 உம் சம்கிதைகள் எனவும், வைணவ ஆகமங்கள் பஞ்சராத்திரம் எனவும், சாத்த ஆகமங்கள் தந்திரங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. சைவ ஆகமங்களில் ஞானபாதம், யோக பாதம், கிரியாபாதம், சரியாபாதம் என நான்கு உட்பிரிவும், 207 உப ஆகமங்களும் உள்ளது. மற்றவை இரண்டிற்கும் உப ஆகமங்கள் இல்லை. ஆகமங்களின் அந்தம் ஆகமாந்தம். இதுவே சைவ சித்தாந்தமாகும். ஆகமம் குரு சீடர் பரம்பரையாக வாய்மொழி யாகச் சமஸ்கிருத மொழியில் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது.

தமிழில் திருமந்திரத்தில்தான் ஆகமங்கள் பற்றிய முதற் குறிப்புகளைக் காணமுடிகின்றது. இந்நூலின் முதற் தந்திரத்திற்கு முன்பாக ஆகமப் பெருமை என்னும் ஐந்தாவது தலைப்பில் 10 இற்கு மேற்பட்ட பாடல்களில் ஆகமங்கள் பற்றி திருமூலர் விபரித் துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவபெருமான்தான் 28 ஆகமங்களையும் அருளினார் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 57.*

" அஞ்சன மேனி அரிவைஓர் பாகத்தன்
அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே."

*நீல நிறத்தவளான பார்வதியை தன் இடப்பாகமாகக் கொண்ட சிவபெருமான் இருபத்தெட்டு (5+23) ஆகமங்களையும் கைகூப்பி வணங்கி, அறுபத்தாறு யோக புருடர்களும் கேட்கத் தனது கீழ் மேல் நோக்கிய அஞ்சா ஈசான முகத்தால் அருளிச் செய்தான்.*

*சிவாகமத்தைப் போற்றியவர்கள் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் 58.*

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்து எண்கோடி நூறாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின்று அப்பொருள் ஏத்துவன் யானே"

*அருள் வழங்கும் பெரியோன் சிவபிரான் அருளிய சிவாகமத்தை ஏற்றிப் போற்றியவர்கள் விண்ணவர் முதலான எட்டுக் கோடி நூறாயிரம் என்று எண்ணிலடங்காதவர் ஆவர். அவர்கள் வழி நின்று நானும் சிவாகமச் சிறப்பை எண்ணிப் புகழ்ந்து பாடிப் பரவுவேன்.*

*சிவாகமத்தைப் பொருளறிந்து ஓதாமல் அதன் அருமை உணராமல் ஓதுவது பயனற்றது எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 60.*

" அண்ணல் அருளால் அருளியது இவ்வாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது
எண்ணில் எழுபது கோடி நூறாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களுக்கெல்லாம் தலைவனான சிவபெருமான் அருளியது இந்த ஆகமம். இது வானவர் முதலான தேவர்களாலும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத அரும் பொருளுடையது. எண்ணிப் பார்த்தால் எழுபது கோடி நூறாயிரம் என்று இருக்கும் எண்ண முடியாத சிறப்புடையது. இதன் பொருள் உணராது, சிறப்பறியாது ஓத நினைப்பவர்களுக்கு நீர் மேல் எழுத்துப் போல் அது மனம் கொள்ள முடியாது போகும். அதாவது நீர் மேல் எழுத முடியாது, எழுதினாலும் உடனே மறைந்து விடும். அதுபோல அருமை உணராது ஆகமம் ஓதுதல் பயனற்றது என்பது பொருள்.

நந்தி எவ்வாறு ஆகமங்களைப் பெற்றார் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 62.

" சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில் தாம்பெற்ற
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே"

சிவம் என்னும் பரம்பொருளிடம் இருந்து சக்தியும், சக்தியிட மிருந்து சதாசிவமும், சதாசிவத்திடமிருந்து மகேசனும், மகேசனிட மிருந்து உருத்திரன் முதலான தேவர்களும், தவமுடைய திருமாலும், பிரமதேவனும் ஆகிய இவர்கள் பெற்ற ஆகமம் ஒன்பது ஆகும். இந்த ஆகமங்கள் அனைத்தும் நந்தி பெற்றான்.

நவ ஆகமங்கள் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 63.

" பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சித்தம் வாதுளம்
மற்றுஅவ் வியாமன மாகும் காலோத்தரம்
துற்றநல் சுப்பிரம் சொல்லும் மகுடமே"

நந்தி பெற்ற ஒன்பது ஆகமங்களாவன காரணம், காமிகம், வீரம், சித்தம், வாதுளம், வியாமனம், கலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்பவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்கள் பல கோடி எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 64.

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடும் ஆயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே"

கோடியாக உள்ளன. அந்த ஆகமங்களின் உண்மைப் பொருள் அறியாமல் அதனை ஓதுதலும், உணர்தலும் இயலாத ஒன்றாகும். இறைவன் காட்டிய ஞானம் ஆகமங்கள், அதன் உண்மைப் பொருளை உணராதவர்க்கு நீர் மேல் எழுதிய எழுத்துப் போல் ஒரு பயனும் தரமாட்டாது. பரம்பொருளாகிய சிவனருளால் சொல்லப் பட்ட சிவாகமங்கள் பல

ஆகமத்தைச் சைவநூல் என கி.பி 13 ஆம் நூற்றாண்டில் சகலாகம பண்டிதர், அருணந்தி சிவாச்சாரியார் சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான "சிவஞான சித்தியார்" சுபக்கத்தில் 267 ஆவது பாடலில்

"வேதநூல் சைவநூல்என்று இரண்டே நூல்கள்
வேறுஉரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அரும்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒளிபொருள் வேதாந்தத்
தீதுஇல்பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்.

வேதம், சிவாகமம் என்று நூல்கள் இரண்டே ஆகும். வேறு கூறப்படும் நூல்கள் எல்லாம் அவற்றின் விரிநூல்கள் ஆகும். இறைவனால் தரப்பட்ட அவை இரண்டும் முதல் நூலாகும். வேதம் பொது நூலாகும். ஆகமம் சிறப்பு நூலாகும். இவை உலகத்தார்க்கும் சத்திநிபாதம் உடையோர்க்குமாகச் சொல்லப்பட்டன. சிவாகமம் வேதத்தில் கூறாது ஒழிந்த பொருளையும், உபநிடதத்து உண்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளையும் இனிது விளக்குவதால் சிவாகமம் சைவ சித்தாந்தம் ஆயிற்று. ஆகமங்களுக்கு மாறுபட்ட வேத வேதாந்தப் பொருளைச் சொல்லும் ஏனைய நூல்கள் எல்லாம் பூர்வ பக்க நூல்களாகும்.

*சிவஞான சித்தியார் சுபக்கத்தில் 2 ஆவது பாடலில்*

"அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம்
குறியது உடைத்தாய் வேத ஆகமங்களின் குறியிறந்து அங்கு
அறிவினில் அருளால் மன்னி அம்மையோடு அப்பன் ஆகி
செறிவு ஓழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்"

*அறுவகைச் சமயத் தோர்க்கு அச்சமயத்தார் கொண்ட முதற் பொருளாகவும், சித்தாந்த சைவர்க்கு வேறாகிய இலக்கணத்தை உடையதாகவும், வேத ஆகமங்களுக்கு எட்டாததாகவும், அறி வினுக்கு அறிவாகவும், சக்தியும் சிவனும் ஆகவும், எங்கும் செறிந்து வியாபகமாய் நின்ற சிவபெருமானது திருவடியைத் தலையில் சூடுவாம்.*

*இறைவனால் ஆகமம் முதல் முதலாக அம்பிகைக்கு உபதேசிக் கப்பட்டதை சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் (திருத் தொண்டர் புராணம்) 19 ஆவது திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் 50 (1132) ஆவது பாடலிலும், இறைவனுக்கு மிகவும் பிடித்தது பூசை என 51 (1133) பாடலிலும் பார்க்கலாம். பாடல் எண் 50 (1132)*

"வெள்ளி மால் வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார் புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெளிய
உள்ளவாறு கேட்டருளினாள் உலகையாளுடையாள்"

*வெள்ளி மயமாகிய திருக்கயிலாய மலையில் வீற்றிருந்தருளி, பொங்கிடும் பெருந் திரைகளையுடைய கங்கையைச் சூடிய சிவபெருமான் அருளிச் செய்ய, உலகுயிர்களையெல்லாம் அடிமை யாகவுடைய அம்மையார் வணங்கி, தெளிந்த உண்மைப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளினைக் கூறும் சிவாகமங்களின் தன்மைகளை எல்லாம் முற்றிலும் தெளிய, அவ்வியல்புகளை உள்ளவாறு கேட்டருளினார். பாடல் எண் 51 (1133

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து"

எண்ணற்ற ஆகமங்களை மொழிந்தருளிய சிவபெருமான், தாம் விரும்பும் உண்மையாவது தம்மை முறைப்படி வழிபடுவதேயாகும் என்று அம்மையாருக்கு உரைத்தருள, பெண்களுக்கெல்லாம் நல்ல வராய அப்பெருமாட்டியாரும், உயிர்கட் கெல்லாம் தலைவராய அப்பெருமானாரை வழிபாடாற்றத் தம் உள்ளத்து விருப்பம் கொண்டார்.

எட்டாம் திருமுறை திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் 1 ஆவது சிவபுராணத்தில் 4 ஆவது வரி

"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க"

அதாவது தானே ஆகமமாகி நின்று நமக்கு அருகில் வருபவனுடைய திருவடி வாழ்க. எனக் கூறியுள்ளார்

2 ஆவது கீர்த்தித் திருவகவல் 18... வரிகளில்

"மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றைம் முகங்க ளாற்பணித் தருளியும்"

ஆகமங்கள் மகேந்திர மலையிலிருந்து சிவபெருமானின் ஐந்து முகங்கள் வழி வெளிப்பட்டபோது முனிவர்களால் (1.கொசிகர், 2.காசிபர், 3.பரத்துவாசர், 4.கௌதமர், 5.அகத்தியர்) கேட்கப் பட்டது எனக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று வகைச் சீவான்மாக்கள்

ஆன்மாக்கள் (உயிர்கள்) விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூன்று வகைப்படுவர். உயிர்களின் பொது இயல்பானது தனித்து நிற்காது ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி நிற்பதாகும். உயிர்கள் இறைவனைத் தவிர வேறு பொருளைப் பற்றி நிற்பதும், கருவி கரணங்களுடன் நின்று ஐந்தவத்தைப்படுவதும், அறிவித்தால் அன்றி அறியமாட்டாததாயும் இருக்கும். உயிர்கள் ஆணவ மல மறைப்புக்கு உட்பட்டு ஆணவம் (தூலமாக), கன்மம், மாயை ஆகிய மும் மலக் கட்டுடையவர்கள் சகலர் எனவும், ஆணவம் (தூலமாக), கன்மம் ஆகிய இரு மலக் கட்டுடையவர்கள் பிரளயாகலர் எனவும், ஆணவ மலக்கட்டு மட்டும் (சூக்குமமாக) உள்ளவர்கள் விஞ்ஞான கலர் எனவும் அழைக்கப்படுகின்றன. இவ்வுண்மையை திருவருட்ப யனில் வரும் பின்வரும் பாடல்

“திரிமலத்தார் ஒன்றதனில் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தா ராயு முளர்.”

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்தை உடையவர் என்றும், மும்மலங்களில் ஒன்றாகிய மாயை நீங்கி மற்ற இரு மலங்களை உடையவர் என்றும், இவர்கள் தவிர ஆணவமலம் மட்டும் உடையவர் என்றும் மூவகையான ஆன்மாக்கள் உளர்.

திருமந்திரத்தில் ஆன்மாக்கள் பற்றிக் கூறும் பாடல் எண் 492 இல்

“சக்தி சிவன் விளையாட்டால் உயிராக்கி
ஒத்த இருமாயா கூட்டத்(து) இடைபூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமய மாக்குமே”

சக்தியும் சிவனுமாக விளங்குகின்ற சதாசிவப் பரம்பொருளின் அருட் கருணையினால், உடலை உயிர் பெறச் செய்து, சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இரு மயக்கங்களிடையே சேரவிட்டு, ஆன்மாக்கள் சுத்தமாக அந்த மாயைகளின் மயக்கத்தில் இருந்து தனியே பிரிந்து, மனதுக்குள் தங்கி சீவன்களைச் சிவமயமாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரத்தில் மூவகை ஆன்மாக்கள் பற்றிக் கூறும் பாடல் எண் 493 இல்

"விஞ்ஞானர் நால்வரும் மெய்ப்பிரள யாகலத்(து)
அஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரும் ஆகும் பதின்மராம்
விஞ்ஞான ராதிகள் வேற்றுமை தானே"

ஆராய்ந்து எதையும் ஏற்றுக் கொள்கிற ஆராய்ச்சி ஞானம் உள்ள விஞ்ஞானகலர் நால்வர். ஒடுக்கத்தில் அந்த ஞான நல்லறிவு பெறும் பிரளயாகலர் மூவர். உலக வாழ்வில் ஈடுபட்டு அஞ்ஞானம் உடையவர்களாக இருக்கும் சகலர் மூவர் ஆக மொத்தம் பத்துப் பேர்கள். ஆராய்ச்சி ஞானம் உள்ள விஞ்ஞானலர் உடலோடு இருக்கும் போதே சிவத்தை உணர்ந்தறிந்த சீவன் முத்தர்கள். இவர்கள் சித்தர், உத்தமர், மத்திமர், அதமர் என நால்வர், இவர்களுக்கு ஆணவ மலம் ஒன்று மட்டுமே உண்டு. இதை இறைவன் அவர் நினைவோடு பொருந்தி இருந்து அறுப்பான். பிரளயாகலர் ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களைக் கொண்டவர்கள். இவர்கள் இறைவன் கடைக்கண் நோக்காலேயே மாயக் கட்டறுக்கப் பெறுவர். சகலர் உலக வாழ்வில் பொருந்திய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களிலும் சிக்கித் தவிப்பவர்கள். இவர்களுக்கு இறைவன் குருவடிவாக வந்து உபதேசம் செய்தருளுவான்.

விஞ்ஞானகலர் உத்தமர் எனக்கூறும் பாடல் எண் 494

"விஞ்ஞானர் கேவலத் தார்அது விட்டவர்
தஞ்ஞானர் அட்டவித் தேசஞ் சார்ந்துளோர்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் றாரே"

விஞ்ஞானகலர் என்பவர்கள் ஆணவமலம் மட்டுமே உடைய வர்கள். அந்த மலம் நீங்கப்பெற்றவர். தத்துவ அறிவுடையோர்கள். அறிவுக் கடவுள் எட்டுப் பேர். இவர்கள் இறைவன் உடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தி இருப்பவர்கள். எண்வகை ஞானம் உடைய மந்திரத் தலைவர்கள் ஏழரைக் கோடி பேராகும். உண்மையான மெய்த் தவம் புரிந்த ஞானவான்கள் ஆணவமலத்தை விட்டொழித்தவராவார்கள்.

*பிரளயாகலர் மத்திமர் எனக் கூறும் பாடல் எண் 495*

"இரண்டா வதில்முத்தி எய்துவர் அத்தனை
இரண்டாவ துள்ளே இருமல பெத்தர்
இரண்டாகு நூற்றெட்டு உருத்திரர் என்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே"

விஞ்ஞானகலரில் பக்குவம் குறைந்தவர்கள் உடலோடு கூடிச் சீவன் முத்தி அடையாமல், அடுத்து எடுக்கும் பிறவியில் முத்தி அடைவர். இரண்டாவதாக உள்ள ஆணவம் கன்மம் ஆகிய இரு மலம் உடைய (பெத்தர்) பிரளயாகலர் இரண்டு பிறவிகளில் நூற்று எட்டு உருத்திர பதவி அடைந்தவர்கள் என்பவர்கள். ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களாலும் கட்டப்பட்ட சகலர் மூன்றாமவர்.

*சகலர் கடையினர் எனக் கூறும் பாடல் எண் 496*

"பெத்தத்தர் சித்தொடு பேண்முத்திச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடுற்றார் சித்துமாய்
மத்தத்து மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத்து அமிழ்ந்து சகலத்து உளாரே"

ஆன்மாவைப் பற்றியுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் வயப்பட்ட சகலர் சிவனைப் பூசித்துச் சிவஞானம் பெற்றவராவார். ஞானம், கிரியை இரண்டும் பொருந்தியிருக்கச் சிவ சிந்தனையில் இருப்போர் சித்தர்களாயிருப்பவராவார். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் விட்டொழிக்க முடியாதவர்கள் ஆரவாரமிக்க உலகியலில் ஈடுபட்டுச் சாதாரண மனிதர்களாக (சகலர்) இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணங்கள்

புராணக்கதைகள் வேதத்தில் கூறப்பட்ட தத்துவங்களை, நீதி முறைகளை விரிவாக மக்கள் புரிந்து கொள்வதற்காகக் கூறப்பட்ட உண்மைக் கதைகளாகும். வேதமந்திரமான "ஸத்யம் வத" (உண்மை பேசு) ஹரிச்சந்திர புராணமாகவும், "தர்மம் சர" (அறத்தைப் பின் பற்று) மஹாபாரதமாகவும், "மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ" (தாய், தந்தையருக்குக் கீழ்ப்படிதல்) இராமாயணமாகவும் பெரிதாக விரிவுபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு எல்லாப் புராணங் களும் மக்களை நல்வழிப்படுத்துவதற்காக தத்துவங்கள் மக்களைப் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கில் அந்தந்தக் காலத்திற் கேற்ப சில விடையங்களை பெரிதுபடுத்திக் கூறியுள்ளார்கள்.

புராணங்கள் 18 (வாயு புராணத்துடன் 19 எனவும் கொள்ளப்படு கின்றது) பெரிய புராணங்களும், 18 உப (சிறிய) புராணங்களும் ஆக வியாச முனிவரால் தொகுக்கப்பட்டன. பெரியபுராணம் தவிர்ந்த மற்ற எல்லாப் புராணங்களும் சமஸ்க்கிருத மொழியில்தான் இருந்தன. பிற்காலத்தில் தமிழில் ஸ்காந்தம் என்னும் புராணம் கச்சியப்ப சிவாச் சாரியாரால் கந்தபுராணமாகவும், ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் உப புராணம் திருவிளையாடற் புராண மாகவும் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு மேலும் பல புராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. பெரியபுராணம் மட்டும் தமிழிலிருந்து சமஸ்க் கிருதத்திற்கு "உபமன்யு பக்த விலாசம்" என மொழிபெயர்க்கப் பட்டது.

புராணங்கள் பிரம்மாவிடமிருந்து வெளிப்பட்டதாக சாந் தோக்கிய உபநிடதத்திலும், மத்ஸ்ய புராணத்திலும் கூறப்பட் டுள்ளது. புராணங்கள் சிவனிடமிருந்து வந்ததாகவே சைவசமயம் கூறுகிறது. சைவ சித்தாந்தம் பிரம்மாவை சிவனின் ஒரு அங்கமாகப் பார்ப்பதால் இதில் முரண்பாடு உள்ளதாக நாம் எடுக்கமுடியாது.

திருஞானசம்பந்தப்பெருமான் புராணங்கள் சிவனிடமிருந்து வந்ததைப் பின்வரும் பாடலில் 4 வேதங்களும், 18 புராணங்களும், 6 வேதாங்கங்களும் இறைவனால் விரித்து உரைக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேத நான்கும் பதினெட்டோடு ஆறும் விரித்தார்கு இடம்
தாதுவிண்டம் மதுவண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாடம் மடமந்தி கேட்டுகளும் கேதாரமே"

மேலும் புராணங்கள் சிவனிடமிருந்து நந்தி, சனற்குமாரர், சூத முனிவருக்கூடாக வந்து வியாச முனிவரால் வகுக்கப்பட்டதைப் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்

"பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே"

புராணங்கள் பற்றி சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக நாயனார், சேக்கிழார் சுவாமிகள், அருணந்திசிவாச்சாரியார் போன்ற பல அருளாளர்கள் கூறியுள்ளார்கள்.

புராணங்களைத் திருமூலர் இறைவனின் தன்மைகளை இலகுவழியில் மக்களுக்கு வெளிப்படுத்தத் தோன்றிய பழமையான கதைகளாகவே பார்க்கின்றார். லிங்கபுராணத்தில் பக்தியால், தவத்தால் திருவருள் கிட்டும் என்பதன் அடையாளம் தான் சக்தி தவமிருந்தமை எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 347

"அடிசேர்வன் என்ன எம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
திடமாத வம்செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே"

சிவப் பரம்பொருளையே சரண் அடைவேன், அவரையே திருமணம் செய்து கொள்வேன் என்று எம் ஆதிமுதலாகிய சிவபெருமானை நோக்கி, இமவான் மகளாகப் பிறந்த பார்வதி தேவி, இமய மலைச் சாரலில், தேவரும் மூவரும் அறியப் பரமனைப் பூசித்துப் பக்தி செய்து வழிபட்டாள்.

மேலும் சிவபுராணங்களில் முப்புரம் எரித்தல் ஆணவத்தை ஒடுக்கும் இறைவன் அடையமுடியாதவரல்ல அன்பர்க்கு கருணையோடு தன்னை வெளிப்படுத்துபவர் எனக் கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருமந்திரப் பாடல் எண் 348*

"திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை
அரியனென்(று) எண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே"

போரிடாமலே, நெற்றிக்கண் நெருப்பாலேயே, பார்வை ஒன்றாலேயே முப்புரத்தையும் எரித்து அழித்த சிவப்பரம்பொருள் அறிதற்கு, அணுகுதற்கு முடியாதவன் என்று நினைத்து யாரும் மனம் தளர வேண்டாம். அன்பு செலுத்துபவர்களுக்குச் சிவன் பொய்யனாகான்.

தக்கன் வேழ்வியில் ஆணவத்தை ஒடுக்கும் இறைவன் பாடல் எண் 340

"கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தான்அங்கி இட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே"

தட்சாயிணியாகப் பிறந்த பார்வதி தேவிக்குத் தகப்பனான மன்னன் தட்சன் ஒரு யாகம் செய்தான். அதற்கு முதல் பூசை பெற ஈசனை அழைக்காது அவமதித்தான். இது கொலைக் குற்றம் போன்றது. எனவே சிவபெருமான் சினம் கொண்டு யாகம் நடக்கும் இடம் சென்று தட்சனின் தலையை வெட்டி யாகத் தீயில் போட்டார். பின்பு பார்வதி தேவியும், மற்றவர்களும் வேண்ட அங்கிருந்த ஓர் ஆட்டின் தலையை தட்சனின் உடலில் பொருத்தி, இவன் சில காலம் இப்படியே இருக்கட்டும் என்று அருளிச் செய்தான்.

மார்க்கண்டேய புராணத்தில் எமனை வென்றவர் பாடல் எண் 345

"மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்தே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணமும் திருமந்திரமும்

பெரிய புராணம் சைவசமய இலக்கியங்களின் மணிமுடியாக விளங்கும் ஒரு நூலாகும். இந்நூல் திருத்தொண்டர் புராணம் எனவும் அழைக்கப்படுகின்றது. இந்நூல் சுந்தரமூர்த்தி சுவாமி களால் அருளிச் செய்யப்பட்ட திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திரு வந்தாதியை துணைநூலாகவும் கொண்டு அறுபத்துமூன்று நாயன் மாரின் சரித்திரத்தை கூறும் நூலாகும். இந்நூல் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்க சோழ அரசனின் (அனபாய சோழன்) வேண்டுகோளுக்கமைய அரசனின் அமைச் சராக இருந்த அருள்மொழித்தேவர் என்னும் இயற்பெயர் உடைய சேக்கிழார்சுவாமிகளால் பாடப்பட்டது. இந்த நூலை தொடங்கு வதற்கு இறைவனே சேக்கிழார்சுவாமிகளுக்கு "உலகெலாம்" என அடி எடுத்துக் கொடுத்தார். இந்நூல் உலகெலாம் எனத் தொடங்கி உலகெலாம் என நிறைவு பெறுவதும் இந்நூலின் சிறப்பாகும். இந்நூல் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இந் நூலில் வரும் நாயன்மார்களின் வரலாறுகள் ஆண், பெண் வேறு பாடின்றி, இனம், தொழில் என்பவற்றைக் கடந்து எழுதப்பட்ட ஒரு தேசிய நூலாகும். இந்நூல் சைவசமய அடியார்களின் வரலாறு களைக் கூறும் நூலாக இருந்த போதும் சமயகுரவர்கள் நால்வரில் ஒருவரான ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாய னாருக்கு இந்நூலில் மூன்றில் ஒரு பகுதியை வழங்கி, அக் காலத்தில் அரசியல் செல்வாக்குப் பெற்ற புறச்சமயங்களான சைனம், பௌத்தம் ஆகியவற்றுடன் அகச்சமயமாகிய வைதிகத்தையும் எதிர்த்துப் போராடி தமிழ்நாட்டின் தொல்பெரும் சமயமான சைவத்தையும், தமிழையும் நிலைநாட்டிய ஒரு புரட்சி வீரரை அறி முகப்படுத்திய நூலாகவும் பார்க்கலாம். இந்நூலின் மிகுதி மூன்றில் இரண்டு பகுதியிலும் பெரும்பகுதி தமிழையும் சைவத்தையும் வளர்த்தவர்களான சுந்தரமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், காரைக்கால் அம்மையார், சேரமான்பெருமாள் நாயனார், திருமூல நாயனார் ஆகியோரது வரலாறுகளாகும். எனவே இந்நூல் தமிழ் மக்களையும், தமிழகச் சூழலையும் மையமாகக் கொண்டு பாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட தமிழ்க் காப்பியமாகும். இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக பதின்மூன்று சருக்கங் களையும் கொண்ட 4286 விருத்தப் பாடல்களைக் கொண்டதாகும்.

பெரியபுராணம் மனிதவாழ்க்கையை உணர்வதற்கு ஒரு உன்னத நூலாகும். சிவசிந்தனைக்கும் செந்தமிழ் திறத்திற்கும் இந்நூல் ஈடிணையற்றது. இதற்குச் சான்றாக எம்மிடையே வாழ்ந்த பகவான் ரமணர் அவரின் பதினேழாம் வயதில் ஞானியாவதற்கு முன்பு அவர் படித்த ஒரே ஒரு சமய நூல் பெரியபுராணம் என அவரே கூறியுள்ளார். அது மட்டுமல்லாமல் பெரியபுராணத்தில் வரும் நாயன்மார்கள் போல தானும் வரவேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ்ந்ததாகவும் கூறியுள்ளார். இந்நூலில் கூறப்பட்ட ஒவ்வொரு நாயன்மார்களும் கடைப்பிடித்த நெறிகள் தனித்தனியானவை யாகும். அந்நெறிகளில் சில எளிதாக எம்மால் கடைப்பிடிக்கக் கூடியனவாகும். சாதாரண மனித வாழ்க்கையை வாழ்ந்துகொண்டே நாம் இந்நெறிகளைக் கடைப்பிடிக்கலாம். இந்நூலை சைவசமய நூலாகப்பார்க்காமல் மனிதகுலத்திற்கு பொதுவாக எல்லாச் சமயத்தவர்களும் பயன்பெறும் நூலாகப்பார்ப்பதற்கு இந்நூலில் வரும் பின்வரும் ஒரு பாடல் சான்றாகும்.

"இங்கு இதன் நாமம்கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்சிந்தையுள் சார்ந்துந்துநின்ற
பொங்கிய இருளைஏனைப் புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல்நீக்கும் திருத்தொண்டர்புராணம் என்பாம்"

அதாவது புற இருளைச் சூரியன் போக்குவது போல் உலகின் மனிதராக உள்ள அனைவரினதும் அகஇருளைப் போக்குவது திருத்தொண்டர்புராணம் என இப்பாடல் கூறுகின்றது. இந்நூலில் வரும் கடைசிப் பாடல்

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்றுகாதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ஆன்மா இறைவனை அன்பு செய்து இன்பம் பெற்று உயர்வடையும்படி இறை அடியார்களின் புகழ் உலகெங்கும் விளங்குகின்றது என இப்பாடல் கூறுகின்றது. முக்கியமாக எளிய நிலையில் மனம் தளராமல் இறை சிந்தனையோடு தொண்டு புரிந்தால் இறையருள் பெறலாம் என்பதை இந்நூல் நாயன்மார்களின் வரலாறுகள் மூலம் எமக்கு உணர்த்துகின்றது. இந்நூலில் வரும் சில நாயன்மார்களின் வரலாறுகள் எமக்கு உணர்த்துபவற்றை திருமந்திரத்தில் திருமூலநாயனார் கூறியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால்

**தில்லை வாழந்தணர் – (I)– கிரியை வழிபாடு**

தில்லை வாழந்தணர்கள் "இவ்இருடிகளுள் நாம் ஒருவர்" என இறைவனால் அருளிச்செய்யப் பெற்ற பெருமையை உடையவர்கள். இதனாலேயை சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டர் தொகை பாடுவதற்கு சிவபெருமான் தில்லைவாழ் அந்தணர்களையே முதற்பொருளாகக் கொண்டு அடி எடுத்துக் கொடுத்தார்.

திருமந்திரப் பாடல் எண் 1451

"பத்துத் திசையும் பரம்ஒரு தெய்வம் உண்டு
எத்திக்கில் அவர்இல்லை என்பதில் மலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரண்எனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே"

பத்துத் திசைகளிலும் (கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென் மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு, வடகிழக்கு, மேல், கீழ்) பரவி நீக்கமற நிறைந்திருப்பவன் பரம்பொருள். அவர் எங்கு இல்லை? எல்லா இடங்களிலும் இருக்கின்றார். எனவே பூக்கொத்துக்களைக் கொண்டு அவர் திருவடிகளைச் சரண் அடைந்து, அலைகள் கடலில் ஒன்றன் பின் ஒன்றாகத் தாவி வருதல் போல, துன்ப வினையால் தொடரும் இப்பிறவியாகிய பெருங்கடலில் விழாமல் தப்பலாம் என உணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருநீலகண்ட நாயனார் – (2) – பிறர் மனை நாடாமை**

*திருமந்திரப் பாடல் எண் 201*

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்திற்கு இடர்உற்ற வாரே"

*அன்புடைய மனைவி வீட்டில் இருக்க மற்றொருவருக்கு உரிமையான பிறன் மனைவியை விரும்பும் இளைஞர் செயல் வீட்டில் காய்த்துத் தொங்கும் பலாப்பழத்தைத் தின்ன முடியாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு அவதிப்படுவது போலாகும்.*

*திருநீலகண்ட நாயனார் (3) வரலாற்றின் மூலம் நல்ஒழுக்கத்துடன் இருந்தாலே சிவலோகப் பதவி கிடைக்கும் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.*

*இளையான் குடிமாறநாயனார் (4) - மகேசுர பூசை. சிவ அடியார்களுக்கு அமுதூட்டிய வரலாற்றின் மூலம் சீலமார் பூசை என சேக்கிழார் சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்ட மகேசுர பூசை சிவ லோகம் சென்று இன்புற்றிருப்பதற்கான வழி என உணர்த்தப்பட்டுள்ளது.*

*திருமந்திரப் பாடல் எண் 1857*

" படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்
நடமாடக்கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே."

*படம் போன்ற அமைப்பை உடைய கோபுரங்களையுடைய கோயிலின் உள்ளே இருக்கும் இறைவனுக்குப் படைத்தால் அது இறைவனுக்குத்தான் சேரும் அடியார்களுக்குச் சேராது. ஆனால்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் கோயிலாக விளங்கும் சீவன்களுக்குத் தருகின்ற ஒன்று சீவன் உள்ளே சிவன் இருக்கும் காரணத்தால் அது சிவனுக்கும் போய்ச் சேரும்

*விறன்மிண்ட நாயனார் (6) - சிவமே சிவனடியாரும் சிவனடியார்களை சிவன் எண்றே வணங்குபவர் வரலாற்றின் மூலம் சிவனடியார்களும் சிவனே என எடுத்துக் காட்டப்பட்டது.*

*திருமந்திரப் பாடல் எண் 1862*

"ஏறுடையாய் இறைவா எம்பிரான் என்று
நீறிடுவார் அடியார் நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை அண்ணல் இவரென்று
வேறு அணிவார்க்கு வினைஇல்லை தானே"

"விடை ஏறும் எங்கள் பெருமானே! இறைவா! எம் உயிர்த் தலைவா!" என்று சிவப் பரம்பொருளைப் போற்றி வணங்கும் திருநீறு பூசும் அடியவர்கள் பூமியில் வாழுகின்ற தேவராவார்கள். கங்கை ஆற்றைத் தலையிலே கொண்டிருக்கின்ற, சிவந்த சடைமுடி உடைய சிவப் பரம்பொருள் இவரே என்று கருதி, அச்சிவனடியார்களைச் சிவனாகவே எண்ணிச் சிறப்பாகத் தொழுபவர்களுக்கு, வினைத் துன்பம் இல்லாது போகும்.

*அமர்நீதி நாயனார் (7) - அறம் செய் உணவு, உடை கொடுத்த வரலாற்றின் மூலம் அறம் செய்வதன் மூலம் சிவலோக வாழ்வையும் பெறலாம் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.*

*திருமந்திரப் பாடல் எண் 255*

"தன்னை அறியாது தான்நல்லன் என்னாதுஇங்(கு)
இன்மை அறியா(து) இளையார்என்று ஓராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னம்
தன்மையும் நல்ல தவஞ்செய்யும் நீரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரை எடுக்க வரும் எமன் எம்மை எப்படிப்பட்டவர் என எண்ணிப் பார்க்கமாட்டான். எம்மை பாவம், நல்லவன், ஏழை, சிறுபிள்ளை என விட்டு விடவும்மாட்டான். எமன் வலிமையுடையவன். எனவே அவன் உயிரைக் கவர்ந்து செல்வதற்கு முன்பாக நல்லதான தானம், தவம் என்பனவற்றைச் செய்யுங்கள் மனிதர்களே.

கண்ணப்பநாயனார் *(10)* - அன்பே சிவம் காளத்தி நாதர் மேல் அன்பு வைத்த வரலாற்றின் மூலம் இறைவன் மேல் மெய்யன்பு தலைப்படுமாயின் முத்தி கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

*திருமந்திரப் பாடல் எண் 270*

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

அன்பு வேறு, இறைவன் வேறு இரண்டும் ஒன்றல்ல தனித்தனியானவை என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே இறைவன் என்பதைப் பலரும் அறியாது இருக்கிறார்கள். அன்புதான் இறைவன் என்பதை எல்லாரும் அறிந்துவிட்டால் பிறகு அவர்களே அன்புருவான இறைவனாய் ஆனந்த வெள்ளத்தில் அமர்ந்திருப்பார்கள் *(வாழ்ந்திருப்பார்கள்)*.

**திருநாவுக்கரசு நாயனார் (21) – சரியை வழிபாடு**

*திருமந்திரப் பாடல் எண் 1443*

"நேர்ந்திடு மூல சரியை நெறி இதென்று
ஆய்ந்திடும் காலங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத்து உயிரதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியாகிய பேரின்ப நிலை அடைவதற்கான மூல காரணமாகவும், முதன்மையான வழியாகவும் இருக்கின்ற சரியை நெறி இன்னதென்று ஆய்ந்தறிகின்ற, நுணுகி உணர்ந்திடும் சந்துரு ஆகிய என் அன்புச் சீடர்களே! கேட்டுக் கொள்ளுங்கள். பூவுலகில் உண்மை உணர்ந்திடும் சுத்த சைவர்ருக்கு உயிர் போன்றதே இந்தச் சரியை நெறிதான்.

திருநாவுக்கரசு நாயனார் (உளவாரத் தொண்டு) வரலாற்றின் மூலம் இறைவனை அடைவதற்கு இலகுவாகச் செய்யக்கூடிய சரியை வழிபாட்டின் மகிமை விளக்கப்பட்டுள்ளது.

பூசலார் நாயனார் (65) -உள்ளம் பெரும் கோயில் மனத்திலேயே இறைவனுக்குக் கோயில் கட்டியதன் மூலம் இறைவன் எம்முடன் எமது உள்ளத்தில் இருக்கின்றான் என நம்பிக்கையுடன் செயல் ப்பட்டால் இறைவன் எம்முடனேயே இருந்து எம்மை வழிநடத் துவான் என உணர்த்தப்பட்டுள்ளது.

திருமந்திரப் பாடல் எண் 2550

"காயக் குழப்பனைக் காய நன்னாடனைக்
காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துஉள்ளே எங்கும் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்து அறியாரே."

சீவர்கள் உடம்போடு பொருந்தி அவர்கள் உயிரில் நுண்ணு அயிராய்க் கலந்து இருப்பவனை, ஆருயிர்களின் உடம்பையே தான் அருளாட்சி செய்யும் திருநாடாகக் கொண்டு திகழ்பவனை, உடம் புக்குள்ளே ஒளிவடிவாய்த் திகழ்பவனை, பாவம் இந்தப் பேதை மக்கள் எங்கெங்கோ தேடித் திரிகிறார்களே! இவர்கள் அப் பெருமான் இவர்கள் உடம்புக்குள்ளேயே இருக்கின்ற உண்மை அறியாதவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறளும் திருமந்திரமும்

கிறீஸ்த்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருவள்ளுவரின் திருக்குறளும், கிறீஸ்த்துவுக்குப் பின் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருமூலநாயனாரின் திருமந்திரமும் பல விடையங்களில் கருத் தொற்றுமை மட்டுமல்லாமல் சொற் பிரயோகங்களிலும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் பாயிரத்தில் இரண்டாம் அதிகாரத்தில் வான்சிறப்பு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 11 இலிருந்து 20 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்நான்காம் அதிகாரத்தில் வான்சிறப்பு பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 248, 249) வான்சிறப்புப் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் பாயிரத்தில் நான்காம் அதிகாரத்தில் அறம் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 31 இலிருந்து 40 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்நான்காம் அதிகாரத்தில் அறம் பற்றி வரும் இருபது பாடல்களும் (பாடல் எண் 250 இலிருந்து 269 வரையும்) அறம் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் எட்டாம் அதிகாரத்தில் அன்புடைமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 71 இலிருந்து 80 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதினெட்டாம் அதிகாரத்தில் அன்புடைமை பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 270 இலிருந்து 277 வரையும், 279, 280 பாடல்களும்) அன்புடமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் பன்னிரண்டாம் அதிகாரத்தில் நடுவுநிலைமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 111 இலிருந்து 120 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்திமூன்றாம் அதிகாரத்தில் நடுவுநிலைமை பற்றி வரும் நான்கு பாடல்களும் (பாடல் எண் 320 இலிருந்து 323 வரை) நடுவுநிலையைப் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் பதினைந்தாம் அதிகாரத்தில் பிறன்மனை நயவாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 141 இலிருந்து 150 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திமூன்றாம் அதிகாரத்தில் பிறன்மனை நயவாமை பற்றி வரும் எட்டுப் பாடல்களும் (பாடல் எண் 201 இலிருந்து 208 வரை) பிறன்மனை நயவாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் இருபத்தி ஆறாம் அதிகாரத்தில் புலால் மறுத்தல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 251 இலிருந்து 260 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஏழாம் அதிகாரத்தில் புலால் மறுத்தல் பற்றி வரும் பாடல் எண் 199 இல் புலால் மறுத்தல் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் இருபத்தி ஏழாம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 261 இலிருந்து 270 வரை) திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் ஐந்தாம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் இருபத்திஒரு பாடல்களும் (பாடல் எண் 1624 இலிருந்து 1644வரை) கொல்லாமை பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்தி மூன்றாம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 321 இலிருந்து 330 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஆறாம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 197, 198) கொல்லாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்தி நான்காம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை பற்றி வரும் மூன்று குறள்களும் (குறள் எண் 331 இலிருந்து 333 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் மூன்றாம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி வரும் ஆறு பாடல்களும் (பாடல் எண் 168 இலிருந்து 173 வரை) செல்வம் நிலையாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்தி நான்காம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி வரும் ஏழு குறள்களும் (குறள் எண் 334 இலிருந்து 340 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இரண்டாம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி வரும் இருபத்தைந்து பாடல்களும் (பாடல் எண் 143 இலிருந்து 167 வரை) யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்தி ஐந்தாம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 341 இலிருந்து 350 வரை) திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் நாலாம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 1614, 1623) துறவு பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திஏழாம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 361 இலிருந்து 370 வரை) திருமந்திரத்தில் எட்டாம் தந்திரத்தில் நாற்பதாம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 2613 இலிருந்து 2622 வரை) அவா அறுத்தல் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் ஊழியலில் முப்பத்தி எட்டாம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 371 இலிருந்து 380 வரை) திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் பதின்மூன்றாம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் ஆறு பாடல்களும் (பாடல் எண் 2847 இலிருந்து 2852 வரை) ஊழியல் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் அரசியலில் முப்பத்தொன் பதாவது அதிகாரத்தில் அரசாட்சி முறை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 381 இலிருந்து 390 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்மூன்றாவது அதிகாரத்தில் அரசாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 238 இலிருந்து 247 வரை) அரசாட்சி முறை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் அரசியலில் நாற்பதாவது அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 391 இலிருந்து 400 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபதாவது அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் ஒன்பது பாடல்களும் (பாடல் எண் 290 இலிருந்து 298 வரை) கல்வி பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் நட்பியலில் தொண்ணூற்று இரண்டாவது அதிகாரத்தில் விலைமாது பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 911 இலிருந்து 920 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஒன்பதாவது அதிகாரத்தில் விலைமாது பற்றி வரும் ஐந்து பாடல்களும் (பாடல் எண் 204 இலிருந்து 288 வரை) விலைமாது பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் நட்பியலில் தொண்ணூற்று மூன்றாவது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 921 இலிருந்து 930 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திநாலாவது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் ஒன்பது பாடல்களும் (பாடல் எண் 324 இலிருந்து 332 வரை) கள்ளுண்ணாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் குடியியலில் நூற்றி ஐந்தாவது அதிகாரத்தில் நல்குரவு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 1041 இலிருந்து 1050 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பத்தாவது அதிகாரத்தில் நல்குரவு பற்றி வரும் ஐந்து பாடல்களும் (பாடல் எண் 209 இலிருந்து 213 வரை) நல்குரவு பற்றிக் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் கூறும் சைவசித்தாந்தம்

ஆன்மா தன்னுள் இருக்கும் சிவத்தை அறிந்து, மல நீக்கம் பெற்றுச் சிவனடியைச் சேரும் வழியைக் காட்டுவதே சைவ சித்தாந்தத் தத்துவத்தின் நோக்கமாகும். சைவ சித்தாந்தம் பதி (இறைவன்), பசு (ஆன்மா), பாசம் (ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள்) இவை மூன்றும் அனாதியானவை. அதாவது என்றும் நிரந்தரமானவை. இவை தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை என்பதை உறுதிபடக் கூறுகின்றது.

பதி (இறைவன்) ஒருவரே. அவர் எங்கும் நிறைந்திருக்கின்றார். அவர் அருவமும் உருவமும் அல்லாத, குணமும் குறிகளும் இல்லாத, விருப்பு வெறுப்பு இல்லாதவர். அவர் சிவம் என அழைக்கப்படு கிறார். சிவம் ஆன்மாவின் மேல் உள்ள கருணையினால் ஆன்மாவை ஈடேற்றும் பொருட்டுச் சக்தியாக மாறி சக்திக்கூடாக சிவன், சக்தி, நாதம், விந்து (அருவத்திருமேனி), சதாசிவம் (இலிங்கத்திருமேனி) (அருவுருவத்திருமேனி), இருபத்திஐந்து மகேஸ்வர வடிவங்கள் ஆகவும், பிரம்மா, விஸ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன் ஆக முறையே படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய தொழில்களைச் செய்வதற்கும், அவர்களின் சத்திகளாக இயங்கச் சரஸ்வதி, இலட்சுமி, உமையவள், மனோன்மணி, மகேஸ்வரி ஆகவும், வைரவர் (மகேஸ்வர வடிவங்களில் ஒன்று), வீரபத்திரர், கணபதி, முருகன், ஐயப்பன் போன்ற பல திருமேனிகளைத் தாங்கி நிற்கின்றார்.

பசு (ஆன்மா) ஒரு பொழுதும் தனித்து நிற்காமல் ஒன்றைச் சார்ந்து (மலத்தை அல்லது இறைவனை) நிற்கும். தானாக ஒன்றும் அறியாது. அறிவித்தால் அறியும் தன்மையுள்ளது. ஆன்மா தான் சேர்த்து வைத்த வினையின் (சஞ்சிதம்) ஒரு பகுதியை (பிராரப்தம்) இறைவன் ஆணைப்படி இப்பிறவியில் அனுபவிப்பதற்காக இறைவனால் தேர்ந்தெடுத்த உடலுக்கு அனுப்பப்படுகிறது. ஆன்மா வினையை அனுபவித்து முடிப்பதுடன், இப்பிறவியில் செய்த வினையின் ஒரு பகுதியை இறைவன் ஆணைப்படி இப்பிறவியில் அனுபவிப்பதுடன் மறு பகுதியை (ஆகாமியம்) சஞ்சித வினையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ப்பதற்காக எடுத்துக்கொண்டு இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கு கின்றது. இறைவன் ஆன்மாவுடன் சேர்ந்து இருந்தாலும் ஆன்மா ஆணவ மலத்தால் கட்டுண்டு இருப்பதால் இதை அறியாது. அத்துடன் இப்பிறவியில் ஆன்மா செய்யும் நல்வினை, தீவினை களுக்கு இறைவன் பொறுப்பாகமாட்டான். ஆன்மா இப்பிறவி எடுத்த நோக்கமான பிராரர்த்தவினையை அனுபவிக்கும் செயலை இப்பிறவியிலேயே முடிக்கவேண்டும். இதிலிருந்து ஆன்மாவால் விடுபடமுடியாது. ஆனால் ஆன்மா இறைவனை நாடி இவ்வி னையைச் சுலபமாகக் கழிக்கமுடியும்.

பாசம் (மும்மலங்கள்). 1. ஆணவம். ஆன்மாவிற்கு அறியா மையைச் செய்யும். இது தன்னையும் காட்டாது, பிறபொருளையும் காட்டாது. ஆன்மாவுடன் பிறப்பிற்கு முன்பும், பின்பும் சேர்ந் திருக்கும். 2. கன்மம். இது இரு வகைப்படும். 1. மூலகன்மம் (காரண கன்மம்) (சஞ்சிதவினை) (தொல்வினை) ஆன்மா உடல் எடுக்குமுன் ஆன்மாவுடன் இருப்பது. ஆன்மா உடல் எடுக்கும் போது இறை வனால் இதில் ஒரு பகுதியை ஆன்மாவிற்கு வழங்கும் போது பிராரப் தவினை (ஊழ்வினை) (விதி) எனக்கூறப்படும். 2. காரியகன்மம் (ஆகாமியம்). ஆன்மா இப்பிறவியில் செய்யும் வினை. இது நல்வினை, தீவினை என இருவகைப்படும். 3. மாயை. இது சடப் பொருள் அனைத்தின் ஆற்றல்களும் ஒன்றாகத் திரண்டு நிற்பது. இவ்வுலகம், மற்றும் இங்குள்ள அனைத்துப் பொருட்களும் மாயை யாகும். இது சுத்தமாயை, அசுத்தமாயை என இரு வகைப்படும். இறைவன் ஆன்மாவின் மலத்தை நீக்குவதற்காக மாயையை உபயோகிக்கின்றான்.

மேற்கூறிய சைவசித்தாந்தக் கொள்கையான பதி பசு, பாசம் ஆகிய மூன்றும் நிரந்தனமானவை என்பதை உறுதிப்படுத்தும் திருமந்திரத்தில் வரும் பாடல் எண் 2405

"அறிவுஅறிவு என்ற அறிவும் அனாதி
அறிவுக்கு அறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியின் பிறப்பு அறுந்தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு அறிவு என்று சொல்லப்படும் ஆன்மா அனாதியானது. அதாவது தொன்மையானது, தோற்றம் இல்லாதது. அறிவுக்கு அறிவான, ஆருயிர்க்குத் தலைவனான பரம்பொருளும் அனாதி யானது. ஆன்மாக்களைப் பற்றி வரும் பாசமும் அனாதியானது. தொன்மையான சிவமும், சீவனும் பதிந்தால் ஆன்மாக்களின் பாசப பயனான பிறவித் துயர் அறுந்துவிடும். அதாவது பசு விடுதலை பெற்றுவிடும்.

பாசம் அகலப் பசு பதியை அடையும் எனக் கூறும் பாடல் எண் **2406**

"பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு
பசுத்தன்மை நீங்கி அப்பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடவே"

பிரமன், திருமால், உருத்திரன் முதலான தேவர்கள் உட்பட உயிரினங்கள் கோடி கோடியாகும். இந்த உயிர்களை இறுகப் பிணித்திருக்கும் பாச மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூன்றாகும். குளம், குட்டைகளில் நீரை மறைத்திருக்கும் பாசியை விலக்கினால் தெளிந்த நீர் தெரிவது போல உயிர்களின் அறிவை மறைத்திருக்கும் மலங்களை அகற்றினால் இறைகாட்சி தெரியும். அப்போ உயிர்கள் இறைவனைப் பற்றி நிற்கும்.

பதி, பசு, பாச அமைப்பு சிவன்கோவில் எனக் கூறும் பாடல் எண் **2411**

"ஆய பதிதான் அருட் சிவலிங்கமாம்
ஆய பசுவும் அடலேறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகும் நற்பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார் கட்கே"

கோயிலுக்குள் இருக்கும் சிவலிங்கம் பதி. எதிராக உள்ள வலிமை மிக்க காளைமாடு (நந்தி) பசு. அதற்குப் பின்னால் உள்ள பலிபீடம் நல்லபாசமாகும். இந்த உண்மை சிவாலயம் அமைந்துள்ள




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை ஆராய்வோருக்குப் புரியும். ஆன்மாவாகிய பசு, பதியாகிய சிவனை நோக்கப் பாசமாகிய பலிபீடம் பின்னடையும் என்பது பொருள். பாசங்கள் பலியிடப்படும் இடம் என்பதால் அது பலிபீடம் எனப்பட்டது.

*பதியை அறியப் பாசம் அகலும் எனக் கூறும் பாடல் 2412*

"பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பயில்வோர்க்கு ஆறாக்கி
பதிபசு பாசத்தைப் பற்றுஅற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே"

பதி, பசு, பாசம் என்னும் மூன்றினையும் உணர்த்தும் திருமுறை களைத் தினம் கற்று, பதி, பசு, பாச நிலைகளைக் கற்போருக்கு உணர்த்தி, அவற்றைப் போக்கிக் கொள்ளும் வழியைக் காட்டி, பதியை நாடிப் பசு செல்லாது தடுத்துக் கட்டிப் போட்டிருக்கும் பாச, பந்த கட்டுக்களை அடியே அழித்து, பதியாகிய பரம் பொருளின் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தைத் தினம் தியானிப்பவர்களுக்கு பாசம் பற்றாது.



**இறைவன் சந்தியா தாண்டவம் ஆடிய வெள்ளிச் சபை அமைந்துள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், மதுரை, தமிழ்நாடு – தென் இந்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டமா சித்தி (எட்டு வகைச் சித்திகள்)

*அட்டமா சித்தி பெற்ற திருமூலநாயனார் உட்பட பல முனிவர்கள், ரிசிகள் எமக்கு வழி காட்டியாக இருந்திருக்கின்றார்கள். நாங்கள் நினைப்பதை நினைத்தபடி செயலாக்கும் வல்லமையைத் தரும் எட்டுவகைச் சித்திகள் பற்றி (அட்டமா சித்திகள்) திருமந்திரத்தில் திருமூலநாயனார் பல பாடல்கள் மூலம் விளக்கியுள்ளார். இந்த எட்டுவகைச் சித்திகள் எவை எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் **668***

" அணிமாதி சித்திகள் ஆனவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் நேர்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்
அணுவத்தனை ஒக்கும் தானால் எட்டே"

*அணிமா முதலான எட்டுவகைச் சித்திகள் என்ன என்ன என்று கூற வேண்டுமானால், அவை அணுவை விடச் சிறிதாகும் (அணிமா). பெரிதாக உள்ள எதையும் விடப் பெரிதாக இருக்கிற தன்மை (மகிமா). அசைக்க இயலாத கனமுடையதாக இருக்கிற தன்மை (கரிமா). புகை போல இலேசாகுதல் (இலகிமா). பூமியில் இருந்துகொண்டே ஆகாயத்தைத் தொடுதல் (பிராத்தி). விண், மண், நீர், நெருப்பு, காற்று என எங்கும் செல்லுதலான (பிராகாமியம்). உயிர்களைப் படைக்கின்ற சக்தியான (ஈசத்துவம்). எதையும் வசிப்படுத்தும் (வசித்துவம்). ஆகிய சக்திகளே (மனம் நினைத்ததைச் செயலாக்குவது) அந்த எட்டுச் சித்திகளாகும்.*

*இந்த அட்டமா சித்திகள் அருளும் பலனை கூறும் பாடல் எண் **669***

" எட்டாகிய சித்தி ஓரெட்டி யோகத்தால்
கிட்டாப் பிராணனே செய்தால் கிடைத்திடும்
ஒட்டா நடுநாடி மூலத்து அனல்பானு
விட்டான் மதிஉண்ண வும்வரும் மேலதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டமா சித்திகளும், அட்டாங்க யோகத்தால் கிடைத்ததற்கு அரியதான பிராண வாயுவை அடக்கி முறைப்படுத்தினால் கிடைக்கும். இதனால், மூலாதாரத்தில் குண்டலினி மூலாக்கினி சுழுமுனை வழியாகச் சென்று சூரிய மண்டலமாகிய மனத் தாமரையில் சிந்தையை நிறுத்திச் செபித்தால், நெற்றிப் புருவ மத்தியில் ஆனந்தத் தேன் பருகும் மேலான நிலை அடையலாம்.

அட்டமா சித்திகள் சித்தி பெற சக்தி துணையாவாள் எனக் கூறும் பாடல் எண் 670

"சித்திகள் எட்டன்றிச் சேரெட்டி யோகத்தால்
புத்திகள் ஆனவை எல்லாம் புலப்படும்
சித்திகள் எண்சித்தி தானாம் திரிபுரைச்
சத்தி அருள்தரத் தான்உள வாகுமே"

முன்னம் கூறப்பட்ட எட்டுவகைச் சித்திகளைத் தவிர அட்டாங்க யோகத்தால் எல்லா வகை அறிவும் கிட்டும். இந்த எட்டு வகைச் சித்திகள் எல்லாம், திரிபுரையாகித் தேவி சக்தி அருள் செய்யத் தானடையக் கைகூடுவதாகும்.

அட்டமா சித்திகள் பெற்றவர் தங்கள் உள்ளத்திற்குள்ளே சிவனைக் காண்பார்கள் எனக் கூறும் பாடல் எண் 671

"எட்டிவை தன்னோடு எழிற்பரம் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகம் சேர்தலால்
இட்டமது உள்ளே இருக்கல் பரகாட்சி
எட்டு வரப்பு இடந்தான்நின்று எட்டுமே"

முன்னே சொல்லப்பட்ட எட்டுச் சித்திகளுடன், உயர்வான பரஞானம் கைகூடப் பெற்றவர்களே சித்தர்கள் எனப்படுபவர்கள். இவர்கள் பரலோகமாகிய சிவலோகம் அடைய, தாங்கள் விரும்பும் தங்களின் இஷ்ட தெய்வமான சிவப்பரம்பொருளைத் தங்கள் உள் ளத்துக்குள்ளே காணுகின்ற பரம்பொருள் காட்சியில் ஊறித் திளைத் திருப்பர். எட்டு என்ற அளவை எல்லையாக உடைய இந்தச் சித்திகள் எல்லாம் இவர்களைத் தாமே வந்தடையும் நிலை அதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான அணிமா (உடலை அணுவைப் போல நுண்ணியதாகச் செய்து கொள்ளும் சித்தி) பற்றிய பாடல் எண் 672

" மந்திர மேறு மதிபானுவை மாற்றிக்
கந்தாய்க் குழியில் கசடற வல்லார்க்குத்
தந்தின்றி நற்காமிய லோகம் சார்வாகும்
அந்த உலகம் அணிமாதி ஆமே"

மந்திர உச்சாடனம் ஏறுகின்ற புருவ மத்தியில், இடகலை, பிங்கலை வழியாகச் செல்லுகின்ற பிராணனை, வலம் இடமாகவும், இடம் வலமாகவும் மாற்றி, முளை அடித்துக் கட்டியது போல, மூலாதாரத்தில் முறையாக நிறுத்தும் பயிற்சியில் தேறியவர்களுக்கு, நாடி நரம்பு இல்லாத ஒளி உடல் பெற்று தாங்கள் விரும்பும் உலகத் தைச் சேர்தல் கைகூடும். இப்படி விரும்பிய உலகத்தை அடைவது அணிமா சித்தியாகும்.

அணிமா சித்தி பெற பன்னிரண்டு ஆண்டுகள் பயிற்சி செய்ய வேண்டும் எனக் கூறும் பாடல் எண் 673

" முடித்திட்டு வைத்து முயங்கில் ஓர் ஆண்டில்
அணிந்த அணிமாகை தானாம் இவனும்
தணிந்த அப்பஞ்சினும் தான்நொய்ய தாகி
மெலிந்துஅங்கு இருந்திடும் வெல்லஒண் ணாதே"

புலனடக்கி யோகப் பயிற்சியை ஓராண்டு (பன்னிரண்டு ஆண்டு காலமான வியாழ வட்டம்) காலம் முறையாக மேற்கொண்டால், அடைய விரும்பும் அணிமா சித்தி கை கூடும். இந்தப் பயிற்சியால் சித்திபெற்றவர் பஞ்சைக் காட்டிலும் மிகவும் மென்மையான உடல் பெற்றவராக, காற்றைப் போலத் திரியும் வல்லமை பெற்றவராவார். இத்தகைய அரிய சித்தியைப் பெற்றவர்களை எவராலும் வெல்ல இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான மகிமா (பெரிதாக இருக்கும் எதையும் விடப் பெரிதாக இருக்கிற தன்மை) பற்றிய பாடல் எண் 676*

"மெய்ப்பொருள் சொல்லிய மெல்லியலாள் உடன்
தற்பொருள் ஆகிய தத்துவம் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடும் ஓராண்டின்
மைப்பொருள் ஆகும் மகிமா அதாகுமே"

*உண்மைப் பொருளான, உயர்வான ஞானத்தை உபதேசித்த அருட்சக்தியுடன், "தத்" என்னும் சிவதத்துவம் சேர, கைக்குக் கிட்டிய சாதனையாக ஓராண்டில் கிட்டும், மறைந்த ஆற்றலான மகிமா (மிகப் பெரிதான உடல் பெறும்) என்னும் சித்தியாகும்.*

*மகிமா சித்தி பெற்றவர் காலத்தைக் கட்டுப்படுத்துவார்கள் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 677*

"ஆகின்ற கால்ஒளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவதும் இல்லையாம்
மேல்நின்ற காலம் வெளியுற நின்றபின்
தான்நின்ற காலங்கள் தன்வழி ஆகுமே"

*ஆகிவரும் நன்மைகளை எல்லாம் தரவல்ல, மூச்சுக் காற்றாகிய பிராணன், இடகலை பிங்கலை என்னும் இடப்பக்கம், வலப்பக்கம் சென்று, புருவ மத்தியிலே பொருந்துகின்ற போது தெரியும் சோதி ஒளியைக் கண்டபிறகு, விரைந்தோடிச் செல்கின்ற காலங்கள் வீணாவதில்லை. இனிவரும் காலம் எதிர்நோக்கி இருக்க, இனித் தான் வாழ உள்ள காலங்கள் தன்வசமாக இருக்கும். (காலம் இவரைக் கட்டாது, காலத்தை இவர் கட்டுவார்)*

*மகிமா சித்தி பெற்றவருக்குச் சிவன் அருள் கூடும் எனக் கூறும் பாடல் எண் 678*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தன்வழி யாகத் தழைத்திடு ஞானமும்
தன்வழி யாகத் தழைத்திடு வையகம்
தன்வழி யாகத் தழைத்த பொருள் எல்லாம்
தன்வழி தன்னருள் ஆகிநின் றானே"

*மகிமா சித்தி பெற்றவன் மூலமாக, அறிவு விருத்தியாகும். அவன் மூலமாகவே உலகம் செழித்துத் தழைக்கும். அவன் மூலமாகவே உலகத்துப் பொருட்கள் எல்லாம் பொலிவுறச் சிறக்கும், பெருமை பெறும். இப்படியாக மகிமா சித்தி பொற்றவன் தான் பெற்ற அந்த ஆற்றலின் அருள் வலிமையால், சிவனருள் கூடப் பெற்றுச் சித்தி பெற்றவனும் ஆனான்.*

*எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான கரிமா (காலத்தை வெல்லும் கலை) பற்றிய பாடல் எண் 680*

"ஆகின்ற மின்ஒளி ஆவது கண்டபின்
பாகின்ற பூவில் பரப்பவை காணலாம்
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவதும் இல்லையே"

*புருவ நடுவில் பிராணன் பொருந்தியிருக்கத் தெரிகின்ற ஒளிச் சுடரைக் காணுகிற பக்குவம் அடைந்தவுடன், விரிந்தகலுகின்ற உள்ளத் தாமரையில், உலகப் பரப்பில் உள்ள பொருட்களை எல்லாம் காணலாம். இந்த நிலையில், தொடர்கின்ற காலங்கள் அவர்களைத் தீண்டுவதில்லை. அவர்களை விட்டு விலகி நிற்கும் கால வேறு பாடுகள். விரைந்தோடிக் கழிகின்ற காலம் அவர்களை ஒன்றும் செய் வதில்லை. அவர்கள் அதனால் எந்தப் பாதிப்பும் அடைவதில்லை. காலத்தை வெல்லும் கலை இந்தக் கரிமா என்னும் சித்தியாகும்.*

*கரிமா சித்தி பெற்றவர் பெறும் அதி உன்னத சக்தி பற்றிய பாடல்எண் 681*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போவது ஒன்றில்லை வருவது தான்இல்லை
சாவது ஒன்றில்லை தழைப்பது தான்இல்லை
தாமதம் இல்லை தமர்அகத் தின்ஒளி
ஆவதும் இல்லை அறிந்துகொள் வார்க்கே"

*முன் பாடலில் கூறிய உள் ஒளியைக் காணப் பெற்றவர்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை, புதிதாக அடைவதற்கும் ஒன்றுமில்லை. இவர்கள் இறப்பதும் இல்லை, மீண்டும் பிறப்பதும் இல்லை. தாமச குணம் அவர்களிடம் காணப்பெறுவதும் இல்லை. தம்முடைய உள்ளத்தில் உண்டாகின்ற சாத்விகம், இராசதம், தாமசம் ஆகிய குணங்கள் ஒன்றுவதில்லை. உள்ளொளி கண்டுணர்பவர்களுக்கு இவை எல்லாம் சாத்தியம் ஆகும்.*

*கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையைக் கூறும் பாடல் எண் 682*

"அறிந்த பராசக்தி உள்ளே அமரில்
பறிந்தது பூதப் படைஅவை எல்லாம்
குவிந்து அவை ஓராண்டு கூடஇருக்கில்
விரிந்த பரகாயம் மேவலும் ஆமே"

*உள்ளம் உணர்ந்த அன்னை பராசக்தி உள்ளத் தாமரையில் ஒன்றிடப் பெற்றவர்களுக்கு, மனதை அலைக்கழிக்கும் புலனிச்சை களும், மற்ற தீய குணங்களும் விலகி விடும். மன உணர்வுகள், புலன்கள் ஒருமுகமாகக் குவிந்து, ஓராண்டு புலன்கள் அடங்க இருந்தால், மிக உயர்ந்த விரிவானதான, மற்ற உடலுக்குள் புகுந்து வெளியேறும் சித்தியும் கைகூடும்.*

*எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான இலகிமா (காற்றைப் போல இலேசாகும் சித்தி) பற்றிய பாடல் எண் 674*

"ஆகின்ற அத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற ஐயாண்டில் மாஇலகு வாகுமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிவருகிற பயன்களை எல்லாம் தரவல்ல, பராசக்தியின் அருளால், மூலாதாரத்தில் இருந்து மேலே செல்லும் எல்லா நிலைகளிலும், அப்பராசக்தி திருவருள் அதுவே துணையாக, கழிந்தோடுகின்ற காலங்கள் சென்று மறையத் தவயோகம் செய்தபடி இருந்தால், ஐந்தாண்டு கால முடிவில், மிகப்பெரும் சித்தியான இலகிமா கைவரப்பெறும்.

இலகிமா சித்தியை அடைந்ததும் பரம்பொருளைக் கண்டறியலாம் எனக் கூறும் பாடல் எண் **675**

"மாஇலகு வாகிய மாயனைக் கண்டபின்
தான்ஒளி யாகித் தழைத்துஅங்கு இருந்திடும்
பால்ஒளி யாகிப் பரந்துஎங்கு நின்றது
மேலொளி ஆகிய மெய்ப்பொருள் காணுமே"

மாபெரும் சித்தியான இலகிமா என்னும் மாயம் பல செய்ய வல்ல சித்தியை அடைந்தவுடன், தானே ஒளியாகத் தன்னுள்ளே அருளாற்றல் பெருக, அந்த மகிழ்ச்சியில் திளைத்திருப்பார். இப்படித் திளைத்திருக்கும் காலத்தில், பால் போன்ற தூய வெள்ளை ஒளிச் சுடராய்த் தன்னைச் சுற்றித் தன் தவ ஆற்றல் நிலா வட்டமாகத் திகழ, எல்லாவற்றிற்கும் மேலான, மெய்யான பரம்பொருளைக் கண்டறிவார்.

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான பிராத்தி (மண்ணில் இருந்துகொண்டு விண்ணைத் தொடும் சித்தி) பற்றிய திருமந்திரப் பாடல் எண் **679**

"நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படைஅவை எல்லாம்
கொண்டவை ஓராண்டு கூட இருந்திடில்
விண்டதுவே நல்ல பிராத்தி அதாகுமே"

யோகப் பயிற்சியால், உலகத் தத்துவ ஞானங்களுக்கெல்லாம் தலைவியாகிய பராசக்தியுடன் உள்ளமும் உணர்வும் ஒடுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றன. ஐம்பூதங்களும், மற்ற வெளி அண்டப் பொருட்கள் எல்லாமுங் கூட அகக் கண்ணுக்குத் தெரியவந்தன. இப்படி அகக் காட்சி கண்ட நிலையிலேயே ஓராண்டுகூட இருந்தால், அணிமா, இலகிமா, மகிமா சித்திகள் கைவந்தபிறகு கூட ஓராண்டுகாலம் முயன்றால், அடையப் பெறுவது பிராந்தி (மண்ணில் இருந்து கொண்டே விண்ணைத் தொடுகின்ற வித்தை) என்னும் சித்தியாகும்.

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான பிராகாமியம் (எங்கும் நிறைந்திருக்கும் சித்தி) பற்றிய பாடல் எண் **683**

"ஆன விளக்கொளி ஆவது அறிகிலார்
மூல விளக்கொளி முன்னே உடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடுஎளி தாநின்றே"

உள்ளத்தினுள்ளே ஒளிச் சுடராய்ச் சோதி ஒன்று உள்ளது. இதை மூலாதாரத்தில் மூலக் கனலை உடையவர்கள், இந்த மூலாக்கினியே ஆன விளக்கொளியாவதை தவப்பயிற்சி இன்மையால், அறியமாட்டார்கள். ஆனால் யோகத்தால் இரு புருவ மத்தியில் ஒலியோடு இயங்கும் ஒளி உதயம் உணரப் பெற்றவர்கள் கண்டு கொள்வார்கள். இவர்களுக்கு விண்ணுலகத்துத் தேவர்களுக்கு மேலான சிவப்பரம் பொருளின் திருவடி ஒளியாகிய மோட்ச இன்பம் மிக எளிதாகக் கிட்டும். அதாவது பிரகாமியம் (எங்கும் நிறைந்திருக்கும் சித்தி) கிட்டும்.

எட்டுவகைச் சித்திகளில் ஒன்றான ஈசத்துவம் (ஆக்குதல் அழித்தல், அருளல் ஆகிய பரம்பொருளின் ஆற்றலைத் தரும் சித்தி) பற்றிய பாடல் எண் **684**

"நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படைஅவை எல்லாம்
கொண்டவை ஓர்ஆண்டு கூடி இருந்திடில்
பண்டைய ஈசன் தத்துவம் ஆகுமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங் களிலும் நின்று நிலைத்திருக்கும் சதாசிவமாகிய பரம்பொருள் துணையால், காணுதல், கேட்டல், உண்ணல், உணர்தல், நுகர்தல் என்னும் ஐம்புலன்களின் இச்சையும் அடங்க அடக்கித், தவ யோகத்தில் அணிமா முதலான ஆறு சித்திகளும் பெற்ற நிலையில், மேலும் ஓர் ஆண்டு உள்ளம் ஒன்றத் தவயோகம் செய்தால், உலகைப் படைத்த பழம்பெரும் மூலப் பொருளான பரமன் தத்துவ நிலை எய்தல் ஈசத்துவம் (ஆக்குதல் அழித்தல், அருளல் ஆகிய பரம்பொருளின் ஆற்றலைத் தரும் சித்தி) ஆகும்.

சந்திரனைப் போல் தெய்வ நிலை பெறலாம் எனக் கூறும் பாடல் எண் 685

"ஆகின்ற சந்திரன் தன்ஒளி யாய்அவன்
ஆகின்ற சந்திரன் தட்பமும் ஆயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தான்அவன் ஆமே"

வளரும் பிறை நிலவைப் போன்ற நெற்றியில் புருவ நடுவில் ஒளி காணப் பெறுபவன், சந்திரனைப் போலவே குளிர்ச்சி உடையவ னாகவும் இருப்பான். சந்திரன் வளர்வது போல் புருவ நடுவில் ஒளியைக் காணும் சித்தியை மேலும் முயன்று வளர்த்துக் கொண் டவன், தானே ஒரு சந்திரனைப் போலத் தெய்வ நிலை பெறலாம்.

ஈசத்துவ சித்தி பெற்றவரின் வல்லமை பற்றிக் கூறும் பாடல் எண் 686

"தானே படைத்திட வல்லவன் ஆயிடும்
தானே அளித்திட வல்லவன் ஆயிடும்
தானே சங்காரத் தலைவனும் ஆயிடும்
தானே இவன்எனும் தன்மையன் ஆமே"

ஈசத்துவ சித்தி பெற்றவன் தானே எல்லாவற்றையும் படைக்கும் வல்லமை பெற்றவனாயிடுவான். தானே படைத்த உயிர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கவும் திறமை உடையவனாயிடுவான். அவனே அழிக்கும் ஆற்றல் உடையவனுமாவான். இவன் படைத்து, காத்து, அழிக்கும் பரம்பொருள் ஆற்றலைப் பெற்றவனாகவும் ஆவான்.

தெய்வ தரிசனம் தேடி வரும் எனக் கூறும் பாடல் எண் 687

"தண்மைய தாகத் தழைத்த கலையின்உள்
பன்மைய தாகப் பரந்தஐம் பூதத்தை
வன்மைய தாக மறித்திடில் ஓராண்டின்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே"

குளிர்ச்சி உடையதாகப், பரந்து விரியும் சந்திர கலையில், பலவாகப் பிரிந்த ஐம்பொறிகளையும், அடக்கி ஒருமுகப்படுத்தி மனம் ஒன்றி இருந்தால், ஓராண்டு காலத்தில் மேலான பரம் பொருள்காட்சி தெளிவாகும்.

எட்டுவகைச் சித்திகளில் மிகவும் மேலான ஒன்றான வசித்துவம் என்னும் சித்தி பற்றிய பாடல் எண் 688

"மெய்ப்பொரு ளாக விளைந்தது ஏதெனில்
நற்பொரு ளாகிய நல்ல வசித்துவம்
கைப் பொருளாகக் கலந்த உயிர்க்கெல்லாம்
தற்பொரு ளாகிய தன்மையன் ஆகுமே"

உண்மையான ஞானமாக உள்ளத்தில் உண்டான செல்வம் எது என்றால், அது மேலான செல்வமான "வசித்துவம்" (எல்லாவற்றை யும் தன்பால் ஈர்த்து வசியப்படுத்தும் சக்தி) என்ற சித்தியே. இந்தச் சித்தி கைமேல் இருக்கின்ற உடனடியாகப் பயன்படுத்த உதவுகின்ற செல்வமாக, உயிர்க் குலத்துக்கெல்லாம் தான் விரும்பிய படி இயக்கக் கூடிய பரம்பொருளைப் பொன்ற மேலான ஒரு நிலை யைத் தருகிற அரிய பெரிய செல்வமாகும்.

வசித்துவ சித்தி வளமும், வலிமையும் அடைய மேற்கொள்ள வேண்டிய மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 700



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடின்
ஆய்வரும் ஐஞ்ஞூற்று முப்பதொடு ஒன்பதும்
ஆய்வரும் வாயு வனப்புள் இருந்ததே"

ஆராய்ந்து அறிவதற்கு அரியதான பராசக்தியுடன், ஆய்ந்தறியத் தக்கதான இந்தப் பிராணன் அளவு எவ்வளவு என்று கேட்டால், அது எண்ணிக்கையில் ஐந்நூற்று முப்பத்தொன்பது ஆக இருந்தால், அந்த அறிதற்கரியதான பிராணன் வளமுற்று ஒடுங்கும். சலனமற்று இருக்கும். ஒருநாளில் மனிதன் உள்ளிளுத்து வெளி விடும் மூச்சுக் காற்றின் எண்ணிக்கை **21,600.** ஒரு நொடிக்கு ஆறு முறையாகின்றது. இந்த மூச்சை உள் இழுத்து, உள் நிறுத்தி, வெளி விடும் கால அளவு கூடும்போது, இந்த நொடிக்கு ஆறு முறை என்ற அளவு குறையும். இப்படி ஐந்நூற்றி முப்பத்தொன்பது, ஐம்பத்தொன்று என்ற அளவு குறையக் குறைய வசித்துவ சித்தி வளமும் வலிமையும் அடைகிறது.

அட்டமா சித்தி அடைந்த பின் என்ன நடக்கும் எனக் கூறும் பாடல் எண் 703

"ஆறது கால்கொண்டு இரதம் விளைந்திடும்
ஏழது கால்கொண்டு இரட்டி இறக்கிட
எட்டது கால்கொண்டு இடவகை ஒத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே"

ஆறு ஆதாரங்களிலும், தங்கி சித்தத்துள்ளே இனிய அமுதத் துளிகளைத் துளிர்க்கச் செய்யும், ஏழு நாடிகளிலும் இடம்பெறும் பிராணனை உள்ளே இழுக்கும் அளவிற்கு, இரண்டு மடங்கான கால அளவு உள்ளே நிறுத்தப் பழகி விட்டால் (கும்பகம்), அட்டமா சித்தி களும் மனம் அடையப் பெற்ற பின்னர், உடலின் ஒன்பது மண்ட லங்களிலும் வாயு அடங்கி ஒடுங்கும். (மூலாதாரம், சுவாதிட்டானம் போன்ற ஆறு ஆதாரங்கள். இடகலை, பிங்கலை போன்ற ஏழு நாடிகள். அணிமா, மகிமா முதலான எட்டுச் சித்திகள். நீர், வாயு என ஒன்பது மண்டலங்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அட்டமா சித்தி பெற்றோர் பர ஒளியை தன்னுள்ளே காண்பார் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 689*

"தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்பொருள் கண்டிடின்
பொன்மை யதாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே"

**தன்னுள் முயன்ற தவயோகத்தில் சிறந்து விளங்கும் ஒளிவடி வான உடல் பெற்ற தவயோகி, மிக நுண்ணியதான உள்ளொளியை, ஆன்ம சொரூபத்தை உணர, பொன்போல் ஒளிவீசும் உடல் விளங்க, புலனிச்சை எல்லாம் விலகிப் போக, உயிர்க்கு நன்மை செய்யும் பர ஒளியைத் தன்னுள்ளே காணுவான்.**

*அட்டமா சித்தி பெற்றோர் புவனமெல்லாம் போய் வரலாம் எனக் கூறும் பாடல் எண் 690*

"நற்கொடி ஆகிய நாயகி தன்னுடன்
அக்கொடி ஆகம் அறிந்திடில் ஓராண்டு
பொற்கொடி ஆகிய புவனங்கள் போய்வரும்
கற்கொடி ஆகிய காமுகன் ஆமே"

**நன்மை தரும் பொற்கொடி போன்ற பராசக்தி அருளால், அந்தப் பராசக்தியின் ஒளி தன்னுள் சுடர்விடுவதை உணர்ந்து ஓராண்டு தவயோகம் புரிந்தால், பொன்னொளி வீசும் உலகமெல்லாம் சென்று வரும், கல்கொடி போன்ற வலிவும், பொலிவும் கொண்ட உள்ளத்தை விரும்பி அடைவான்.**

*அட்டமா சித்தி பெற்றோர் உலகாளும் வல்லமை பெறலாம் எனக் கூறும் பாடல் எண் 691*

"காமரு தத்துவம் ஆனது வந்தபின்
பூமரு கந்தம் புவனம் அதாயிடும்
மாமரு உன்னிடை மெய்த்திடும் மான்அனாய்
நாமரு வும்ஒளி நாயகம் ஆனதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியவற்றை வசியப்படுத்தித் தன் வயமாக்கும் தத்துவமாகிய வசித்துவ சித்தி கைவரப் பெற்ற பின்னர், பூவில் பொருந்தி நிற்கும் வாசம் போல உலகம் அவர்களுக்கு வசப்பட்டு நிற்கும். பெரிய அருட்சக்தி நீ அடைவாய். அதன் மூலம் நினைத்த இடம் செல்லும் ஆற்றல் கைகூடும். மனம் எண்ணும்படி உலகைப் படைக்கின்ற தலைமைத் தன்மை அடைதலும் கூடும்.

அட்டமா சித்தி பெற்றோர் பேரொளியைக் காணலாம் எனக் கூறும் பாடல் எண் 692

"நாயகம் ஆகிய நல்ஒளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங்கு இருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டபின்
பேயகம் ஆகிய பேரொளி காணுமே"

உள்ளொளியே உயிர்க்குத் தலைமையான நல்லொளி. இதனைத் தவயோகத்தால் கண்ட பிறகு, அவ்வுள்ளமே தாய்வீடாக அங்கு தங்கி அவ்வொளி பெருகிப் பரவி நிற்கும். விசாலமான வெளி உலகைக் கண்ட அந்த ஒளி இப்போது தவ முயற்சியால் தன் உள்ளுக் குள்ளேயே புகழ்ந்து பேசப்படும் பேரொளியாகிய பெருமைக்குரிய ஒளிக்காட்சியைக் கண்டு ஆனந்திக்கும்.

மூச்சுக் காற்றே பேரொளி எனக் கூறும் பாடல் எண் 693

"பேரொளி ஆகிய பெரியஅவ் எட்டையும்
பாரொளி ஆகப் பதைப்புஅறக் கண்டவன்
தாரொளி ஆகத் தரணி முழுதுமாம்
ஓர்ஒளி ஆகிய கால்ஒளி காணுமே"

உயிர்க்கு ஒளி தருவது போன்ற ஆற்றலுடைய பெரிய ஒளிக் கதிர்கள் அட்டமா சித்திகள் எட்டும். இதன்வழி உலகம் முழுவதும் (பாரொளியாக) தடுமாற்றமின்றி (பதைப்பற)க் கண்ட தவயோகி, இந்தப் பூவுலகம் முழுவதுமே செல்லுகின்ற ஒளியாக, ஓரே ஒளியாகப் பிராணனாகிய மூச்சுக் காற்று ஒளியைக் காணுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரப் பாடல்களில் பரிபாசை – மறைபொருள் கூற்று

பொதுவாக சித்தர்கள் தங்கள் பாடல்களில் மறைவாக உண்மை நிலையை விளக்கும் சொற்களின் மறைபொருளை அறிந்தால்தான் நாங்கள் அப்பாடலின் பொருளைச் சரியாக அறிய முடியும். உதாரணத்திற்கு திருமந்திரத்தில் வரும் **2869** ஆவது பாடலைப் பார்ப்போமானால்

"வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுது கொண்டுஓடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே"

இப்பாடலை சாதரணமாக நாங்கள் பார்ப்போமானால் "கத்த ரிக்காய் விதையை நட்டால் பாகல் மரம் முளைத்துப் பாகற்காய் காய்த்தது. பூமியில் மண்ணைத் தோண்டினால் பூசணிப் பூ பூக்கின்றது. தோட்டம் செய்யும் குடி மக்கள் வணங்கி விட்டு ஓடினர். அப்போது வாழைப் பழம் பழுத்தது". எனத்தான் இப்பாடலின் பொருளை நாம் கொள்வோம். ஆனால் திருமூலரின் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. அதாவது மறைபொருளாக இப்பாடலின் பொருள் கத்தரி விதை மிகவும் சிறியது. யோகப் பயிற்சியில் ஈடுபடுவோரின் யோக முயற்சியின் ஆரம்பத்தை இது குறிக்கின்றது. புருவ நடுவில் நினைவை ஒன்றச் செய்து, தியானம் செய்கையில் மெல்லிய அதிர்வு தோன்றும். இது வளர வளர யோக நினைவால் வைராக்கியமுடைய மனம் அமையும். இதையே கசப்பான பாவற்காய் எனக் கூறப்பட்டுள்ளது. பூமியைத் தோண்ட பூசணி பூத்தது என்றது மனமாகிய நிலத்தில் தத்துவ ஆய்வைச் செய்த போது, மஞ்சள் ஒளி உடைய சகஸ்ரதளம் ஒளிபெற்றது. தோட்டத்துக் குடிகள் வணங்கி வழிவிட்டு ஓடினர் என்பது உடம்பில் பொருந்தியுள்ள அந்தக்கரணங்கள், ஐம்பொறிகள் செயலற்று அடங்கின என்பதாகும். வாழைக்கனி முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுத்தது என்பது தவயோகம் சித்தி பெற்ற நிலையில், வாழைக்கனி போல திருவடிப்பேறு (முத்தின்பம்) கைகூடிற்று என்பதாகும்.

திருமந்திரத்தில் இவ்வாறு பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போமானால் திருமந்திரப் பாடல் எண் 2122

"காயப்பை ஒன்று சரக்கு பலஉள
மாயப்பை ஒன்றுஉண்டு மற்றுமோர் பைஉண்டு
காயப்பைக்குள் நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணாய் மயங்கியவாறே"

உடம்பாகிய இந்தக் கோணிப்பைக்குள் பலவகையான சரக்குகள் (எலும்பு, சதை, இரத்தம், அல்லது ஆணவம், சினம் என்னும் குணங்கள்) உள்ளன. இந்தப் பைக்குள் இன்னொரு பை (மாயப்பை - கண்ணுக்குப் புலப்படாது மறைந்திருக்கும் வினைப்பை) உள்ளது. மற்றுமோர் பை (மனம், உணர்வு முதலியனவற்றைக் கருவியாகக் கொண்டு உடம்பை இயக்கும் பை). இந்த உடம்பாகிய பைக்குள் இருக்கின்ற கள்வனாகிய உயிர் புறப்பட்டுப் போய்விட்டால், காயப்பையும், மாயப்பையும், மண்ணில் கலந்து மறைந்துவிடும்.

பாடல் எண் 2866

"காயம் பலகை கவறு ஐந்து கண்மூன்றாய்
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோர் அக்கரம்
ஏய பெருமான் இருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பு அறியேனே"

வாழ்க்கை ஒரு சூதாட்டம் போல உள்ளது. இதில் மனித உடம்பே சூதாட்டப் பலகை. சூதாட்டக் கருவிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தாகும். சூதாடும் இடம் இச்சை, ஞானம், கிரியை மூன்றின் செயல் நிலைகளும் ஆகும். ஐம்பத்தொரு எழுத்துகளையும் (முன்பு இருந்த தமிழ் எழுத்துக்கள் அ முதல் க்ஷ வரை), சூதாட்டக் காய்கள் நிரப்பு அறையாகக் கொண்டு எம்பெருமான் நிகழ்த்தும் இம்மாயச் சூதாட்டத்தின் உட்பொருள் எனக்குப் புரியவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதரை அழித்துப் புதுநிலம் ஆக்குக எனக் கூறும் பாடல் எண் 2867

"தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகைஅறிவார் இல்லை
மாறிக் கிடக்கும் வகை அறிவாளர்க்கு
ஊறிக் கிடந்தது என்உள்அன்பு தானே"

சிவநெறியாகிய தூய்மயதான நன்னெறி புதர்மண்டிக் கிடக்கிறது. கன்மம் மாயை என்னும் பல்பூண்டுகள் களையாக மண்டிக் கிடக்கின்றன. இப்படிப் பாழடைந்துள்ள நிலத்தைத் திருத்திப் புல்பூண்டுகளாகிய புதர்களை அகற்றி, நிலத்தைச் சீர்செய்யும் நினைப்பு எவருக்கும் இருப்பதாய்த் தெரியவில்லை. இதை மாற்றி அமைக்கின்ற வழிமுறைகளை மேற்கொள்பவர்கள் பக்கம், என் உள்ளத்து எழும் அன்பு ஊறிப் பெருக்கெடுத்துப் பெருகி நிற்கும்.

ஏணிமேலேறி எழுகடல் காட்சி எனக்கூறும் பாடல் எண் 2868

"ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனைஉள
ஏறற்கு அறியதோர் ஏணிஇட்டு அப்பனை
ஏறல் உற்றேன் கடல்ஏழும் கண்டேன்"

உடம்பு ஒரு மாளிகைபோல் உள்ளது. இதற்கு ஆறு ஆதாரங்கள் (மூலாதாரம், கொப்பூழ், மேல் வயிறு, நெஞ்சு, கழுத்து, புருவநடு) மாடங்களாக உள்ளன. இந்த மாளிகையில் சந்நிதி போல் உள்ளது மூலாதாரம். இந்த மூலாதாரத்தில், இனிக்கும் சுவைநீர் தரும் பனை மரங்கள் (முதுகுத் தண்டு) நான்கு (நான்கு இதழ் தாமரை போலுள்ள மூலாதாரம்) உள்ளன. இந்தப் பனை மரத்தின் மேல் ஏற வேண்டும். இதற்கு மர ஏணியும், மானிடர் காலும் உதவாது. எனவே அகத்தின் வழி உள்முகமாகப் பிராணன் என்னும் மூச்சுக் காற்றை, சுழுமுனை என்கின்ற நடுநாடியான ஏணி கொண்டு மேலேற்றி, சகஸ்ரதளத்தை (உச்சியை) அடைந்தவுடன், எழுகடல் பிறவி நீங்கக் கண்டேன்.

சிவபதி சேரும் வழி பற்றிக் கூறும் பாடல் எண் 2870



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்உண்டு செய்யின் தெளிவு அறிவார்இல்லை
மைஅணி கண்டன் மனம்பெறின் அந்நிலம்
பொய்ஒன்றும் இன்றிப் புக எளிதாகுமே"

ஐம்பூதத் தொகுப்பாக அமைந்த மனித உடம்பு உருவாக ஒரு விதை மூலம் உண்டு. ஆன்மாவை அறியச் செய்யும் பரம்பொருள் சீவன் திருவருள் ஆற்றலை முழுதுணர்ந்தறிந்தவர்கள் யாருமில்லை. நீலநிறக் கழுத்துடைய பரம்பொருளின் அருட் கருணை கிடைத்தால் அதுவே ஆன்மாக்கள் எளிதில் செல்லும் இடமாகும்.

சிவநிலம் மனித மனம் எனக் கூறும் பாடல் எண் 2871

"பள்ளச்செய் ஒன்று உண்டு பாழ்ச்செய் இரண்டுள
கள்ளச்செய் அங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் அங்கே உழவு செய்வார்கட்கு
வெள்ளச் செய்ஆகி விளைந்தது தானே"

பள்ளத்திலே உள்ள பயனற்ற நிலம் ஒன்று இருக்கின்றது. இதுவே உறக்க நிலை. கூடவே பயிர் விளையாத நிலம் இரண்டு இருக்கின்றது. இது நனவு, கனவு என்னும் இரு நிலைகள். இவற்றோடு மறைந்திருந்தருளும் சிவமாகிய விளைநிலமும் அங்கே கலந்திருந்தது. இதனை உணர்ந்து, மனமாகிய அந்த நல்ல நிலத்தை உழுது, பண்படுத்தி விளைவு செய்ய விரும்புபவர்களுக்கு, சிவனருளாகிய வெள்ளம் பாய்ந்து பேரின்ப விளைச்சல் பெருமளவு கிட்டியது.

விழலுக்கு நீர்ப்பாச்ச நினையாதீர் எனக் கூறும் பாடல் எண் 2873

"ஏற்றம் இரண்டுஉள ஏழு துரவுள
மூத்தாள் இறைக்க இளையாள் படுத்தநீர்
பாத்தியில் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடில்
கூத்தி வளர்த்ததோர் கோழிப் புள்ளாமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலின் கருத்தை மேலோட்டமாகப் பார்த்தால் ஏழு கிணற்றில் இருந்து இரண்டு ஏற்றங்கள் வளியாக மூத்தவள் கீழிறக்க, இளையவள் மேல் ஏற்றிய நீரை பாத்தியில் பாய விடாது பாழ் நிலத்தில் பாச்சுவது விலை மகள் வளர்த்த கோழிக் குஞ்சு போலாகும் எனத்தான் இப்பாடலின் பொருளை நாம் கொள்வோம். ஆனால் திருமூலரின் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. அதாவது மறைபொருளாக இப்பாடலின் பொருள் ஏற்றம் இரண்டு என்பது வலப்பக்கநாடி, இடப்பக்கநாடி வழியாக வந்து போகும் மூச்சு. ஏழு துரவு (கிணறு) என்பது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, ஆகிய ஆறு ஆதாரங்களுடன் உச்சித் தொளையாகிய சகஸ்ரதளமும் சேர்ந்து ஏழாகும். மூத்தாள் இறைக்க என்பது மூத்தவளான இடப்பக்க நாடியான சந்திரகலை வழியாக மூச்சை உள்இழுக்கும் மூச்சு. இளையாள் படுத்தநீர் என்பது இளையவள் என்று சொல்லப்பட்ட வலப்பக்க நாடியான பிங்கலை (சூரியகலை) வழியாக வெளிவரும் மூச்சு. இரண்டும் நடு நாடியாகிய பாத்தியில் பொருந்தி (பாய்ந்து) நிற்கச் செய்யாமல் அதாவது பூரகம் (உள்ளுக்கு இழுத்தல்), இரேசகம் (வெளி விடுதல்), கும்பகம் (அடக்குதல்) வீணாக வெளியேறச் செய்வார்களானால் இது பாழ் நிலத்தில் பாச்சும் நீர் போலாகும். இது விலைமகள் வளர்த்த கோழிக்குஞ்சு போல காம இச்சைக்குப் பலியாகிக் கலங்கி நிற்கும். அதாவது உயிர்த் துணையாக நின்று உதவாது என்பது கருத்து.

ஞான உழவு நன்செய் விளைவு எனக் கூறும் பாடல் எண் **2872**

"மூவனை ஏரு உழுவது முக்காணி
தாமணி கோலி தறிஉறப் பாய்ந்திடும்
நாவணை கோலி நடுவில் செறுஉழார்
கால்அணை கோலிக் களர் உழுவாரே"

இடகலை, பிங்கலை, சுழுமுனை என்று மூன்றின் வழி இயங்கும் பிராணன் என்னும் உயிர் மூச்சு ஏர் ஆக, முக்கோண வடிவாக உள்ள மூலாதாரமாகிய நிலத்தில் உழவு நடைபெறும். உழுதபிறகு, முதுகுத் தண்டான கயிற்றால் கட்டப்பட்டு, சுழுமுனையில் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்த சிவ உணர்வில் திளைத்து, நாக்குக்கு மேல் தொண்டைக் குழிக்குள், சிவானந்த தேனமுதம் விளையும் ஞானத் தவம் செய்ய முடியாதவர்கள், மூச்சினை அடக்கி மோனத்தவம் என்னும் களர் நிலத்தை (விளையாத களிமண் நிலத்தை) உழுது பயிர் விளைவிக்க முயலுவோர் ஆவர்.

*பால் தராது பட்டிப் பசு எனக் கூறும் பாடல் எண் 2874*

"பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுஉள
குட்டிப் பசுக்கள் ஓர்ஏழுள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே"

மேய்ப்பவர் இன்றித் திரியும் பட்டிப் பசுக்கள் (பால் கறக்காத பசு, பட்டிமாடு) இருபத்து நாலு என்பது ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கையும், குட்டிப் பசுக்கள் ஏழும், ஐந்தும் என்பது வித்தியா தத்துவம் ஏழும், சிவ தத்துவம் ஐந்துமாகும். குட்டிப் பசுக்கள் குடம் குடமாகப் பால் சொரிந்தாலும் ஒரு பயனும் இல்லாத வறட்டுப் பசுவே ஆன்மாவுக்கு அமைந்தது. சீவாத்துமாக்கள் பால் தரும் குட்டிப் பசுவைத் தேடாமல், புறநாட்டம் என்னும் பட்டிப் பசுவை (பால் தராத வறட்டுப் பசுவை) கட்டி அழுவதைக் கேலி செய்யும் மந்திரம் இது.

*ஆன்மப் பசுவை அலைய விடாதீர் எனக் கூறும் பாடல் எண் 2875*

"ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்கள் ஒருகுடம் பால்போதும்
காற்றுப் பசுக்கள் கறந்துண்ணும் காலத்து
மாற்றுப் பசுக்கள்வரவு அறியோமே"

ஈற்றுப் பசுக்கள் (பால்வற்றிப் போன பசுக்கள், பால் தராத பசுக்கள்) இருபத்து நான்கு உள்ளன என்பது ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கைக் குறிக்கின்றன. ஆனால் ஆன்மாவிற்குப் பால் ஊறும் பசுக்கள் தரும் ஒரு குடம் பாலே போதுமானது. என்பது ஊற்றுப் போல ஒளி வீசும் சிவ தத்துவத்தைக் குறிக்கிறது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமல் காற்றுப் பசுக்களாகிய இடப்பக்கம், வலப்பக்கம் மூக்கு வழியாக வந்து போகும் காற்றைச் சுவாசித்து வாழும் காலத்தில் (உலகில் வாழும் போது) மாற்றுப் பசுக்களான புலனிச்சைகள் நம்மில் பொருந்த, நாம் அதன் வழிச்சென்று, வாழ்வைப் பாழாக்கிக் கொள்வதை உணராமல் இருக்கின்றோமே! அறியாமை அல்லவா இது? என்பது குறிப்பு.

*சீவனுக்குரிய இடம் சிவதளம் எனக் கூறும் பாடல் எண் 2876*

"தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்
மொட்டாய் எழுந்தது செம்பால் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மடிந்திட்டுத்
தட்டான் தனைத் தகைந்து கொண்டானே"

உயிர் (சீவன், தட்டான்) உள்ளத்துள் பொருந்த இடம் தருவது உடம்பு. இதன் உச்சியில் மேலே (மச்சு, வீட்டின் உயர்ந்த இடம்) அதாவது உச்சித் தலையில் (ஆயிரம் இதழ் தாமரை சகஸ்ரதளம்) செழுமையான, சிவந்த மொட்டுப்போல் தோன்றி, மலர்ந்து வட்ட வடிவமாக "ஓம்" என்னும் பிரணவ ஒளியாகி, நமசிவாய என்னும் மெய்யான ஐந்தெழுத்தோடு கலந்து, அதனைத் தன்னிடமாகக் கொண்டுவிட்டது.

ஞான வித்தை நடவு செய்வீர் எனக் கூறும் பாடல் எண் 2877

" அரிக்கின்ற நாற்றங்கால் அல்லல் கழனி
திரிக்கின்ற ஓட்டம் சிக்கெனக் கட்டி
வரிக்கின்ற நல்லான் கறவையைப் பூட்டில்
விரிக்கின்ற வெள்ளரி வித்து வித்தாமே"

அரிக்கின்ற நாற்றங்கால் என்பது கட்டிவைத்துள்ள நாற்றங்கால் உட்கருத்து துன்ப வினைகள் விளையும் வயல் இந்த உடம்பு. இதில் கீழ்முகமாகச் செல்லும் மூச்சுக்காற்றை மறித்து, மேல்முகமாகச் செலுத்தி, நல்ல கறவைப் பசுவான சிவ தத்துவத்துடன் பொருந்தச் செய்தால், சிறிய வெள்ளரி விதைபோல உயிர்ச்சத்து (வீட்டின்பம்) விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு

மனித குலம் தோன்றிய காலத்தில் இருந்தே மனிதன், குரு மூலமாக, சீடர்களாக இருந்து அறிவைப் பெறும் செயல்பாடும் தொடங்கிவிட்டது. உலகியல் வாழ்க்கை நெறிகளை தாய், தந்தை, ஆசிரியர் மற்றும் பெரியோர்களின் செயல்பாட்டைப் பார்த்தும், அவர்கள் கூறும் வார்த்தைகளைக் கேட்டும், சடப் பொருட்களான இயற்கை, புத்தகம், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம், ஆகியனவற்றிற்கு ஊடாகவும் மனிதன் தனது அறிவைப் பெறுகின்றான். இந்த அறிவு சித்துப் பொருளான சிவத்தை அறிய உதவாது. சிவத்தை சிவஞானத்தால் தான் அறிய முடியும். சிவஞானம் குருவின் உபதேசத்தால் நிகழும். திருமந்திரத்தில் திருமூலநாயனார் குரு என்னும் சொல்லால் ஞானகுருவையே குறிப்பிடுகின்றார். சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான உமாபதி சிவாச்சாரியார் அருளிய "திருவருட்பயன்" 50 ஆவது பாடல்

" ஞானம் இவனொளிய நண்ணியிடும் நற்கல்அநல்
பானு ஒழியப் படின்"

"சூரிய ஒளி இல்லாமல் சூரியகாந்தக் கல்லில் தீ தோன்றுமானால் அருள் வழங்கும் குரு இன்றி ஆன்மாவுக்கு ஞானம் தோன்றலாம்." அதாவது குரு இல்லாமல் உயிருக்கு ஞானம் உண்டாகாது எனக் கூறுகின்றது.

சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான மெய்கண்ட தேவர் அருளிய "சிவஞான போதம்" எட்டாம் சூத்திரம்

" ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

உயிரினுள் உடனாய் இருந்த பரம்பொருள் உயிர் செய்த புண்ணியத்தின் மிகுதியினால் குருவடிவாய் எழுந்தருளி வரும். அவ்வாறு வந்த இறையருள் உயிரை நோக்கி ஐம்பொறிகள் ஆகிய வேடர்களுடன் சேர்ந்து பழகி வளர்ந்து வந்ததினால் மயங்கித் துன்புற்றாய் என்று அறிவிக்கும். அத்தகைய தீட்சை நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பொறிகளை விட்டு நீங்கி இறைவனுக்கு வேறாகிய பொருளாக இல்லாத காரணத்தால் உயிரானது அவ்விறைவனின் திருவடிகளை அணைத்து நிற்கும்.

திருமந்திரம் பாடல் எண் 1581 இன் மூலம் திருமூலநாயனார் சிவப்பரம்பொருள்தான் ஞான குருநாதன் எனக் கூறுகின்றார்.

" குருவே சிவம்எனக் கூறினன் நந்தி
குருவே சிவம்என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே."

சிவப்பரம்பொருள்தான் ஞானகுருநாதன் என்று சொல்லி அருளினான் நந்தியெம்பெருமான். இதை இன்னும் பலர் அறியாமல் இருக்கின்றார்களே. குருநாதன்தான் சிவப்பரம்பொருளாகவும், சீவர்களுக்கெல்லாம் மேலான தலைவனாக, உலகாட்சி செய்பவனுமாய் இருக்கின்றான். ஞானகுருநாதனான இவன் வாக்கும் மனமும் கடந்து நிற்கின்ற தலைவனுமாம்.

இதே கருத்தை கூறுகிற திருமந்திரம் பாடல் எண் 1584

" திரு ஆய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளாது அருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் அருளாவிடில் ஓர் ஒண் ணாதே"

போற்றப்படுவதாகிய தவஞானம் சித்திக்கப் பெறுவதும், பேரின்பப் பேறு பெறுவதும், இவற்றை பெற்றுவிட்ட பெருமையால், மயங்கித் திரியாது, அடங்கி இருக்கப் பெற்ற அருட் பேறும், மனமயக்கம் நீங்க, உண்மைப் பொருள் அறியும், வேதங்களின் முடிவான உபநிடதங்கள் கூறும் ஞான விளக்கங்களும், (சீவன்களுக்கு உணர்த்தத் தலைவனாகிய) இறைவன் குருவடிவம் கொண்டு வந்து உபதேசம் செய்யாவிட்டால், மானிடச் சீடர்களால் அதை அறிந்து கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குருவின் தகமை பற்றி திருமந்திரம் பாடல் எண் 2058*

' சத்தும் அசத்தும் சதசத்தும் தான்காட்டிச்
சித்தும் அசித்தும் சிவபரத்தை சேர்த்துச்
சுத்தம் அசுத்தம் அற சுகமான சொல்
அத்தன் அருட்குருவாம் அவன் கூறலே"

**சத்தான அழிவற்ற பரம்பொருள் சத்தாகவும், அசத்தாகிய மாயையுடன் சேர்ந்து அசத்தாகவும், சதசத்தாகவும் சிவத்தோடு பொருந்தி சுத்தமாயை, அசுத்த மாயை அகல உதவும் இனிய சொல்லான ஐந்தெழுத்தை அருளிச் செய்கின்றவனே உயிர்களுக்குத் தலைவன். அருளுபதேசம் புரியத்தக்க நல்ல ஞான குரு ஆவான்.**

*மாணிக்க மணிகள் ஞானிகள் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 536*

"கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
எய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றும்
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தான்அறக்
கைப்பிட்டு உண்பான்போன்றும் கன்மிஞானிக்கு ஒப்பே"

**கையில் கிடைத்திருக்கும் விலை மதிக்க முடியாத பெரிய மாணிக்கத்தைக் கீழே போட்டுவிட்டு காலில் தட்டுப்பட்ட வெறும் கல்லைச் சுமந்துகொண்டிருப்பவன் தலை எழுத்தைப் போலும், கைக் கெட்டும் தூரத்தில் கையிலேயே இருக்கும் நெய், பால், தயிர் போன்ற நல்ல உணவு இருக்க, தன் உடலுக்கு நன்மை தராத வெறும் கஞ்சியைக் குடிப்பதைப் போன்றதும் ஆகும். வினைத் தொடர்பால் காரியங்கள் செய்பவனுக்கும், வினையகலத் தவயோகம் புரியும் ஞானிக்கும் உள்ள ஒற்றுமை.**

*பரஞானம் அருளலே குரு உபதேசம் என் கூறும் திருமந்திரம் பாடல் எண் 2120*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நரரும் சுரரும் பசுபாசம் நண்ணிக்
கருமங் களாலே கழிதலில் கண்டு
குருஎன்பவன் ஞானி கோதிலன் ஆனால்
பரம்என்றால் அன்றிப் பகர்வொன்றும் இன்றே"

*மனிதர்களும் தேவர்களும் ஆகிய பசுக்கள், பந்த பாசம் அடையப் பெற்று, அதன் விளைவான வினைத் துன்பங்களில் சிக்கி வீழ்வதைக் கண்டு, குரு என்று சொல்லப்படும் நல்லாசிரியன் ஞானமார்க்கத்தைப் போதித்து நல்வழிகாட்டும் ஆசானாவான். குறை குணம் இல்லாத, நிறை ஞானம் உடையவனாக இருந்தால், சீடனைப் பார்த்து "நீ பரஞானம் பெற்றுப் பரத்தோடு ஒன்றிப் பரம் ஆகுக" என்று உபதேசிப்பதைத் தவிர, சீடனுக்கு அவன் சொல்லுவதற்கு வேறு எதுவும் இல்லை.*

*அசற்குரு (தகுதி இல்லாத குரு) பற்றிய திருமந்திரப் பாடல் எண் 2044*

"உணர்வு ஒன்றிலா மூடன்உண்மை ஓராதோன்
கணுவின்றி வேதாகம நெறி காணான்
பணிவுஒன்று இலாதோன் பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோன் அசற்குரு ஆமே"

*அற உணர்வு, இறை உணர்வு, நல்லறச் சிந்தை இல்லாதவன், அறிவில்லாத முட்டாள், உண்மையை ஆராய்ந்துணரும் திறமை இல்லாதவன், குழப்பம் இல்லாது வேதாகம சாரங்களைத் தெளிவாக அறியாதவன், பணிவுடைமை இல்லாதவன், பிறரைத் தூற்றுபவன், கீழான மன இயல்புகள் கொண்டவன் ஆகியோர் நன்னெறி அறியாத தீ நெறி போதிப்பவர் ஆவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீடர்

திருமந்திரத்தில் திருமூலநாயனார் சீடன் என்ற சொல்லால் ஞானோபதேசம் பெறும் தகுதியுடைய மாணவனையே குறிப்பிடுகின்றார். நற்குணமுடைமை, உண்மை பேசுதல், அன்பு செய்தல், விவேகமுடைமை, கருணையுடைமை, குருவின் உபதேசத்தைக் கவனமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து ஞானம் பெறவேண்டும் என அவாவுடைமை, குருவைப் பின் தொடர்தல் ஆகியவனவே நல் மாணாக்கனுக்குரிய இலக்கணங்கள் ஆகும். பக்குவனுக்குரிய இக்குணங்களை உடையவனுக்கே சற்குரு ஞானொபதேசம் செய்வார், இதை பின் வரும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் ஒன்றான அருணந்தி சிவாச்சாரியார் அருளிய "சிவஞான சித்தியார் (சுபக்கம்)" **113** ஆவது பாடல் மூலம் அறியலாம்.

" ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம், உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணி அறங்கள்"

ஒழுக்கம் முதல் அர்ச்சித்தல் வரை ஆகிய செயல்கள் இறைவனால் தரப்பட்ட குற்றமில்லாத அறங்கள் என்பதை அறிந்து செய்தால், அவை அறமாக முடியும். அவற்றைச் செய்தால் அவற்றைத் தனக்குச் செய்யும் பணியெனக் கொண்டு அவற்றிற்குரிய பயனை இறைவன் அளிப்பான்.

நல்ல சீடனுக்கு அடையாளம் இவையே எனக் கூறும் திருமந்திரம் பாடல் **1703**

" சற்குணம் வாய்மை தயாவிவேகம் தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமை
சிற்பர ஞானம் தெளியத் தெளிவுஓர்தல்
அற்புதமே தோன்றல் ஆகும் சற்சிடனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல குணம், உண்மையே பேசுதல், இரக்கம், அறிவு, பணிவு, நல்லாசிரியன் திருவடிகளே துணை என்று, நீங்காது அவரை நிழல் போல் தொடர்ந்திருத்தல், தத்துவ ஞான மெய்ப்பொருளான இறை யருளை உணர்தல், உணர்ந்ததை ஆய்ந்தறிந்து தேர்தல், அற்புத சாதனைகள் புரிதல் ஆகியவை நல்ல மாணவனுக்குரிய மேலான உயர்ந்த நல்ல குண இயல்புகளாகும்.

*பக்குவன் பற்றி கூறும் திருமந்திரம் பாடல் எண் **1690***

"தொழில் அறிவாளர் சுருதி கண்ணாக
பழுது அறியாத பரம குருவை
வழி அறிவார் நல்வழி அறிவாளர்
அழிவு அறிவார் மற்றை அல்லாதவரே"

பேரின்ப முத்தியை அடையும் சரியான வழி அறிந்து, அதனை ஆளும் வல்லமை பெற்றவர்கள், வேத ஆகம நூல்களைக் கண்போலக் கற்றுக் குறையொன்றும் இல்லாத சீடனைக் கரையேற்றும் செயல் திறம் உடைய ஆசிரியனை வழிபடும் முறை அறிந்தவர்கள், நல்வழிச் செல்லும் மார்க்கம் உணர்ந்தவர் ஆவார்கள். இதனை அறியாத மற்றவர்கள் தமக்கு வரப்போகும் அழிவை அறியாதிருப்பவர்களே ஆவர்.

*பரம்பொருள் வித்தை பக்குவர்க்கு அருளுக எனக் கூறும் பாடல் எண் **1692***

"பதைக்கின்ற போதே பரம்என்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிக்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக்கு ஈயலும் ஆமே"

இறை அருளைப் பெறத் துடிக்கும் உள்ளம் பதைபதைக்கும். அந்த நிலையிலேயே பரம்பொருள் ஞானம் என்னும் விதையை விதைக்கின்ற மூலப் பொருளை நெற்றிப் புருவ நடுவில், மேல் நோக்கிப் பார்த்து, உலக இச்சையில் நாட்டம் கொண்டு, உள்ளத்து உறுதியைக் கெடுக்கின்ற மனதை ஒருமுகப்படுத்தி, அப்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் சிந்தனையில் இலயித்து, ஒன்றி இருக்கச் செய்து, அப்பரம் பொருள் உணர்வோடு கலந்து நிற்கும் சீடர்களுக்கு உபதேசிப்பது உத்தமம் ஆகும்.

நல்ல சீடனுக்கு அடையாளம் கூறும் திருமந்திரம் பாடல் எண் ***1696***

"சாத்திக னாய்ப் பரதத்துவம் தான்உன்னி
ஆத்திக பேத நெறி தோற்றமாகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்த வல்லான் அவன் சற்சீடனாமே"

ஆரவார அலை ஓசைகள் அற்று ஆழ்கடல் அமைதியாக இருக்கின்ற மனநிலை கொண்டவனாய், பரம்பொருள் அன்றி வேறு எது பற்றியும் அறியாத தன்மையுள்ளவனாய், கடவுள் ஒருவன் உண்டென நம்பும் இறைபற்றாளர்கள் பலவாகச் சொன்னவற்றில் ஒன்றை ஏற்பவனாய், வினைப்பயனால் சேர்த்துக் கட்டப்பட்ட பிறவிகளை எண்ணிப் பயந்து, அவை எய்தாமல் தடுக்க மேலான நல்லொழுக்க நெறிவழி நின்றொழுகுபவனே நல்ல சீடனாவான்.

ஞானம் பெற நல் ஆசான் அடிபணிக எனக்கூறும் திருமந்திரம் பாடல் எண் ***1698***

"அடிவைத்து அருளுதி ஆசான் இன்றுஉன்னா
வடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட் சத்தியாலே
அடிபெற்ற ஞானத்தன் ஆசற்று உளோனே"

ஆசானே! நீங்கள் உங்கள் திருவடிகளை என் தலைமேல் வைத்து அருளுக, என்று தியானித்தவுடனேயே, குருவினுடைய திருவுருவம் தன் மனதில் பதிந்த அக்கணமே, தொடர்ந்து தோன்றி மறையும் மாயப் பிறவி காய்ந்து தீய்ந்து போகும். அருளுருவான பராசக்தியின் துணையாலே, தவஞானம் சிறக்கப் பெற்ற இவனே, குற்றம் குறையற்ற நல்ல மாணாக்கனாவான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அபக்குவன் (பக்குவம் இல்லாத மாணவன்) பற்றி திருமந்திரம் பாடல் எண் 1680*

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி விழுமாறே"

*பக்குவம் இல்லாத சீடர் (மாணவர்)* அறியாமையைப் போக்கும் நல்லாசிரியனைத் தேடிப் போகமாட்டார்கள். அறியாமையை நீக்க முடியாத ஒருவரை ஆசிரியராகக் கொண்டு அவரிடம் போவார். இப்படி அறிவு இல்லாதவரும், அறிவு புகட்ட முடியாதவரும் கூடி ஒன்று சேர்ந்து இருப்பது, குருடருக்கு வழிகாட்டக் குருடர் முற்பட்டு இருவரும் துன்பக் குழியில் விழுந்து துயருறுவதைப் போன்றதாகும்.



**இறைவன் திருத்தாண்டவம் ஆடிய தாமிர சபை அமைந்துள்ள நெல்லையப்பர் ஆலயம். திருநெல்வேலி, தமிழ்நாடு – தென் இந்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியாகாரம்

மனதை அடக்கி உள்ளத்திற்குள்ளே இருக்கும் இறைவனை உணரும் பயிற்சியே பிரத்தியாகாரம். இக்கருத்தை திருமூலநாயனார் திருமந்திரம் பாடல் எண் 578

"கண்டுகண்டு உள்ளே கருத்துற வாங்கிடில்
கொண்டுகொண்டு உள்ளே குணம்பல காணலாம்
பண்டுஉகந்து எங்கும் பழமறை தேடியை
இன்றுகண்டு இங்கே இருக்கலும் ஆமே."

மனமானது ஒரு நிலையில் இருப்பதில்லை. அலைந்து கொண்டிருக்கிறது. மரத்துக்கு மரம் தாவும் குரங்கைப் போல. வெளியே அலையும் மனத்தை உள்ளே உணர்வோடு பொருந்தி இருக்கச் செய்தால், பல நன்மைகள் உண்டாவதை அறிய இயலும். காலம் காலமாகக் காண விரும்பி, பழைமையான வேதங்கள் தேடியடைந்த பரம்பொருளை இங்கே இப்பொழுது, உங்களுக்கு உள்ளேயே இருப்பதைக் கண்டறிதல் கூடும். மனதை அடக்க உதவும் பிரத்தியாகாரப் பயிற்சியால் உள்ளத்துள்ளே இறைவன் இருப்பதை உணர இயலும் என்பது கருத்து.

பெருமை மிகு பிரத்தியாகாரம் எனக்கூறும் திருமந்திரம் பாடல் எண் 585

"ஒருக்கால் உபாபதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்து உணர்வந்த உபாபதிப் பிரிவைக்
கரைத்துஉணர்வு உள்ளல் கரைதல்உள் நோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே"

ஒளி வடிவான பரம்பொருளை அறிய ஒண்ணாது சீவன்களை மாயை தடுக்கிறது. இந்த மாயையைப் பிரித்து அறியச் சிவப் பரம்பொருளை நெஞ்சில் நினைத்து, உணர்வில் கலந்து, உள்ளம் உருக, மனத்துக்குள் எண்ணித் தியானித்தலே (உள் நோக்கலே) பிரத்தியாகாரப் பயிற்சியின் பெருமைக்குரிய பயனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ நிலை தரும் பிரத்தியாகாரம் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 587

" குறிப்பினின் உள்ளே குவலயம் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கி விகிர்தனை நாடும்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென்று உணரில்
அறிப்புறு காட்சி அமரரும் ஆமே"

மூச்சை இழுத்து குறித்து நிறுத்துவதாகிய பிரத்தியாகாரத்தில் உலகம் முழுவதையுமே அகக் கண் கொண்டு காணலாம். அந்த நிலையில் மனம் பகைமை, வெறுப்பு என்னும் அந்தகார இருட் சிந்தனைகளை விட்டொழித்து, இறையருளில் ஈடுபட்டு, பரம்பொருளைத் தேடி அடையும். இத்தகைய மேலான மன நிலையில் மனம் உணர்வோடு ஒன்றிக் கலந்து இறுகப் பற்றிக் கொண்டால், சிவஞான சித்தியாக அருங்காட்சி கண்டு ஆன்மாக்கள் அழிவில்லாத அமர நிலை எய்தும்.

பிரத்தியாகாரப் பயிற்சியின் மூலம் பரமானந்தம் அடையலாம் எனக்கூறும் திருமந்திரம் பாடல் எண் 582

" சோதி இரேசைச் சுடரொளி தோன்றிடில்
கோதில் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலவொளி எய்தினால்
ஓதிய உன்னுடல் உன்மத்தம் ஆமே"

பிரத்தியாகாரப் பயிற்சியில் இரு மின்னல் போல ஒளி இரேகை தோன்றக் கண்டால், அது மேலான பரமானந்த நிலை என்று குறித்துக் கொள்க. நேரான கழுத்துப் பகுதியில் நிலவின் ஒளியைப் போலத் தோற்றம் காணப் பெற்றால், தியானப் பயிற்சியில் ஈடுபட்ட உன்னுடைய உடம்பு ஆனந்தப் பரவச நிலை அடையும்.

பிரத்தியாகாரப் பயிற்சி மூலம் காலத்தை வெல்லலாம் எனக் கூறுத் திருமந்திரம் பாடல் எண் 583



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூலத் துவாரத்தை முக்காரம் விட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லும் கருத்துஇது தானே"

மூலாதாரத்தை மூச்சு அடக்கிக் கொண்டிரு. மேல் உச்சித் தலைத் துளையாகிய பிரம்மாந்திரத்தில் மேல் மனதைப் பதித்திரு. வேல் போன்ற கண்களை புறத்தே திரிய விடாது அகத்தே சித்தவெளியில் இலயிக்க விடு. காலத்தை வென்று வாழும், காலத்தால் அழியாத கருத்து இதுவே ஆகும்.

இதயத்தில் இறைவன் இருக்கின்றான் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 586

"புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணம்
திறப்பட்டு நிச்சயம் சேர்ந்துடன் நின்றால்
உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே"

வெளிப்போன வாயுவை மீண்டும் உள்ளே புகமுடியாதபடி தடுத்து, அது முழுமையாக உள்ளே உணர்வோடு ஒன்றியிருந்தால், அங்கே அந்த நிலையில் உள்ளமும் வலுப்பெற்று இருக்கும். இப்படி வலுப் பெற்ற உள்ளத்தை விட்டுப் பேர்ருளாளனான பரம்பொருள் விலகிப் போகான்.

மூலாதாரத்தில் மூண்டெழும் சோதி எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 580

"மூலத்து இருவிரல் மேலுக்கு முன்நின்ற
பாலித்த யோனிக்கு இருவிரல் கீழ்நின்ற
கோலித்த குண்டலி உள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரல் கீழதே"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரத்திற்கு இரண்டு விரல் அளவு மேலே, முன் பக்கம் உள்ள குறி உறுப்புக்கு இரண்டு விரல் அளவு கீழே, வட்டமிட்டுக் குண்டலினியில் எழுகின்ற அழகிய சிவந்த சோதி ஒளியானது மண்ணுலகில் வாழும் மக்களுக்கு உந்திக் கமலத்திற்கு நான்கு விரல் அளவு கீழே இருக்கின்றது.

"ஓம்" எனும் மந்திரம் உணர்த்தும் ஈசனை எனக் கூறும் திருமந்திரம் பாடல் 579

"நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண்டு ஈசன் குடிபுகுந் தானே"

கொப்பூழ் (உந்திச் சுழி) இற்குக் கீழ் பன்னிரண்டு அங்குல தூரத்தில் உள்ள மூலாதாரத்தில் நிலை நிறுத்திச் சொல்லப்பட வேண்டிய மந்திர (ஓம்) மொழியைப் பலரும் அறியாதிருக்கின்றனர். இம்மந்திரத்தை அறிந்து கொண்டு விட்டால், குதி போட்டுக் கொண்டு இறைவன் ஓடி வந்து அங்கே (அப்படி நிலைநிறுத்துபவர் சிந்தையில்) குடி கொள்வான்.



இறைவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடிய
இரத்தினசபை அமைந்துள்ள
வடாரண்யேசுவரர் ஆலயம் திருவாலங்காடு
தமிழ்நாடு - தென் இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரணை

தாரணை என்பது சீவான்மாக்கள் பரம்பொருளோடு கலப்பதற்காகச் செய்யப்படும் பயிற்சியாகும். இக்கருத்தைக் கூறும் திருமூல நாயனாரின் திருமந்திரம் பாடல் எண் 597

"அரித்த உடலை ஐம்பூதத்தில் வைத்துப்
பொருத்த ஐம்பூதம் சத்தாதியில் போந்து
தெரிந்த மனாதிசத் தாதியில் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே"

இச்சைகள் ஆசைகள் அரித்துத் தின்கின்ற இந்த உடம்பை, நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம் என்ற ஐம்பூதச் சேர்க்கையால் உண்டாக வைத்து, பொருந்திய ஐம்பூதங்கள் சத்தம், நாதம் முதலானவற்றில் அடங்கி, மனம் முதலிய கரணங்களும் சத்தத்தில் சங்கமிக்க சீவான்மாக்கள் பரம்பொருளோடு ஒன்றிக் கலந்திருப்பதே தாரணைப் பயிற்சி ஆகும்.

தாரணைப் பயிற்சியை மேற்கொள்ளும் முறையை கூறும் திருமந்திரம் பாடல் எண் 588

"கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத் தண்டூடே வெளிஉறத் தான்நோக்கிக்
காணாக்கண் கேளாச் செவிஎன்று இருப்பார்க்கு
வாழ்நாள் அடைக்கும் வழிஅது வாமே"

தடுமாற்றம் இல்லாது, உறுதியாக ஒன்றில் நிற்கும் மனம். கீழ் நோக்கிச் செல்லாது தடுத்து, தியானமான குறிக்கோளை மனதில் கொண்டு, நடு நாடி வழியாகச் செல்லும் பிராணனை மனம் கொண்டு, கண்கள் வெளிப்பார்வை பார்க்காமலும், காதுகள் வெளிப்புற ஓசைகளைக் கேட்காமலும் அடங்கி இருப்பவர்களுக்கு, அப்படி இருப்பதே வாழ்நாளாகிய ஆயுள் அழியாமல் இருக்க அழிவைத் தடுத்து நிறுத்தப் போடும் கல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாரணைப் பயிற்சியால் கிழவனும் குமரன் ஆவான் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 590*

"மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே"

*மூலாதாரத்தில் எழுகின்ற குண்டலினியான கிரியாசக்தியை தாரணைப் பயிற்சியால் உயிர்ப்பித்து தலையில் உள்ள சிற்சக்தி யுடன் (இச்சா சக்தி) சேரச் செய்தால் வயதான கிழவனும் குமரன் ஆவான். இதை நீ பார்த்துக்கொள். இது நந்திபெருமானின் கட்டளை ஆகும்.*

*தாரணைப் பயிற்சியால் உலகம் உள்ள வரை வாழலாம் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 591*

"கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுஉள் இருத்தி
மடைவாயில் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்கு
உடையாமல் ஊழி இருக்கலும் ஆமே"

*மூலாதாரத்தை அடைத்துப் பிராணவாயுவால் குண்டலினி சக்தியை மேல் எழச்செய்து, நடு இடமாகிய சுழுமுனையில் நிற்கச் செய்து, நீர் ஓடு மடை முகத்தில் ஓடி வரும் மீனுக்குக் காத்திருக்கும் கொக்கைப் போல் வணங்கி இருப்பவர், உடம்பு அழியாமல் உலக முடிவு வரை வாழ்ந்திருக்கவும் கூடும்.*

*தாரணைப் பயிற்சியால் உயிர் அழியாது நிலைத்து நிற்கும் எனக் கூறும் திருமந்திரம் பாடல் 592*

"கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்த உயிரது காலின் நெருக்கம்
கலந்த உயிரது காலது கட்டில்
கலந்த உயிருடன் காலமும் நிற்குமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலோடு கலந்துள்ள உயிரின் வாழ்நாள் பற்றி அறிய முயலு வோமானால், உடலோடு கலந்த உயிரின் கால எல்லை அதை இயக்கும் மூச்சுக் காற்றின் ஆற்றலைப் பொறுத்து அமைந்தது என்பதை உணரலாம். எனவே உயிரோடு பிராணன் இயக்கத்தைப் பிணைத்துக் கட்டி விட்டால் உயிர் கால காலத்திற்கும் அழியாது நிலைத்து நிற்கும்.

தாரணைப் பயிற்சியால் அங்கும் இங்கும் தாவும் மனம் என்னும் குரங்கை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 595

" நிரம்பிய ஈர்ஐந்தில் ஐந்தவை போனால்
இரங்கி விழித்திருந்து என்செய்வை பேதாய்
வரம்பினுள் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் கோட்டை பொதியலும் ஆமே"

மனித உடம்புக்குள் நிரப்பி வைக்கப்பட்டுள்ள பத்து (உயிர்க் காற்று, மலக் காற்று, தொழில் காற்று, ஒலிக் காற்று, நிரவுக் காற்று, தும்மல் காற்று, விழிக் காற்று, கொட்டாவிக் காற்று, இமைக் காற்று, வீங்கற் காற்று) காற்றுக்களும் ஞானேந்திரியங்களாலும், கன்மேந் திரியங்களாலும் இயக்கப்படுபவை. இவற்றில் ஞானேந்திரியங்கள் ஐந்தும் நீங்கினால், அதற்காக நீ இங்கே வருந்தி அழுது என்ன பயன்? பேதையே! இந்த இந்திரியங்களைக் கடந்து நிற்பவர்களுக்கு மன மாகிய குரங்கை, உடம்பாகிய கோட்டைக்குள்ளே அடங்கி இருக்கச் செய்யவும் இயலும்.

தாரணைப் பயிற்சியால் உந்த உடம்பில் பல காலம் வாழலாம் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 594

" வாழலு மாம்பல காலும் மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறப்படாப் பாய்ச்சுறில்
ஏழுசாலேகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி அறையிலே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிருந்து கிழம்பி நாடி நரம்புகளை ஊடுருவிச் செல்லுகின்ற மூச்சுக் காற்றை வெளிப் போகாதவாறு தடுத்து நிறுத்தினால், ஏழு சாளரங்கள் (காதுத் துளை இரண்டு, கண்கள் இரண்டு, மூக்குத் துவாரம் இரண்டு, வாய் ஒன்று), இரண்டு பெரிய வாசல்கள் (கருவாய், மலவாய்) கொண்ட இந்த உடம்பாகிய பெரிய கோயிலின் பள்ளி அறையிலே பல காலம் வாழலாம்.



அட்ட (எட்டு) வீரட்டத் தலங்களின் ஒன்றான (நீர் – மன்மதனை எரித்த தலம்
வீரட்டேஸ்வரர் ஆலயம், கொருக்கை – நாகபட்டினம் – தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியானம்

*தியானம் என்பது உணர்வும் நினைவும் ஒன்றி இருக்கின்ற நிலையாகும்.*

*திருமூல நாயனார் திருமந்திரத்தில் தியானம் பற்றிக் கூறும் பாடல் எண் 598*

"வரும்ஆதி ஈரெட்டுடன் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்தியானம் உன்னும்
குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே"

*முன்னே தாரணையில் கூறிய ஐம்புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி), ஐம்பூதங்கள் (நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்), நான்கு அந்தக்கரணங்கள் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்), மாயை, உயிர் ஆகிய பதினாறில் படிந்து தியானம் (உணர்வும், நினைவும் ஒன்றி இருக்கின்ற நிலை), மெய்யாகிய புத்தி புலன்களில் வைத்த பற்றுதல் நீக்கி இருப்பதாகும். இதில் உருவோடு கூடிய சக்தியைத் தியானித்தல் பரத் தியானம் ஆகும். ஞான நல்லாசிரியனாம் சிவனை எண்ணித் தியானித்தல் சிவத் தியானம் ஆகும். இவை தவயோகத்தின் இரு வகைகளாகும்.*

*திருமந்திரம் பாடல் எண் 599*

"கண்நாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துள்
பண்ணாக்கி நின்ற பரம்பொருள் ஒன்றுஉண்டு
அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே"

*கண், நாக்கு, மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியங்கள் கூடியிருக்கும் உடம்புக்குள் ஓசை ஒலி வடிவமாக நின்ற பரம்பொருள் ஒன்று இருக்கின்றது. தலையின் உச்சியில் வாயின் மேல் பகுதியில் (வாயின் நாக்குக்கு மேலே உள்ள துளை) அகண்ட ஒளியான சோதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவைக் காட்டி, வருத்தி அதாவது பிறந்து இறக்கச் செய்து, நம்மைப் பிழைத்திருக்கச் (உயிர்க்கு உய்வளித்தல்) செய்வது தியானம் ஆகும்.

திருமந்திரம் பாடல் எண் 606

"மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்துஎழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க்கு அல்லது பார்க்கஒண் ணாதே"

மாணிக்க மணி, மாகடல், யானை, இனிய புல்லாங்குழல், கார்மேகம், அழகிய வண்டு, சிறு தும்பி, சங்கு, பேரிகை, யாழ் இவை யெல்லாம் இனிய மெல்லியதான, இசை ஒலியை எழுப்புகின்ற பத்தாகும். இந்தப் பத்தும் எழுப்புகின்ற மெல்லிய ஓசை தியானத்தில் ஆழ்ந்திருப்பவர்களுக்கே அல்லாமல் மற்றவர்களால் கேட்டுணர முடியாததாகும். (தியான நிலையில் இந்த மெல்லோசை காதில் ரீங்காரமிடும் என்பது பொருள்)

திருமந்திரப் பாடல் எண் 600

"ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்துஅங்கு இருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் டிடஓடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலும் ஆமே"

கண்களின் புருவ மத்தியில் உள்ள ஒளியை அகக்கண் கொண் டறிந்து, அதனோடு கூடிக் கலந்திருந்தால் வானுலக ஆகாய கங்கை, அமுத வெள்ளப் பெருக்கு, சித்தாகாசத்தில் பெருகிப் பாயும். அப்படிப் பாய்கின்ற அந்த மனவெளியில், கை கொண்டோ கருவி களாலோ செய்யப்படாது தானே உருவான சுயம்புவான சோதிப் பரம்பொருளைக் காணலும் கூடும்.

திருமந்திரப் பாடல் எண் 601



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருபொழுது உன்னார் உடலோடு உயிரை
ஒருபொழுது உன்னார் உயிருள் சிவனை
ஒருபொழுது உன்னார் சிவன்உறை சிந்தையை
ஒருபொழுது உன்னார் சந்திரப் பூவையே"

ஒருபோதும் உடலோடு உயிர் கலந்திருப்பதை உணரமாட்டார்கள். ஒருபோதும் உடலோடு கலந்த அந்த உயிருக்குள் சிவன் இருப்பதை அறியமாட்டார்கள். ஒருபோதும் அந்தச் சிவப் பரம் பொருள் சிந்தையில் குடிகொண்டிருப்பதை நினைக்கவும் மாட்டார்கள். ஒருபோதும் சித்தாகாசத்தில் மலரும் வெண்ணிலாப் போல விரிகின்ற தாமரை மலரையும் (சந்திர மண்டலத்தில் விளங்கும் சக்தி என்றும் பொருள் கூறுவர்) தரிசிக்க மனம் பொருந்தவும் மாட்டார்கள்.

*திருமந்திரப் பாடல் எண் 602*

"மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்கும் திரிஒக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே"

உள் மனதில் ஒரு சுடர் ஒளி விட்டுக் கொண்டே இருக்கிறது. அந்த மன விளக்கினை ஒளி நன்கு பரவிப் பெருகத் தூண்டி மேலேற்றி, சினமாகிய கோப நெருப்பைக் குன்றச் (குறைத்து, அணையச்) செய்து, எல்லாவற்றையும் விளக்கும், ஒளிபெறச் செய்யும், சுழுமுனையாகிய திரியைத் தூண்டிவிட, மனத்துக்குள் விளக்கமுறும் விளக்கொளியானது, மங்காத, அணையாத, மறையாத விளக்காகும், சோதிச் சுடராகும்.

*திருமந்திரப் பாடல் எண் 603*

"எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டறிவார் இல்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணாயிரம் ஆண்டு காலம் தவயோகம் புரிந்தாலும், கண்டே பான்றவனை, உண்ணத் தெவிட்டாத அமுதினைப் போன்றவனைக் கண்கொண்டு கண்டறிந்தவர்கள் யாரும் இல்லை. ஆனால் சுழுமுனை நாடி உள்ளே ஒளிவடிவாக இருப்பவனை, அகக்கண் கொண்டு பார்த்தால், அப்பரம்பொருள் கண்ணாடியில் காண்பதைப் போல கண்ணுக்குள் காணக் கலந்து நிற்பான்.

திருமந்திரப் பாடல் எண் 604

"நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவன் அவனாமே"

இரண்டு கண்களின் பார்வையையும் புருவ மத்தியில் பொருந்தச் செய்தால், உடலுக்குத் தளர்வும் இல்லை, உடம்புக்கு அழிவும் இல்லை. ஒரு நிலையில் நிற்காது மனம் தறிகெட்டு ஓடுவதும் இல்லை. உணர்ந்தறியும் நிலையும் இருக்காது. தான் என்ற ஆணவம் இல்லாது போகும். விருப்பமும், இச்சையும் தேடுதலும் இல்லை. இந்த நிலையில் சீவனே சிவனாகும்.

திருமந்திரப் பாடல் எண் 605

"நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்டு
உயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்
துயர்அற நாடியே தூங்க வல்லார்க்குப்
பயன்இது காயம் பயம்இல்லை தானே"

இரண்டு கண்களையும் மூக்கின் நுனியில் பொருத்திப் பார்த்து, உயருகின்ற தாழ்வடையாத பிராணக் காற்றை உள்ளே அடக்கி, துன்பம் தருவதாகிய மன மயக்கங்களை நீக்கித் தியான நிலை பெற, உணர்வொன்றித் தூக்க நிலையில் யோக நித்திரையில் நிலைப்ப வர்க்கு பிறவி எடுத்த பலன் இதுவே ஆகும். அப்படிப்பட்ட வர்களுக்குப் பிறவித் துயரும், மரண பயமும் இல்லையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலய
நவராத்திரிக் கொலு மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக அமையவிருக்கும் அருள்மிகு இலண்டன்
முத்துமாரி அம்மன் ஆலயம்

Printing By : Guru Printers, Thirunelvely, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org